
MARCH 2023



# CURRENT ISSUES

- தற்கால இந்திய வரலாறு
- சமூகப் பிரச்சனைகள்
- இந்திய அரசியலமைப்பு
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- தமிழ் சமூகம்
- புவியியல்
- சுற்றுச்சூழல்
- இந்தியப் பொருளாதாரம்

# TNPSC GROUP-I MAINS


SURESH' IAS ACADEMY

| தூத்துக்குடி | திருநெல்வேலி | இராமநாதபுரம் | மதுரை | சென்னை |
|---|---|---|---|---|
| 162-A, எட்டையபுரம் ரோடு | 8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை | 82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில் | மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல் | 4, அண்ணா ஆர்ச் நேர் எதிரில், Skywalk அருகில். |
| 0461 - 4000970<br>99445 11344 | 0462 - 2560123<br>98942 41422 | 75503 52916<br>75503 52917 | 0452 - 2383777<br>98431 10566 | 044 47665919<br>97555 52003 |

SURESH' IAS ACADEMY

# March Month Current Affairs 2023

## பொருளடக்கம்

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|


### 1. தற்கால இந்திய வரலாறு மற்றும் இந்திய பண்பாடு

- அகிம்சையின் ஆற்றல் .................... 06
- ஆஸ்கர் விருது பெற்ற இரண்டு இந்தியர்கள் .................... 06
- சர்வதேச புக்கர் விருது பரிந்துரைப் பட்டியலில் பெருமாள் முருகனின் பூக்குழி .................... 07
- சரஸ்வதி சம்மான் விருது .................... 08
- பத்ம விருது .................... 08
- பகத்சிங், சுகதேவ், ராஜகுரு .................... 08
- தோள்சீலைப் புரட்சி .................... 09
- வைக்கம் போராட்டம் .................... 10
- திருநெல்வேலி எழுச்சி .................... 11

### 2. இந்திய மற்றும் தமிழ்நாட்டிலுள்ள சமூகப் பிரச்சனைகள்

- கட்டாய நுழைவுத் தேர்வு .................... 13
- ஒடிஸா பழங்குடியினரின் வாழ்வாதாரமாகும் ‘ஸ்ட்ராபெரி!’ .................... 13
- குறைதீர்வு தீர்ப்பாய குழுக்கள் .................... 15
- 100 நாள் வேலைத்திட்டம் .................... 15
- பெண்களின் பங்களிப்பு கூட்டும் .................... 16
- மக்கள்தொகை தாமதம் தகாது! .................... 17
- பெண்மையை போற்றுவோம்... உரிமைகள் வந்த வழி! .................... 18
- 20% நாடுகளில் மட்டுமே பாலியல் கல்விக்கான சட்டங்கள் .................... 19
- தமிழகத்தில் பொன்விழா காணும் பெண் போலீஸ் .................... 19

- பிளம் விகாஸ் ........ 20
- பெண்களுக்கு சமகட்ட உரிமைகள் கிடைக்க 50 ஆண்டுகள் ஆகலாம் ........ 20
- தொழில் வளர்ச்சி சரி; தொழிலாளர் மேம்பாடு ........ 21
- எழுத்தறிவு விகிதம் : கடைசி இடத்தில் பிகார் ........ 22
- மகளிர் மேம்பாடும் அரசின் திட்டங்களும் ........ 22
- ஊட்டச்சத்துச் சமமின்மை ........ 22
- பெண் காவலர் நலனுக்காக 9 அறிவிப்புகள் ........ 23
- தளர்ச்சியடையும் வேலைத்திட்டம் ........ 23
- மாநில கல்விக் கொள்கைக் குழு ........ 24
- மகளிர் தினமும் போராட்டங்களும் ........ 25
- மாதவிடாய் விடுப்பு ........ 25
- ஜல்சக்தி ........ 27
- ராஜஸ்தானில் அமலான சுகாதார உரிமை ........ 27

## 3. இந்திய அரசியலமைப்பு

- அமைச்சரவை பரிந்துரைக்கும் முடிவை கவர்னர் ஏற்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட் ........ 28
- தேர்தல் ஆணையரை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் ........ 28
- மாநில மொழியில் தீர்ப்பு ........ 29
- ஆளுநர்கள் சர்ச்சை ........ 29
- தேர்தல் ஆணையர் நியமனம் ........ 30
- 80 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி ........ 31
- ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் ........ 31
- தேர்தல் ஆணையர் நியமன முறையில் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் ........ 32
- ஆயுத இறக்குமதியில் இந்தியாவுக்கு முதலிடம் ........ 34
- இந்தியா – ஆஸ்திரேலியா ........ 34
- வெளிநாட்டு வக்கீல்கள் நம் நாட்டில் சட்ட பணிகள் செய்ய ஒப்புதல் ........ 35
- நுகர்வோர் உரிமைகள் ........ 36

- எத்தனால், எரிவாயு, ஜவுளி கொள்கைகள் ........ 36
- இந்தியா ஜப்பான் நல்லுறவு ........ 37
- உலகின் மகிழ்ச்சியான நாடு – பின்லாந்து ........ 38
- மரண தண்டனையை நிறைவேற்ற மாற்று வழிகளை ஆராயலாம் ........ 38
- தேசிய கட்சி அங்கீகாரம் ........ 38
- 2 ஆண்டுகள் சிறை தண்டனை ........ 38
- மரணதண்டனை தேவையா? தேவையில்லாயா? ........ 40

## 4. இந்திய வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்தியாவின் மூன்றாவது நிலவு பயணம் ........ 41
- புரோட்டான் பீன் சிகிச்சை (PBT) ........ 41
- இந்தியாவும், ஏவுகணைகளும் ........ 42
- நானோ திரவ ஏடிபி உரம் ........ 42
- இன்ஃப்ளுயன்ஸா ஏ வகை வைரஸ் ........ 42
- முற்றிலும் சூரியமின்சக்தியை பயன்படுத்தும் ஒடிஸா கிராமம்! ........ 43
- நிஸார் செயற்கைக்கோள் : இஸ்ரோவிடம் அமெரிக்கா ஒப்படைப்பு ........ 43
- முடிவுக்கு வருமா கொசுத்தொல்லை? ........ 43
- பிரம்மோஸ் ஏவுகணை ........ 44
- சீன எல்லையில் பசுமை ஹைட்ரஜன் எரிசக்தி ஆலை ........ 45
- காசநோய் இல்லா இந்தியா ........ 46
- இஸ்ரோவின் எல்விஎம்–3 ........ 47
- செறிவூட்டப்பட்ட அரிசி ........ 47
- விண்வெளியில் வெள்ளி விழா ........ 48

## 5. தமிழ் சமூகம் அதன் பண்பாடு மற்றும் பாரம்பரியம்

- பிறமொழி கலப்பின்றிப் பேசுவோம்! ........ 50
- தொல்லியல் அதிசயம் ........ 51
- நகர நாகரிகத்துடன் வாழ்ந்த பழந்தமிழ் சமூகம் ........ 51
- கீழடி அருங்காட்சியகம் ........ 52
- கீழடி : துலங்கும் தமிழ் வரலாறு! ........ 53
- தேசிய கலாச்சார பல்கலைக்கழகம் ........ 54

### 6. புவியியல்

- பருவம் படுத்தும் பாடு ........ 55
- இந்தியாவில் லித்தியம் ........ 55
- கடல்நீர்மட்டம் உயர்வு ........ 56
- போபால விஷவாயு கசிவு வழக்கு ........ 57
- உணவுப் பாதுகாப்பு : சிறுதானியங்கள் ........ 57
- நீர்ப்பற்றாக்குறை : நிரந்தரத் தீர்வு ........ 57
- தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை ........ 58

### 7. சுற்றுச்சூழல், உயிரினப்பன்மை மற்றும் பேரிடர் மேலாண்மை

- இந்தியாவில் அதிகரித்து வரும் புலிகள் ........ 59
- பல்லுயிர் அருங்காட்சியகம் ........ 59
- ருஷிகுல்யா மணல் ஆலிவ் ரிட்லிகளால் நிரம்பியுள்ளது ........ 60
- தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக்குழு ........ 60
- இயற்கை வேளாண்மை ........ 61
- பெரியார் பெயரில் புதிதாக வனவிலங்கு சரணாலயம் ........ 63
- பி.வி.சதீஷ் : சிறுதானியங்களின் மீது கவனத்தை திருப்பிய முன்னோடி ........ 63
- காலநிலை மாற்றம் ........ 64

### 8. இந்தியப் பொருளாதாரம்

- ஏர் இந்தியாவின் மாபெரும் ஒப்பந்தம் ........ 66
- பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் வருகிறது கிரிப்டோ பரிவர்த்தனை ........ 67
- இந்தியா – ஆஸ்திரேலியா 4 ஒப்பந்தங்கள் ........ 67
- இந்தியாவும் கச்சா எண்ணெய் இறக்குமதியும் ........ 67
- வேளாண் நிதிநிலை அறிக்கை ........ 68
- தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை – 2023 ........ 69
- தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2023–24 ........ 71
- தமிழக பட்ஜெட் 2023 – 2024 ........ 72
- தமிழக வேளாண் பட்ஜெட் 2023 – 24 ........ 73
- ரூபாயில் வர்த்தகம் செய்ய 18 நாடுகளுக்கு... ........ 74
- விருதுநகரில் மெகா ஜவுளி பூங்கா ........ 74

# 01 தற்கால இந்திய வரலாறு

## அகிம்சையின் ஆற்றல்

### பதினொரு விரதம்

- போரில் வெற்றி பெற ஆங்கிலேயர் ஆயுதப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தபொழுது, காந்திஜியோ தன்னுடைய ஆசிரமத்தில் போராளிகளைத் தங்க வைத்து பதினொரு விரதங்களில் உறுதியெடுக்கப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

1. சத்தியம்
2. அகிம்சை
3. திருடாமை
4. பொருள் சேர்த்து வைக்காதிருத்தல்
5. உடல் உழைப்பின் மூலம் உணவைத் தேடுதல்
6. பிறர் உழைப்பை மதிக்கும் சுதேசிப் பண்பாடு
7. அஞ்சாமை
8. தீண்டாமை உணர்வை அகற்றுதல்
9. சமய நல்லிணக்கம்
10. புலன்களை அடக்குதல்
11. பிரம்மசரியம்

- ஆகிய பதினொரு விரதங்களை மேற்கொள்ள வைத்து சத்யாகிரகிகளைப் புடமிட்டுக் கொண்டிருந்தார்.
- 1930 மார்ச் 11-ஆம் நாள் ஆசிரமத்தில் உள்ளவர்களோடு, பொதுமக்களும் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.
- நாடு விடுதலை பெறும் வரை தான் சபர்மதி ஆசிரமம் திரும்பப் போவதில்லை என்று அப்போது காந்திஜி அறிவித்தார்.

### தண்டி யாத்திரை

- மார்ச் 12-ஆம் நாள் காலை யாத்திரை தொடங்கியது. தன்னுடன் போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் யார் யார் என காவல்துறையினர் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக அவர்களைப் பற்றிய விவரங்களை காந்தி தன்னுடைய 'யங் இந்தியா' பத்திரிக்கையில் வெளியிட்டார்.
- இருநூற்று நாற்பத்தொரு மைல் தூரத்தை தினமும் பத்திலிருந்து பதினைந்து மைல் வீதம் இருபத்து நான்கு நாட்கள் நடந்து தண்டியை அடைந்ததன் மூலம் லட்சக்கணக்கான மக்களை நேரில் சந்தித்து எழுச்சியை உருவாக்கினார்.
- களி மண்ணிலிருந்து வீரர்களை உருவாக்கும் திறன் படைத்தவர் காந்தி என்று கோபால கிருஷ்ண கோகலே கூறியது முற்றிலும் உண்மை.
- ஆறாம் தேதி காலை காந்தி கடலில் குளித்துவிட்டு, கடற்கரையில் படிந்திருந்த உப்பை கையால் எடுத்தார். அந்த உப்பு ரூபாய் 1,600-க்கு ஏலத்தில் விலை போனது.
- அப்போது காந்தி மக்களுக்கு விடுத்த செய்தி, 'எல்லோரும் உப்பைத் தயாரிக்கத் தொடங்குங்கள். கிராமவாசிகளுக்கும் அந்த முறையைக் கற்றுக் கொடுங்கள். அவர்கள் இந்த செயலுக்காக கைது செய்யப்படலாம் என்பதையும், இது ரகசியமாக செய்யப்படுவது அல்ல என்பதையும் கிராம மக்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும்' என்பதுதான்.

## ஆஸ்கர் விருது பெற்ற இரண்டு இந்தியர்கள்

### ஆஸ்கர்

- உலகளாவிய திரைப்படத் துறைக்கான கலை மற்றும் தொழில்நுட்பத் தகுதிக்கான விருதுகள் ஆகும்.
- அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ் மூலம் ஆண்டுதோறும் வழங்கப்படும்.
- லாஸ் ஏஞ்சல்ஸ் வைத்து வழங்கப்-படுகிறது. (டால்பி ஸ்டுடியோ)
- 1929 இல் இருந்து வழங்கப்படுகிறது.

### ஆஸ்கர் – 2023

- அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 95வது ஆஸ்கர் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.
- எவ்ரிதிங் எவ்ரிவேர் ஆல் அட் ஒன்ஸ்' என்ற திரைப்படம் 7 ஆஸ்கர் விருதுகளை தட்டிச் சென்றது.
- சிறந்த இயக்குநர், சிறந்த அசல்
- திரைக்கதை சிறந்த திரைப்படம், சிறந்த நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த குணச்சத்திர நடிகர், சிறந்த படத்தொகுப்பு என்ற பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டது.
- ஆல் கொயட் ஆன் தி வெஸ்டர்ன் ஃபிரன்ட்' என்ற படத்திற்கு 4 விருதுகளும் 'திவேல்' என்ற படத்திற்கு 2 விருதுகளும் வழங்கப்பட்டது.
- சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்ற மிச்செல் யோ ஆஸ்கர் விருகை பெற்ற முதல் ஆசிய பெண் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

### 2023 ஆஸ்கர் விருது பெற்ற இந்தியர்கள் : சிறந்த பாடல்

- ஆர் ஆர் ஆர்' திரைப்படத்தில் இடம்பெற்ற நாட்டு நாட்டு பாடல் சிறந்த ஒரிஜினல் பாடல் பிரிவில் ஆஸ்கர் விருதினை பெற்றுள்ளது.
- இப்பாடல் ஏற்கெனவே 'கோல்டன் குளோப்' விருதை பெற்றுள்ளது.
- இப்பாடலுக்காக இசையமைப்பாளர் 'கீரவாணி' பாடலாசிரியர் 'சந்திரபோஸ்' - க்கு வழங்கப்பட்டது.
- இதன் மூலம் ஆஸ்கர் விருதை வென்ற 2வது இந்திய இசையமைப்பாளர் என்ற பெருமையை கீரவாணி பெற்றுள்ளார்.

### சிறந்த ஆவணக் குறும்படம்

- யானைகளை பராமரிக்கும் தமிழகத்தின் முதுமலை தம்பதிகள் பற்றிய 'தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்' என்ற ஆவணக் குறும்படத்திற்கு வழங்கப்பட்டது.
- தமிழகத்தின் முதுமலையின் யானைகளை பராமரிக்கும் தம்பதிகளான பொம்மன் - பெள்ளி குறித்த படம்
- நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள ஆசியாவின் பெரிய வளர்ப்பு யானைகள் முகாமான தெப்பக்காட்டில் யானை பராமரிப்பாளர்களாக பணிபுரிகின்றனர்.
- காட்டு நாயக்கர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் பொம்மனும், பெள்ளியும்.
- தாயைப் பிரிந்து தவித்த 2 யானைக்-குட்டிகளை பராமரிக்கும் பழங்குடி தம்பதியின் கதை.
- இப்படத்தை உதகையை சேர்ந்த 'கார்த்திகி கான்சால்வ்ஸ்' இயக்கியுள்ளார்.
- குனீத் மோங்கா தயாரித்துள்ளார்.

### இந்தியாவில் இதுவரை ஆஸ்கர் விருது பெற்றவர்கள்

- ஆஸ்கர் விருதை வென்ற முதல் இந்தியர், என்ற பெருமையை பானு அத்தையா பெற்றார்.
- 1982 ஆம் ஆண்டு வெளிவந்த 'காந்தி' திரைப்படத்திற்காக சிறந்த ஆடை வடிவமைப்பிற்கான விருதைப் பெற்றார்.
- சத்யஜித் ரே, 20 ம் நூற்றாண்டின் தலைசிறந்த திரைப்பட இயக்குனர்களில் ஒருவர். 1992-ல் வாழ்நாள் சாதனைக்கான ஆஸ்கர் விருதைப் பெற்ற முதல் இந்தியத் திரைப்பட இயக்குனர் இவர்தான்.
- பின்னர் 2009 ஆம் ஆண்டில் ஸ்லம்டாக் மில்லியனர் படத்துக்காக ஏ.ஆர்.ரஹ்மான், ஜெய் ஹோ பாடலுக்காக சிறந்த ஒரிஜினல் பாடல், மற்றும் ஒரிஜினல் இசைக்காக 2 விருதுகளை வென்றார்.
- அதே ஆண்டில் அதே படத்தின் சவுண்ட் மிக்சிங்கிற்காக ரசூல் பூக்குட்டி அகாடமி விருதை வென்றார்.
- 14 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது கீவாணியும் கார்திகி கொன்சால் 'ம் இந்த விருது பெற்று இந்தியாவுக்கு கவுரவம் சேர்த்துள்ளனர்.

## சர்வதேச புக்கர் விருது பரிந்துரைப் பட்டியலில் பெருமாள் முருகனின் பூக்குழி

### சர்வதேச புக்கர் விருது

- ✓ ஆண்டுதோறும் சிறந்த ஆங்கிலப் படைப்புகளுக்கு புக்கர் விருதுகளை புக்கர் அறக்கட்டளை வழங்கி வருகிறது.
- ✓ அந்நிய மொழிகளில் இயற்றப்பட்டு, பிரிட்டன், அயர்லாந்தில் வெளியிடப்படும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு நாவலுக்கு புக்கர் பரிசு
- ✓ கடந்த ஆண்டுக்கான விருதை டூம்ப் ஆஃப் சேண்ட் என்ற நாவலுக்காக ஹிந்தி எழுத்தாளர் கீதாஞ்சலி, மொழிபெயர்ப்பாளர் டெய்சி ராக்வெல் ஆகியோர் பெற்றிருந்தனர்.

### பூக்குழி நாவல்

- ✓ எழுத்தாளர் பெருமாள் முருகன் 2016-ஆம் ஆண்டில் இயற்றிய 'பூக்குழி' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான 'பயர்' இடம்பெற்றுள்ளது.
- ✓ அந்த நாவலை தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு அனிருத்தன் வாசுதேவன் என்பவர் மொழிபெயர்த்துள்ளார்.
- ✓ சர்வதேச புக்கர் விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம்பெறும் முதல் தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையைப் பெருமான் முருகன் பெற்றுள்ளார்.
- ✓ பூக்குழி நாலானது ஜாதி மறுப்புத் திருமணம் குறித்தும், அதன் தொடர்ச்சியாக நிகழும் ஆணவப் படுகொலை குறித்தும் விவரிக்கிறது.

### பெருமாள் முருகன்

- ✓ தமிழகத்தின் சேலத்தைச் சேர்ந்த எழுத்தாளரான பெருமாள் முருகன் மாதொருபாகன், கழிமுகம், கூளமாதாரி, பூனாச்சி அல்லது ஒரு வெள்ளாட்டின் கதை, கங்கணம் உள்ளிட்ட நாவல்களை எழுதியுள்ளார்.
- ✓ 'மாதொருபாகன்' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

### 50,000 பிரிட்டிஷ் பவுண்ட்

- ✓ சர்வதேச புக்கர் விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் மொத்தம் 12 நடுகளைச் சேர்ந்த 13 புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன.
- ✓ அந்த விருதுக்குத் தேர்வு செய்யப்படும் புத்தகத்துக்கு 50,000 பிரிட்டிஷ் பவுண்ட் தொகை பரிசாக வழங்கப்படும்.
- ✓ அந்தப் பரிசுத் தொகையானது நாவலின் எழுத்தாளருக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பாளருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

## சரஸ்வதி சம்மான் விருது

- எழுத்தாளர் சிவசங்கரிக்கு 2022-ஆம் ஆண்டுக்கான சரஸ்வதி சம்மான் விருது.
- 2019-இல் வெளியான சூரிய வம்சம்-நினைவலைகள் என்ற நூலுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- 1991-ஆம் ஆண்டு முதல் கே.கே.பிர்லா அறக்கட்டளை சார்பில் சரஸ்வதி சம்மான் விருது வழங்கப்பட்டு வருகிறது.
- இந்த விருதைப் பெறுபவருக்கு பரிசுத் தொகையாக ரூ.15 லட்சம் வழங்கப்படும்.
- இந்தியாவின் 22 மொழிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நூலுக்கு - சிறந்த உரைநடை அல்லது கவிதை இலக்கியப் படைப்புக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.
- தமிழில் ஏற்கெனவே இந்திரா பார்த்தசாரதி, அ.அ.மணவாளன் ஆகியோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.
- விருது வழங்கப்படும் ஆண்டுக்கு முந்தைய பத்தாண்டு காலகட்டத்தில் படைப்பாளி எழுதி படைப்புகளை கருத்தில் கொண்டு இந்த விருதுக்குத் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.
- உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குமார் சிக்ரி தலைமையிலா குழுவினர் 22 மொழிகளிலிருந்து 22 புத்தகங்களைத் தேர்வு செய்து, பின்னர் அதிலிருந்து ஐந்து புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து விருதுக்குப் பரிந்துரை செய்கின்றனர்.
- அந்த ஐந்து புத்தகங்களில் ஒரு புத்தகத்துக்கு சரஸ்வதி சம்மான் விருது அறிவிக்கப்படுகிறது.

## பத்ம விருது

- இந்தியாவில் கலை, சமூகப்பணி, பொது விவகாரங்கள், அறிவியல் மற்றும் பொறியியல், வர்த்தகம் மற்றும் தொழில், மருத்துவம், இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, குடிமைப்பணி போன்ற பல்வேறு பிரிவுகள் மற்றும் துறைகளில் சிறப்பாக பணியாற்றுவோருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- இந்த ஆண்டில் தமிழகத்தைச் சேர்ந்த இருளர் வடிவேல் கோபால், மாசி சடையன் ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டது.
- இருளர் பழங்குடி இனத்தை சேர்ந்த இவர்கள், உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு சென்று விஷமிக்க பாம்புகளை பிடித்துள்ளனர்.
- தமிழகத்தை சேர்ந்த பிரபல பின்னணி பாடகி வாணிஜெயராமுக்கு பத்மபூஷன் விருது
- பரதநாட்டியக் கலைஞர் கல்யாண சுந்தரம் பிள்ளை
- சமூக சேவை பிரிவு பாலம் கல்யாண சுந்தரம்,
- மருத்துவத்துறை சேவைக்காக கோபாலகிருஷ்ணன், வேலுசாமி ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிப்பு

## பகத்சிங், சுகதேவ், ராஜகுரு

- விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகிய மூவரும் லாகூர் சதிவழக்கில் கடந்த 1931ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் தேதி ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர்.

### லோக்பால்

- மக்கள் பிரதிநிதிகள், உயரதிகாரிகள் உள்ளிட்டோர் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்காக கடந்த 2019இல் அமைக்கப்பட்ட லோக்சபா, இதுவரை ஒருவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.
- ஊழலற்ற, பொறுப்பான நிர்வாகத்தை உறுதி செய்யும் நோக்கில் லோக்பால் அமைப்பு நிறுவப்பட்டது.
- லோக்பால் தலைவர் பதவி கடந்த ஆண்டு மே மாதத்தில் இருந்து காலியாக உள்ளது.
- லோக்பால் அமைப்பில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 82 என்ற நிலையில் 32 பணியிடங்கள்தான் நிரப்பப்பட்டுள்ளன.
- லோக்பால், லோக் ஆயுக்தா சட்டம் 2013இன் 5ஆவது பிரிவின்படி, அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஓய்வு பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பே புதிய நியமனங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

# தோள்சீலைப் புரட்சி

- உடை என்பது மனிதர்களின் அடிப்படை உரிமையும்கூட. இந்தியாவின் ஒரு பகுதியில் அந்த உரிமை மகளிருக்கு மறுக்கப்பட்டது என்பது வரலாற்றில் மிகப்பெரும் சோகம்.
- சாதியும் ஆணாதிக்கமும் இணைந்து இழைத்த இக்கொடுமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த 'தோள்சீலைப் போராட்டம்' மனித உரிமைப் போராட்டத்தின் மகத்தான அடையாளம்.
- 1822 இல் சிறிய அளவில் தொடங்கிய இப்போராட்டம், ஏறக்குறைய 40 ஆண்டுகள் நடைபெற்றது.

## சாதி வெறியின் உச்சம்

- கேரளத்தின் பெரும் பகுதியையும், இன்றைய தமிழ்நாட்டின் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது திருவிதாங்கூர் சமஸ்தானம்.
- இப்பகுதியில், நம்பூதிரி பிராமணர்கள்தாம் அனைத்து அதிகாரங்களையும் பெற்றவர்களாக இருந்தனர்.
- அரசர் – சம்பூதிரி பிராமணர் – நாயர் – வேளாளர் ஆகியோரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் சாதி ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருந்தனர்.

## மகளிருக்கு நிகழ்த்தப்பட்ட அக்கிரமம்

- ஆதிக்க சாதிப் பெண்கள் வீட்டைவிட்டு அதிகம் வெளியே வரக்கூடாது.
- கணவர் நெருங்கிய உறவினர்களைத் தவிர யாரிடமும் பேசக்கூடாது. இதைவிடக் கொடுமை, நம்பூதிரி பிராமணர்கள் முன்னால் வரும்பொழுது, மேலாடையின்றி வர வேண்டும்.
- ஒடுக்கப்பட்ட சாதி எனக் கருதப்பட்ட பெண்கள் நிலை இன்னும் மோசம். அனைவர் முன்பும் தங்கள் மார்பகத்தை மறைக்குமாறு எவ்வகை ஆடையையும் ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் அணியக்கூடாது எனவும்,
- அதை மீறி மேலாடை அணிந்தால் அதற்கு 'முலை வரி' கட்ட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.
- வரி கட்டியிருந்தாலும், நம்பூதிரி பிராமணர்கள் முன்னால் வரும்போது திறந்த மார்போடுதான் வர வேண்டும் என்பது இன்னொரு கொடுமை.
- அன்றை காலகட்டத்தில், 'தோள்சீலை' என்பது ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே அணியும் ஆடையாக இருந்தது.
- பெண்களின் கச்சின் மீது அணியும் மேல்முண்டு என்பதையே தோள்சீலை எனக் குறிப்பிடுகின்றனர்.
- 1819 இல் மூலம் திருநாள் ராம வர்மா எனும் அரசர், ஒடுக்கப்பட்ட சாதி மற்றும் நாடார் சமூகப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என அறிவித்தார்.
- பின்னாள்களில் இதை எதிர்த்துத் தோள்சீலை உரிமைப் போராட்டம் நடந்தது.

## மூன்று கட்டப் போராட்டம்

- 1822 முதல் 1823 வரை
- 1827 முதல் 1829 வரை
- 1858 முதல் 1859 வரை என மூன்று கட்டங்களாக இப்போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.
- ஆங்கில அதிகாரி ஜான் மன்றோ காலத்தில் கிறிஸ்தவ மதத்துக்கு மாறினால், குப்பாயம் போன்ற நீண்ட மேலாடையைப் பெண்கள் அணிந்துகொள்ளலாம் என ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது.
- இதையடுத்து, ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்கள் பெருவாரியாகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர்.
- 1829இல் திருவிதாங்கூர் அரசு அறிவித்த ஒன்றை வெளியிட்டது. சாணார், ஈழவர் சமூகத்துப் பெண்கள், நாயர் சமூகப் பெண்டிர் அணிவது போன்று மார்பை மறைக்கும்படி துப்பட்டா (சால்வை) போன்ற உடை அணிய அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும்,
- அதே நேரத்தில், கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய சாணார் பெண்டிர் அணியும் குப்பாயம் போன்ற உடையை இந்து மதத்தில் உள்ள சாணார் பெண்கள் அணிவது அனுமதிக்கப்படுகிறது எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- இந்த ஆணையின் பொருள், தோளுக்கும் மேல்துண்டு அணிவது போலச் சல்லா துணியோ அல்லது வேறு எவ்வகைத் துணியோ அணியக்கூடாது என்பதுதான்.

## முடிவுக்கு வந்த போராட்டம்

- இந்தக் காலகட்டத்தில் குமரி மாவட்டத்தில் நாடார் சமூகத்தில் தோன்றிய வைகுண்டர் எனும் சமூகச் சீர்திருத்தவாதி, சாணார் சமூகப் பெண்கள் எக்காரணம் கொண்டும் திறந்த மார்போடு இருக்கக்கூடாது என வலியுறுத்தி வந்தார்.
- 1857 இல் நடந்த சிப்பாய் கலகம், மத உணர்வுகள் தொடர்பாக வெடித்தது எனக் கருதிய ஆங்கிலேய அரசு, இந்தியக் குடிமக்களின்

மத உணர்வுகளிலும், வழிபாட்டு முறைகளிலும், பண்பாட்டு மரபுகளிலும் தலையிடாது என அறிவித்தது.

- இதனால் நாயர் - வேளாளர் சமூகத்தினர் மேலும் ஊக்கம் பெற்றனர்.
- 1859 டிசம்பர் 30 இல் நாகர்கோவில் அருகே வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். ஊர் ஊராகக் கலவரம் பரவியது.
- இந்த முறை மதங்கடந்து, ஏழை - பணக்காரர் எனும் வேறுபாடின்றி ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணியில் திரண்டுவந்து சரியான பதிலடி கொடுத்தனர்; சாதி வெறியர்கள் பின்வாங்கினர்.
- 1859 ஜுலை 26 அன்று திருவிதாங்கூரைச் சேர்ந்த உத்தரம் திருநாள் அரசர். சாணர் சமூகப் பெண்கள் தோள்சீலை அணிவதை ஏற்றுக்கொண்டு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.
- 1865இல் ஈழவர் போன்ற பிற சாதியைச் சார்ந்த பெண்டிரும் இத்தகைய உடை உடுத்தும் முறையைப் பின்பற்றலாம் என திருவாங்கூர் அரசர் ஆயில்யம் திருநாள் இறுதியாக அறிவித்தார்.
- தோள்சீலைப் போராட்டம் ஆதிக்க சாதியினருக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்களின் மானம் காத்த போராட்டமும்கூட.

### கடவுளின் தேசத்தில் ஒரு சமூகப் போர்

### வைக்கம் 100

- இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கோயில் வீதி, கிராம வீதி என்றழைக்கப்படும் சாலைகளில் எல்லோரும் நடந்துவிட முடியாது.
- கடவுளின் தேசமான கேரளத்தில் தீண்டாமை, நெருங்காமை, பார்க்காமை போன்ற கொடுமைகள் நிலவிவந்தன.
- அனுமதி மறுக்கப்பட்ட சில குறிப்பிட்ட தெருக்களில் நடக்க அனுமதிக்கக் கோரி நிகழ்ந்ததே வைக்கம் போராட்டம்.
- வைக்கம் கோயில் அருகமைத் தெருக்களில் ஈழவரும் புலையரும் நடப்பதற்கான 'சஞ்சார உரிமை'யைக் கோரி 1924-1925-ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட போராட்டம் இது.

### சமூக நீதிக்காக சத்தியாகிரகம்

- ஈழவர் தலைவர் டி.கே.மாதவன் 1924 மார்ச் 30 அன்று முன்னெடுத்த வைக்கம் போராட்டம், கேரள காங்கிரஸ் கமிட்டி அமைத்த தீண்டாமை விலக்குக் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- தென் ஆப்பிரிக்காவில் மட்டுமே நடந்து வந்த சத்தியாகிரக முறையை இந்தியாவில் காந்தி முதலில் பரிசோதித்துப் பார்த்தது வைக்கத்தில்தான்.

### வைக்கம் வீரர்

- இருமுறை சிறை சென்று கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார் பெரியார். இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின்படி வைக்கத்தில் மற்றெவரையும்விட அதிகமாக பெரியார் 141 நாள்கள் முகாமிட்டிருந்தார். அவற்றுள் 74 நாள்களைக் கொடுஞ்சிறையில் கழித்தார்.
- பெரியாரின் மனைவி நாகம்மையார், தங்கை எஸ்.ஆர்.கண்ணம்மாள் என்று குடும்பமே வைக்கத்தில் போராடியது.
- பெரியார் சிறைப்பட்டிருந்த காலத்தில் நாகம்மையார் வீடு திரும்பிவிடவில்லை. ஒருமுறை நாகம்மையாரும் 'ரிமாண்ட்' செய்யப்பட்டுப் பெரும் துன்பத்தை அனுபவித்தார்.

## வைக்கம் போராட்டம்

- கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள கோயிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களில், ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் நடமாடக் கூடாது என 1920களில் நிலவிய தடைக்கு எதிரான போராட்டம், இந்தியாவின் சமூக நீதிப் பாதையில் மிக முக்கியமான மைல்கல்.
- அந்தப் போராட்டத் தொடக்கத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது

### காந்தியின் பங்கு

- மகாத்மா காந்தி, பெரியார், நாராயண குரு எனப் பெருந்தலைவர்களின் பங்களிப்புடன் நடந்த வைக்கம் போராட்டம், மிக முக்கியமான சமூகப் போர் என்றே சொல்ல வேண்டும்.
- காந்தியின் ஆலோசனைப்படி போராட்டக் குழுவினர் இயங்கினர்.
- சாதியின் அடிப்படையில் இந்து மதத்துக்குள் நிகழ்ந்த அடக்குமுறையை இந்துக்களின் மனசாட்சிக்கு முன்னர் மிகப் பெரிய கேள்வியாக முன்வைத்ததிலும், பிற மதத்தினரின் தலையீட்டால் போராட்டம் திசை திரும்பாமல் பார்த்துக் கொண்டதிலும் காந்தியின் பங்கு மிகப் பெரியது.

### பெரியாரின் பங்கு

- ஒரு கட்டத்தில் மக்களிடம் எழுச்சியை உருவாக்க, செயல்திறன் மிக்க ஒரு தலைவரின் தேவை எழுந்ததால், இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பெரியாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
- அவரது வருகைக்குப் பின்னர் வைக்கம் போராட்டம் புதிய வடிவம் பெற்றது. ஆளும் வர்க்கத்துடன் நெருக்கமாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று அவர் முன்னெடுத்த போராட்டம் பெரும் வெற்றி பெற்றது.
- அவரது துணைவி நாகம்மையாரும் இந்தப் போராட்டத்தில் தீரத்துடன் பங்கெடுத்தது, சமூக நீதிப் போராட்டக் களத்தில் பெண்களின் பங்களிப்புக்கு முக்கியச் சான்று.
- தொடர்ச்சியான போராட்டத்துக்குப் பின்னர், மூன்று தெருக்களில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் நடமாடலாம் எனும் முடிவு எடுக்கப்பட்டது.

## திருநெல்வேலி எழுச்சி

### மையம் கொண்ட புயல்

- 1905-இல் வங்கத்தை மத அடிப்படையில் இரண்டாகப் பிரித்து, சுதேசி இயக்க வெடிகுண்டைப் பற்ற வைத்தார் கர்சன்பிரபு
- வங்கம் கொந்தளித்து எழுந்தது. வங்கத்தின் அந்த சுதேசி இயக்க முழக்கத்தைத் தூத்துக்குடியும் எதிரொலித்தது. 'தூங்குமூஞ்சி மாகாணம்' என்று அன்றைய போராட்ட நாள்களில் பெயர் பெற்றிருந்த மெட்ராஸ் மாகாணத்தில் சுதந்திரப் புயல் தூத்துக்குடியில் மையம் கொண்டிருந்தது.
- அதன் இயக்குவிசையாக மக்கள் தலைவர் வ.உ.சிதம்பரனார் இருந்தார்.
- தூத்துக்குடியில் சுழன்றடித்த அந்தப்புயல் அங்கிருந்த ஆங்கிலேயரின் கோரல் (Coral) ஆலைத் தொழிலாளர்களையும் கவர்ந்திழுத்தது.
- 1908 பிப்ரவரி 27 அன்று ஊதிய உயர்வு, வார விடுமுறை, இதர விடுமுறை வசதிகள் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கோரல் ஆலையில் வேலைநிறுத்தம் தொடங்கியது.

### வந்தே மாதரம் முழக்கம்

- வேலைநிறுத்தம் தொடங்கியவுடன் திருநெல்வேலி ஆட்சியர் தூத்துக்குடிக்குக் காவல்படையை அனுப்பினார். கூட்டங்களைத் தடை செய்து, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- ஆலை நிர்வாகம் அசைந்து கொடுக்காததால் வேலைநிறுத்தம் தொடர்ந்தது. தொழிலாளர்கள் தினசரி தூத்துக்குடி நகர வீதிகளில் வந்தே மாதரம் முழக்கமிட்டபடி ஊர்வலங்களை நடத்தினர்.
- தொழிலாளர்களின் முழக்கம் அவர்களது கோரிக்கை சார்ந்ததாக அல்லாமல் வந்தே மாதரம் எனும் மாபெரும் முழக்கமாக இருந்தது.
- போராட்டம் வென்றது; கோரிக்கைகள் நிறைவேறின.

### முதல் அரசியல் வேலைநிறுத்தம்

- தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் 7 ஆம் தேதிதான் மீண்டும் பணிக்குத் திரும்பியிருந்தனர். எனினும், வ.உ.சி. கைது செய்யப்பட்டதை அறிந்ததும் தன்னெழுச்சியாக மீண்டும் வேலைநிறுத்தத்தில் இறங்கினர்.
- இந்தியாவில், பொருளாதாரக் கோரிக்கை எதுவும் இல்லாமல் நடைபெற்ற முதல் அரசியல் வேலைநிறுத்தம் அதுதான்.
- 1908 ஜூலை மாதம் 23 அன்று திலகர் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, பம்பாய் தொழிலாளர்கள் நடத்திய ஆறுநாள் வேலைநிறுத்தம்தான் இந்தியாவின் முதல் அரசியல் வேலைநிறுத்தம் எனப் பல வரலாற்று நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. அது சரியல்ல. அதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பாகவே தூத்துக்குடி தொழிலாளர்கள் களத்தில் இறங்கிவிட்டனர்.

### பற்றியெரிந்த நெல்லைச்சீமை

- காவல்துறை துப்பாக்கிச்சூடு நடத்தியது. மாவட்ட ஆட்சியர் பொறுப்பிலிருந்த ஆஷ் துரை, நேரடியாகக் குதிரையில் வந்து தன் ரிவால்வரை எடுத்துச் சுட்டார்.
- ரொட்டிக்கடைத் தொழிலாளி, இஸ்லாமியர், ஒடுக்கப்பட்டவர், கோயில் பூசாரி என நான்கு பேர் கொல்லப்பட்டனர்.
- வ.உ.சி. என்கிற மாமனிதர் மீது மக்கள் கொண்ட அன்பினால் இந்த எழுச்சி ஏற்பட்டது. சுதந்திரத்திற்காகவும் தற்சார்புப் பொருளாதாரத்துக்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்த அந்த மாமனிதரின் அடியொற்றியே பின்னாள்களில் தற்சார்புப் பொருளாதாரத்தை நிலைநிறுத்த, 'நவீன இந்தியாவின் கோயில்கள்' என நேரு குறிப்பிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

## முதல் சுதேசி கப்பல்

- இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர்கள் இந்துமகா சமுத்திரத்தின் கப்பல் வணிகத்தில் கோலோச்சி இருந்தனர்.
- இந்நிலையில் 1906-ஆம் ஆண்டு வ.உ.சி. இந்தியாவின் முதல் சுதேசி கப்பல் கம்பெனியை பலரிடமும் பங்குத்தொகை பெற்று தூத்துக்குடியில் தொடங்கினார்.

## லாவோ, காலியா

- வ.உ.சி. வாங்கிய எஸ்.எஸ்.காலியா, எஸ்.எஸ்.லாவோ ஆகிய கப்பல்களில் 42 முதல் வகுப்புகளும் 24 இரண்டாம் வகுப்புகளும் 1,300 மூன்றாம் வகுப்புகளும் என மொத்தம் 1,366 இருக்கைகளும் 4,000 டன் சரக்கு மூட்டைகளை வைக்கும் வசதி இருந்தது.

## கட்டணம்

- இந்த சுதேசி கப்பல்களில் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு 4 அணா (25 காசுகள் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட்டது.
- ஆனால் ஆங்கில கம்பெனியோ பயணக்கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.4 வசூலித்தது. சரக்கு மூட்டைகளுக்கும் கையில் கொண்டு செல்லும் சாமான்களும் தனிக்கட்டணம் வசூலித்தது.
- நட்டத்தில் மூழ்கிய ஆங்கிலக் கப்பல் கம்பெனி தனது கட்டணத்தை 1 ரூபாயாகவும், பின்னர் 4 அணாவாகவும் குறைத்தது. அதன் பிறகும் கூட்டம் வராததால் கட்டணமின்றி ஏற்றிச் செல்வதாக அறிவித்தது.
- பயணம் செல்பவர்களுக்கு இலவசமாக குடை தருவதாக கூறிய பிறகும் ஆங்கில கப்பல்களில் ஏறிச்செல்ல மக்கள் தயாராக இல்லை.

## வங்காளத்தில்

- 1907-இல் வங்காளத்தில் சுதந்திரத்திற்காகப் போராடிய அரவிந்தகோஷ் என்பவரை ஆங்கில அரசு வந்தேமாதரம் என்று முழக்கம் எழுப்பியதற்காக கைது செய்தது.
- இவருக்கு எதிராக சாட்சி சொல்ல சுதந்திரப் போராட்ட வீரர் பிபின் சந்திரபாலை ஆங்கில அரசு அழைத்தது.
- இந்த தேச துரோக வழக்கில் சாட்சி சொல்ல மறுத்ததால், பிபின் சந்திரபாலுக்கு 6 மாதம் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- இவரது விடுதலையை தேசம் முழுவதும் கொண்டாட முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இந்த கொண்டாட்டங்களுக்கு வெள்ளை அரசு இந்தியா முழுமைக்கும் தடை விதித்தது.

## நெல்லையில்

- பிபின் சந்திரபால் விடுதலையானதும் தடையை மீறி 9.3.1908 அன்று தூத்துக்குடியில் சுமார் 20,000 பேர் கூடிய பொதுக்கூட்டத்தில் சுப்பிரமணிய சிவாவுடன் வ.உ.சி.பேசினார்.
- நெல்லை தாமிரபரணி ஆற்றின் தைப்பூச மண்டபத்தில் பல ஆயிரம் மக்கள் திரண்ட கூட்டத்தில் வ.உ.சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் எழுச்சியுரை ஆற்றினர்.
- வ.உ.சி., சுப்பிரமணிய சிவா, பத்மநாப ஐயர் ஆகியோரை சிறையில் அடைக்க நெல்லை மாவட்ட ஆட்சியர் விஞ்ச் உத்தரவிட்டார்.
- வ.உ.சி. கைது செய்யப்பட்ட மறுநாள் 1908 மார்ச் 13-ஆம் தேதி நெல்லையில் மாபெரும் கலவரம் வெடித்தது.
- நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரி மாணவர்கள் வகுப்பைப் புறக்கணித்தனர். நெல்லை நகராட்சி அலுவலகம், தபால் அலுவலகம், போலீஸ் நிலையத்துக்குத் தீ வைக்கப்பட்டது.

## திருநெல்வேலி கலகம்

- தூத்துக்குடியிலும் மிகப்பெரிய வேலைநிறுத்தம் நடந்தது. இதில் குதிரை வண்டிக்காரர்கள் பலர் கலந்து கொண்டனர். அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டதற்காக இந்தியாவில் நடந்த முதல் வேலைநிறுத்தம் இதுவே ஆகும்.
- இந்த விஷயம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் வரை எதிரொலித்தது. இந்த நிகழ்வு 'திருநெல்வேலி கலகம்' என்று பிரிட்டிஷாரால் பதிவு செய்யப்பட்டது.
- நீதிபதி பின்ஹே வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையும் (40 ஆண்டுகள்), சிவாவிற்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.
- சுதேசி கப்பலை முடக்க 24.7.1908 அன்று நடுக்கடலில் சுதேசி கப்பல் வேறொரு கப்பலில் மோதிய வழக்கை ஆங்கிலேய அரசு கையில் எடுத்தது.
- இரண்டு லட்ச ரூபாய் இருந்தால்தான் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடர்ந்து இயக்க முடியும் என்ற நிலையில், கப்பல்களை ஆங்கிலேயரிடமே விற்றுவிட்டனர்.

# 02 சமூகப் பிரச்சனைகள்

## கட்டாய நுழைவுத் தேர்வு

- இளநிலை, முதுநிலைப் படிப்புகளில் சேர மாணவர்கள் பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் (கியூட் - CUET) தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம்.
- ஆரம்பத்தில் விரும்புகின்ற பல்கலைக்கழகங்கள் இந்தப் பொது நுழைவுத் தேர்வு முறையை அமல்படுத்தலாம் என்று கூறப்பட்ட நிலையில், தற்போது இந்தியாவின் 1,113 பல்கலைக்கழங்கள், 47,000 கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கைக்கும் இந்தத் தேர்வு கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது.

### நோக்கம் சிதையும்

- கல்விமேம்பாட்டுக்கென அமைக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் ஆணையம், கோத்தாரி ஆணையம் போன்றவற்றின் பரிந்துறையிலும், தேசியக் கல்விக் கொள்கை 1986,1992 ஆகியவற்றிலும், தற்போது அமல்படுத்தப்படும் தேசிய கல்விக் கொள்கை 2020-இலும் இதுதான் முக்கிய நோக்கமாக வலியுறுத்தப்படுகிறது.
- புதிய கல்விக் கொள்கையில், தற்போதுள்ள உயர்கல்விக்கான மாணவர் சேர்க்கையின் மொத்தப் பதிவு விகிதம் 24% இலிருந்து 2030க்குள் 50%ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### முன்னிலையில் தமிழ்நாடு

- உயர்கல்விச் சேர்க்கையில் மொத்தப் பதிவு விகிதம், 52% எனும் நிலையை அடைந்த முன்னணி மாநிலம் தமிழ்நாடு.
- மேலும், பெண் குழந்தைகள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக உயர்கல்வி பயிலச் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 அளிக்கப்படுகிறது.
- முதல் தலைமுறை மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

### விளைவுகளும் விபரீதங்களும்

- கியூட் கட்டாய மாக்கப்பட்டால், பொது நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சியளிக்கும் மையங்கள் நாடு முழுவதும் புற்றீசலாகப் பெருகும்.
- பொருளாதார வசதி படைத்த மாணவர்கள் மட்டும்தான் பல லட்ச ரூபாய் கட்டணம் செலுத்திப் பயிற்சி பெற்றுத் தேர்ச்சி பெறுவார்கள்.
- பொது நுழைவுத் தேர்வின் மதிப்பெண்கள் மட்டுமே உயர்கல்விச் சேர்க்கைக்குத் தேவை என்பதால், மாணவர்கள் 10, +2 பொதுத்தேர்வுகளின் கவனம் செலுத்தமாட்டார்கள்.
- இதனால், அடிப்படை பாடங்களின் அறிவைப் பெறுவது தடுக்கப்பட்டுவிடும்.

### தீர்வுகள்

- அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களில் தற்போதும் நுழைவுத் தேர்வின் அடிப்படையில்தான் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.
- பல்கலைக்கழகங்களே நடத்தும் தேர்வுகளை எப்படி நடத்த வேண்டும் என்று வரைமுறைகளைப் பல்கலைக்கழக மானியக் குழு தெரிவிக்கலாம்.
- தேர்வுகள் நடத்தும் முறைகளை ஆய்வுசெய்யலாம். இப்படியான கண்காணிப்பு மூலமாகச் சரியான முறையில் தேர்வுகள் நடத்தி, தகுதியுள்ள மாணவர் சேர்க்கைக்கு வழிவகுக்கலாம்.

## ஒடிஸா பழங்குடியினரின் வாழ்வாதாரமாகும் 'ஸ்ட்ராபெரி!'

- ஸ்ட்ராபெரி சாகுபடியில் வெற்றி கண்டுள்ளனர் ஒடிஸா பழங்குடியின் விவசாயிகள். ஸ்ட்ராபெரி சாகுபடி மூலமாக ஒன்றரை குவிண்டாலுக்கு (150 கிலோ) ரூ.37,500 வரை அவர்கள் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

### மேற்கத்தியத் தோற்றம்

- இனிய மனம், பிரகாசமான சிவப்பு நிறம், இனிப்பு கலந்த புளிப்புச் சுவை நிறைந்த சாறு உள்ளிட்டவற்றால் அனைத்து வயதினரும் விரும்பி உண்ணும் பழமாக ஸ்ட்ராபெரி உள்ளது.
- 19-ஆம் நூற்றாண்டில் ஸ்ட்ராபெரியின் அமெரிக்க ரகங்களில் மேற்கொள்ளப்பட்ட இனக்கலப்பு மூலம் வழக்கத்தில் உள்ள ஸ்ட்ராபெரி பழத்தின் ரகம் உருவாக்கப்பட்டது.

## இந்தியாவில் அறிமுகமும் வளர்ச்சியும்

- ஸ்ட்ராபெரி இந்தியாவில் 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மகாராஷ்டிரத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைச் சரிவில் அமைந்துள்ள மகாபலேஷ்வர் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பம்பாய் மாகாணத்தின் கோடைக்கால தலைமையகமாக விளங்கியது.
- அங்கு நிலவி வந்த தட்பவெப்ப சூழல் ஸ்ட்ராபெரி சாகுபடிக்கு உகந்ததாகக் காணப்பட்ட நிலையில், 1920களில் அங்கு பயிரிடப்பட்டது.
- இந்தியாவின் மொத்த ஸ்ட்ராபெரி சாகுபடியில் 85 சதவீதம் இந்தப் பகுதியில் விளைவிக்கப்படுகிறது.
- அந்த வகையில் ‘இந்தியாவின் ஸ்ட்ராபெரி தலைமையகமாக மகாபலேஷ்வர் விளங்குகிறது.
- மித வெப்பமண்டலப் பயிரான ஸ்ட்ராபெரி நவம்பர் முதல் மார்ச் வரை நன்கு விளைகிறது.

## ஒடிஸாவில் அறிமுகம்

- ஒடிஸாவின் சுனாபேடா பீடபூமியின் தட்பவெப்ப சூழலானது மகாராஷ்டிரத்தின் மகாபலேஷ்வரில் நிலவும் சூழலுடன் ஒத்துப் போவதால், கோராபுட் மாவட்டத்தில் 2021–ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில் சிறிய பரப்பில் ஸ்ட்ராபெரி பயிரிடப்பட்டது.
- அச்சோதனை ஓரளவு வெற்றியடைந்த பின்னர் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் ஸ்ட்ராபெரி சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாநில தோட்டக் கலைத் துறையானது பழங்குடியின விவசாயிகளுக்கு நிதியுதவி அளித்தும், நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளித்தும் ஸ்ட்ராபெரி சாகுபடியை ஊக்குவித்தது.
- ஏப்ரல் முதல் அக்டோபர் வரை நெல் வகைகளைப் பயிரிடும் விவசாயிகள் நெல் அறுவடைக்குப் பிறகு நவம்பரில் ஸ்ட்ராபெரியைப் பயிரிடுகின்றனர்.
- தற்போது விளைச்சல் பெருகி வருவாய் அதிகரித்துள்ளதால் ஒடிஸா பழங்குடியின விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஸ்ட்ராபெரி சாகுபடியை சுனாபேடா பீட் பூமியில் உள்ள மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி, பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

## ஸ்ட்ராபெரியில் காணப்படும் ஊட்டச்சத்துகள்

- மாங்கனீஸ்
- பொட்டாசியம்
- வைட்டமின் சி
- வைட்டமின் பி9
- இரும்பு, காப்பர், பாஸ்பரஸ், வைட்டமின்கள் – பி6, கே, இ உள்ளிட்டவையும் குறிப்பிட்ட அளவில் காணப்படுகின்றன.

## மருத்துவ குணங்கள்

- நோய்த்தடுப்பாற்றலை அதிகரிக்கிறது.
- உயர் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது
- இதய ஆரோக்கியத்துக்கு நல்லது
- பக்கவாத பாதிப்பைக் கட்டுப்படுத்துகிறது.
- ரத்த சர்க்கரை அளவை ஒழுங்குபடுத்துகிறது.
- புற்றுநோய் பாதிப்பைக் குறைக்கிறது.

## விளைவிக்கப்படும் மாநிலங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மகாராஷ்டிரம் | ஹிமாசலபிரதேசம் | மேற்கு வங்கம் | தில்லி | ஹரியாணா |
| பஞ்சாப் | ராஜஸ்தான் | உத்தரபிரதேசம் | ஜம்மு – காஷ்மீர் | ஒடிஸா |

## பயிரிடப்படும் முக்கிய ரகங்கள்

| | | |
|---|---|---|
| சாண்டலர் | தியோகா | டோரே |
| ஃபெர்ன் | செல்வா | பஜாரோ |

## இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய நாடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆஸ்திரியா | வங்கதேசம் | ஜெர்மனி | ஜோர்டான் | அமெரிக்கா |

# குறைதீர்வு தீர்ப்பாய குழுக்கள்

- சமூக வலைதளங்கள் குறித்த புகார்களுக்கு தீர்வு காணும் வகையில் புதிய வசதி அமலுக்கு வந்தது. குறைதீர்வு தீர்பாய குழுக்கள் முறை நேற்று முதல் அமலுக்கு வந்தது. இதற்காக தனி இணையதளம்.

## பிரச்னை

- குறிப்பிட்ட சில காரணங்களுக்காக பயனாளர்கள் பதிவு நீக்கப்படுவது, கணக்கு முடக்கப்படுவது போன்றவை தொடர்பாக பயனாளர்களுக்கும், சமூக வலை தளங்களுக்கும் இடையே பிரச்சனை உள்ளது.
- இது தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் அதிகளவில் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.
- மூன்று உறுப்பினர்கள் உள்ள, மூன்று தீர்பாய குழுக்கள் செயல்பாடு நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.
- இதன்படி சமூக வலை தளங்களின் குறைதீர்வு அதிகாரிகள் அளித்துள்ள பதிலில் திருப்தி அடையாத பயனாளர்கள், இந்த தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்யலாம்.
- இதற்காக, https://gac.gov.in என்ற இணைய தளம் துவக்கப்பட்டுள்ளது. இதில் பயனாளர்கள் தங்களுடைய புகாரை தெரிவிக்கலாம்.
- சமூக வலைதளத்தின் குறைதீர்வு அதிகாரியின் உத்தரவு வெளியிடப்பட்டதில் இருந்து, 30 நாட்களுக்குள் இந்த இணைய தளத்தில் புகார் செய்யலாம்.

## புதிய அமைப்பு

- இந்த தீர்ப்பாயத்தின் உத்தரவில் திருப்தி இல்லாதபட்சத்தில் நீதிமன்றங்களை நாடலாம்.
- இந்த தீர்ப்பாயத்தின் வாயிலாக நீதிமன்றங்களில் அதிகளவில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதும், தவிர்க்கப்படும்.
- இதற்காக உருவாக்கப்பட்டுள்ள இணையத்தளத்தில் இணையத்தில், தீர்ப்பாயம் அளிக்கும் உத்தரவுகள் வெளியிடப் படும்.
- இந்த தீர்ப்பாய நடைமுறை மிகவும் வெளிப்படையாக, நம்பிக்கையானதாக, பொறுப்பு உடையதாக இருக்கும்.
  மேலும் மிக விரைவாக தீர்வும் கிடைக்கும். இது பயனாளர்களுக்கு பெரிய அளவில் உதவும்.

# 100 நாள் வேலைத்திட்டம்

- கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கடந்த 2006-ம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கொண்டுவரப்பட்டது.
- இது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்று அழைக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொண்டவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்துடன் 100 நாட்களுக்கு உடல் உழைப்பு சார்ந்த வேலைகள் தரப்படுகிறது.
- இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 5.97 கோடி குடும்பங்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளன.
- மாநிலங்களுக்கு மாநிலம் ஊதிய உயர்வு வேறுபடுகிறது. 2 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது.
- ஹரியானா மாநிலத்தில் தினசரி ஊதியம் ரூ.331-ல் இருந்து ரூ.357 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ராஜஸ்தானில் ரூ.231-ல் இருந்து ரூ.255 ஆகவும்
- பிஹார், ஜார்க்கண்டில் ரூ.210-ல் இருந்து ரூ.228 ஆகவும்
- சத்தீஸ்கர், மத்திய பிரதேசத்தில் ரூ.204-ல் இருந்து ரூ.221 ஆகவும் தினசரி ஊதியம் உயர்வு.
- தமிழகத்தில் 2022-23 நிதி ஆண்டுக்கு இந்த திட்டத்தின் கீழ் தினசரி ஊதியம் ரூ.281 வழங்கப்படுகிறது.
- வரும் 2023-24 நிதி ஆண்டுக்கு ஊதியம் ரூ.294 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது 4.63 சதவீத உயர்வு ஆகும்.
- நாடு முழுவதும் ஐந்து கோடிக் குடும்பங்களுக்கு, கிட்டத்தட்ட 15 கோடி வேலைவாய்ப்பை வழங்கிவரும் இச்சட்டத்தை நீர்த்துப்போக வைப்பது தவறு.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் 2005 மூலம், இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டத்தால் விவசாயம் அழிந்துவிட்டது என்று சிலர் அறியாமை காரணமாகத் தவறாக நம்பினாலும், இன்றும் விளிம்புநிலை மக்களின் பசியைப் போக்கிக் கொண்டிருப்பது இத்திட்டம்தான்.

### திசைமாறும் திட்டம்

- பஞ்சாயத்து ராஜ் துறையின் முன்னாள் செயலாளரான அமர்ஜித் சின்ஹா தலைமையில், இச்சட்டத்தின் செயல்திறனை ஆராய குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது.
- அந்தக் குழுவின் முதல் கூட்டத்தில், கேரளம் போன்ற வளர்ந்த மாநிலங்கள் இத்திட்ட நிதி மூலம் சமூகச் சொத்துகளை உருவாக்கும் நிலையில் பிஹார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் வேலைகளைக்கூட உருவாக்க முடியவில்லை.
- எனினும் இத்திட்டப்படி அம்மாநிலங்களுக்கான நிதியை மறுக்க இயலாது.
- அதே கூட்டத்தில், வறுமையை ஒழிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தை வசதியான மாநிலங்கள் நன்கு பயன்படுத்திக்கொள்கின்றன.
- இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் செயலி மூலம் வருகைப்பதிவு செய்யும் முறையை (NMMS - National Mobile Monitoring System) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம், கட்டாயப்படுத்தியது.
- இதனால், இணைய வசதி இல்லாத மலைக்கிராமங்கள், பழங்குடிகள் வாழும் வனப்பகுதியிலும் கூடச் செயலி மூலம் வருகைப் பதிவு செய்தால்தான் வேலை செய்ததற்கான ஊதியம் வழங்கப்படும் எனும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

### குறையும் முக்கியத்துவம்

- முன்பு வங்கிக் கணக்கு மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. பிப்ரவரி 1 முதல் நாடு முழுவதும் ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கின் மூலம் ஊதியம் வழங்கும் முறையை அமைச்சகம் கட்டாயமாக்கியுள்ளது.
- அரசின் புள்ளிவிவரப்படி (MIS report), இந்தியா முழுவதும் 43% தொழிலாளர்கள் மட்டுமே (தமிழ்நாட்டில் 83%) ஆதார் இணைப்பு முறையைக் கொண்டுள்ளனர்.
- இந்த ஆண்டு பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கான நிதி ரூ.60,000 கோடியாகக் குறைக்கப்பட்டது. கடந்த ஆண்டின் ஊதிய நிலுவைத் தொகையே 2023 ஜனவரி வரையில் ரூ.16,070 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கும்போது, தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை வைத்து, நாடு முழுவதும் 20 முதல் 25 நாள்களுக்குத்தான் வேலை தர இயலும் என்கிறார்கள் துறைசார் நிபுணர்கள்.
- திட்ட ஊதியத்தொகை முழுவதையும் மத்திய அரசுதான் வழங்க வேண்டும் என்பதை மாற்றி, மத்திய – மாநில அரசுகள் முறையே 60:40 என்கிற வீதத்தில் பகிர்ந்து கொள்ளுமாறு சட்டம் திருத்தப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

### உடனடிச் செயல்பாடு தேவை

- இச்சட்டம் வறுமையை ஒழிக்கக் கொண்டுவரப்படவில்லை. மாறாக, 'ஊரகக் குடும்பங்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தவே' கொண்டுவரப்பட்டது.
- இத்திட்டம் சார்ந்த அனைத்து முடிவெடுக்கும் அதிகாரங்களையும் எளிய மக்கள் பங்கேற்கும் கிராம சபைக்கு வழங்கி மக்களையும் கிராம ஊராட்சிகளையும் இச்சட்டம் அதிகாரப்படுத்தியுள்ளது.
- நாடு முழுவதும் ஐந்து கோடிக் குடும்பங்களுக்கு கிட்டத்தட்ட 15 கோடி வேலைவாய்ப்பை வழங்கிவரும் இச்சட்டத்தை நீர்த்துப்போக வைப்பது தவறு.

## பெண்களின் பங்களிப்பு கூடட்டும்

### 148 இடம்

- உலகில் உள்ள 193 நாடுகளில், நாடாளுமன்றங்களில் பெண்கள் இடம் பெற்று இருக்கும் எண்ணிக்கையில் நமது நாடு நூற்று நாற்பத்தி எட்டாவது இடத்தில் உள்ளது என சர்வதேச நாடாளுமன்றங்களின் கூட்டமைப்பு (இன்டர் பார்லிமென்டரி யூனியன்) அறிவித்துள்ளது.
- உலகில் உள்ள நாடுகளில் நியூஸிலாந்து, ருவாண்டா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கியூபா, மெக்சிகோ நிகராகுவா என ஆறு நாடுகளில் மட்டுமே அந்நாடுகளில் உள்ள நாடாளுமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஐம்பது சதவீதத்திற்கும் மேல் உள்ளது.

### உலகளவில்

- உலக மக்கள் தொகையில் ஏறக்குறைய ஐம்பது சதவீதம் பெண்கள் உள்ள நிலையில், சட்டம் இயற்றும் பொறுப்பில் உள்ள உறுப்பினர்களில் பெண்கள் எண்ணிக்கை சுமார் இருபத்தாறு சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

### 78 M.P

- நம் நாட்டின் நாடாளுமன்றத்தின் மக்களவையில் மொத்தம் உள்ள 542 உறுப்பினர்களில் தற்போது எழுபத்தெட்டு உறுப்பினர்களே பெண்கள்.

### 14.4%

- நம் நாட்டின் மக்களவை உறுப்பினர்களில் இது 14.4% மட்டுமே. சர்வதேச நாடாளுமன்றங்களில் பெண் உறுப்பினர்களின் சராசரி எண்ணிக்கை இருபத்தி இரண்டு என்பதற்கு கீழாக நம் நாட்டின் மக்களவையில் பெண் உறுப்பினர்களின் சதவீதம் உள்ளது.

### தமிழ்நாடு

- பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, சமூக அந்தஸ்து ஆகியவற்றில் முன்னேறிய மாநிலங்களில் ஒன்றான நம் தமிழகத்தில் முப்பத்தொன்பது மக்களவை உறுப்பினர்களில், மூவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
- தமிழக சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள இருநூற்று முப்பத்து நான்கு உறுப்பினர்களில், பன்னிரண்டு பேர் மட்டுமே பெண்களாவர்.
- நம் நாட்டின் சட்டப்பேரவைகளில் உள்ள பெண் உறுப்பினர்களின் தேசிய சராசரியாக ஒன்பது சதவீதத்திற்கும் குறைவு.
- 1992-இல் அரசியல் சாசனத்தில் கொண்டுவரப்பட்ட எழுபத்தி மூன்றாவது திருத்தத்தின்படி, பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் பொறுப்புகளில் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் பழங்குடியின பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மக்கள்தொகை தாமதம் தகாது!

- வீடுகள் கணக்கிடுதல் மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு (என்பிஆர்) புதுப்பித்தல் பணி கடந்த 2020-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி வரை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.
- கொள்ளை நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக அப்பணிகள் ஒத்தி வைக்கப்பட்டன. 2021, 2022-ஆம் ஆண்டுகளிலும் பல்வேறு காரணங்களால் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டது.
- மக்கள்தொகை கணக்கெடுப்பு விதிமுறைகளின்படி மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள், காவல் நிலையங்கள் உள்ளிட்ட நிர்வாக பிரிவுகளின் எல்லை மறுவரையறை பணிகள் மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட பிறகே, மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மறுவரையறை பணியை நிறுத்துவதற்கான காலக்கெடுவை ஜுன் 30-ஆம் தேதி வரை நீட்டிப்பதாக அனைத்து மாநிலங்களுக்கும் தகவல் அனுப்பியிருக்கிறார் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆணையரான தலைமைப் பதிவாளர்.

### ஏன் கணக்கெடுப்பு

- மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது பொருளாதார வளர்ச்சியின் அளவை கணிப்பதாக மட்டுமல்ல.
- மக்களின் வாழ்க்கை தரம் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது என்பதன் அளவுகோலும் பார்க்கப்படுகிறது.
- எத்தனை பேருக்கு சொந்த வீடு இருக்கிறது? ஒரு வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஊர் விட்டு ஊர் போய் பிழைப்பவர்கள் எத்தனைபேர்? எத்தனை வீடுகளில் அடுப்பு இருக்கிறது? அது என்ன வகையான அடுப்பு? இறை நம்பிக்கை உள்ளவர்கள் எத்தனை பேர்? ஒவ்வொரு மதத்தினரும் எத்தனைபேர்? எழுதப்படிக்க தெரிந்தவர்கள் எத்தனை பேர் - உள்ளிட்ட பல்வேறு புள்ளிவிவரங்களும் மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.
- 1948 சென்சஸ் சட்டத்தின் அடிப்படையில் அந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அதிலிருந்து கிடைக்கும் தரவுகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, நம்பகத்தன்மையும் உலகையே ஆச்சரியப்படுத்தும் விதத்தில் அமைகின்றன.
- 1941-இல் உலக யுத்தம் நடந்தபோதும், 1971-இல் பாகிஸ்தானுடன் போர் மூண்டபோதும்கூட தடையில்லாமல் நாம் மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தினோம்.
- அப்படியிருக்கும்போது 2021-இல் நடந்திருக்க வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்புக்கான முன்னேற்பாடுகள் இன்னும்கூட செய்யப்படாமல் இருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

### சாத்தியம் இல்லை

- ஆதார் அட்டை என்பது மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு மாற்றாக இருக்க முடியாது. மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில்தான் அரசின் பல்வேறு திட்டங்கள் தீட்டப்படுகின்றன.
- பெரும்பாலான மக்கள்நலத்திட்டங்களும் மத்திய அரசால்தான் வழங்கப்படுகின்றன. அவை எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றன? அவற்றில் என்னென்ன குறைபாடுகள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதையெல்லாம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் தரவுகள் மூலம்தான் தெரிந்துகொள்ளமுடியும்.

- கணக்கெடுப்பு தாமதமாகும்போது கொள்கை முடிவுகளும் திட்டங்களும் முறையாக நடைபெறாமல் போகிறது.
- செப்டம்பர் 2023-க்குப் பிறகு, மாநிலப் பேரவைத் தேர்தல்களும், அதைத் தொடர்ந்து 2024 மக்களவைத் தேர்தலும் நடைபெற வேண்டும்.
- தேர்தல் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படும் பள்ளி ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும்தான் மக்கள்தொகை கணக்கெடுப்புக்கும் தேவைப்படுவார்கள் என்பதால் இப்போதைக்கு மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான சாத்தியம் தெரியவில்லை.

## பெண்மையை போற்றுவோம்... உரிமைகள் வந்த வழி!

| | | |
|---|---|---|
| 1916 | – | பெண்களுக்கான முதல் பல்கலைக் கழகத்தைச் சமூகச் சீர்திருத்தவாதியும் கல்வியாளருமான டோண்டு கேசவ் கார்வே தொடங்கினார். |
| 1929 | – | குழந்தைத் திருமண முறை ஒழிக்கப்பட்டது. திருமண வயது வரம்பு 14 ஆக உயர்த்தப்பட்டது. |
| 1947 | – | தமிழகத்தில் தேவதாசி முறை ஒழிப்பு |
| 1956 | – | பெண்கள், சிறுமிகள் கடத்தல் தடைச்சட்டம் |
| 1961 | – | வரதட்சணை தடைச்சட்டம் |
| 1961 | – | பெண்களின் பணிப்பாதுகாப்பை உறுதிசெய்த பேறுகால உதவித்திட்டம் |
| 1971 | – | மருத்துவ ரீதியிலான கருக்கலைப்புக்கு அனுமதி |
| 1972 | – | மதுவுக்கு எதிரான போராட்டம் |
| 1973 | – | மரங்களைப் பாதுகாக்கும் ‘சிப்கோ இயக்கம்’ உருவாக்கம் |
| 1976 | – | ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்க வகை செய்யும் சட்டம் |
| 1978 | – | பெண்களின் திருமண வயது 14 இலிருந்து 18 ஆக உயர்வு |
| 1978 | – | பெண்ணுரிமைக்கான முதல் தேசிய மாநாடு |
| 1985 | – | ஷா பானு வழக்கு |
| | – | நர்மதை பாதுகாப்பு இயக்கம் |
| 1987 | – | சதிக் கொடுமைக்கு எதிரான போராட்டம் |
| 1987 | – | சதி ஒழிப்புச் சட்டம் |
| 1992 | – | ராணுவப் பணிகளில் மருத்துவம் தவிர்த்த பிற பிரிவுகளில் பெண்கள் நியமனம் |
| | – | பன்வாரி தேவி வழக்கு |
| | – | தேசிய மகளிர் ஆணையம் உருவாக்கம் |
| 1997 | – | விசாகா நெறிமுறைகள் விரிவுபடுத்தப்பட்டுப் பாலியல் குற்றங்கள் வரையறுக்கப்பட்டன |
| 1998 | – | அனைத்து வகையான பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கும் பேறுகால உதவித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. |
| 1999 | – | பால் புதுமையினரின் முதல் ‘பெருமிதப் பேரணி’ (Pride March) கொல்கத்தாவில் நடைபெற்றது. |
| 2001 | – | பெண் குழந்தைகளைக் காப்போம் திட்டம் |
| 2004 | – | கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு எதிரான மணிப்பூர் ‘அம்மாக்களின் போராட்டம்’ |
| 2005 | – | குடும்ப வன்முறை தடைச்சட்டம் |
| 2007 | – | விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் தேசியக்கொள்கை |
| 2012 | – | டெல்லி நிர்பயா சம்பவம் |
| 2013 | – | பெண்கள் மீதான பணியிடப் பாலியல் குற்றங்கள் (தடுத்தல், தடைசெய்தல், குறைதீர்வு) சட்டம் |
| | – | பாலியல் குற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மேற்கொள்ளப்படும் இருவிரல் பரிசோதனைக்குத் தடை |

| | | |
|---|---|---|
| 2014 | - | அடிப்படை உரிமைகள் கொண்ட மூன்றாம் பாலினமாக மாற்றுப் பாலினத்தவருக்கு அங்கீகாரம் |
| 2018 | - | இந்தியாவில் மீடு விவகாரம் |
| | - | தன்பால் ஈர்ப்பு கிரிமினல் குற்றமல்ல |
| 2020 | - | வாடகைத்தாய் ஒழுங்குமுறைச்சட்டம் |
| | - | இந்திய ராணுவத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் உயர் பதவிகளில் நியமிக்கப்படலாம் என உச்சநீதிமன்றம் உத்தரவு |

## 20% நாடுகளில் மட்டுமே பாலியல் கல்விக்கான சட்டங்கள்

### பாலியல் கல்வி என்பது...

- பாலியல் சுகாதாரம், கண்ணியம், உடல்நலப் பாதுகாப்பு உள்ளிட்டவை சார்ந்த அறிவு, திறன், கொள்கைகளை மாணவர்களிடையே ஏற்படுத்துதல்.

### பாலியல் கல்விக்கான முக்கிய கருத்துருக்கள்

- பாலியல்சார் உறவுகள்
- கொள்கைகள், உரிமைகள்
- பாலினத்தைப் புரிந்துகொள்ளல்
- வன்முறைகளுக்கு எதிரான பாதுகாப்பு
- சுகாதாரத் திறன்
- மனித உடல் வளர்ச்சி
- பாலியல் நடத்தைகள்
- பாலியல் சுகாதாரம்

### பாலியல் கல்விக்கான சட்டங்கள்

- விரிவான சட்டங்களை கொண்டுள்ள நாடுகள் - 20%
- தேசிய கொள்கைகளை கொண்டுள்ள நாடுகள் - 39%
- கல்வித் திட்டங்களை கொண்டுள்ள நாடுகள் - 64%

## தமிழகத்தில் பொன்விழா காணும் பெண் போலீஸ்

- தமிழக காவல்துறையில் பெண் போலீஸார் நியமிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகும்.
- தமிழகத்தில் 1973-ல் திமுக ஆட்சியில், கருணாநிதி முதல்வராக இருந்தபோது முதன்முதலாக பெண் காவலர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர்.
- ஒரு எஸ்.ஐ., ஒரு தலைமைக்காவலர், 20 காவலர்கள் என மொத்தம் 22 பெண்கள் முதன்முதலில் பணியமர்த்தப்பட்டனர்.
- 1976-ல் தமிழ்நாடு பிரிவில் முதல் ஐபிஎஸ் அதிகாரிகளாக தருமபுரியின் திலகவதியும், கேரளாவின் லத்திகா சரணும் பொறுப்பேற்றனர்.

### மகளிர் காவல்நிலையம்

- 1992-ல் அதிமுக ஆட்சியில் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது காவல்துறையில் புதிய அத்தியாயமாக, சென்னை ஆயிரம்விளக்கில் முழுவதும் பெண்களைக் கொண்ட அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்கப்பட்டது.
- தற்போது தமிழகம் முழுவதும் 202 மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன.
- 2004 ஜனவரியில் நாட்டிலேயே முதல்முறையாக அதிரடிப்படை, கமாண்டோ படை, விரைவு அதிரடிப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்து மகளிர் போலீஸ் படையை (பெண் போலீஸ் பட்டாலியன்) அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.
- தமிழகத்தின் முதல் பெண் டிஜிபியாக லத்திகா சரண் 2009-ல் பணியமர்த்தப்பட்டார்.

## பிஎம் விகாஸ்

- நடப்பாண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பிரதமரின் விஸ்வகர்மா கௌஷல் திட்டம் ஒவ்வொருவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.
- இத்திட்டம், கைவினைஞர்கள் மற்றும் சிறுதொழில்களில் தொடர்புடையோரை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது.
- எளிதாக கடன் பெறுதல், திறன் மேம்பாடு, தொழில்நுட்பம் சார்ந்த ஆதரவு, எண்ம அதிகாரமளித்தல், வணிகப் பெயர் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்துதல் என ஒவ்வொரு 'விஸ்வகர்மா'வுக்கும் (கைவினைஞர்கள்) அமைப்பு ரீதியிலான ஆதரவை அரசு உறுதி செய்யும்.
- கைவினைஞர்களை மேம்படுத்தும் அதேவேளையில், அவர்களின் வளமையான பாரம்பரியத்தையும் இத்திட்டம் பாதுகாக்கும்.

### வலுவான செயல்திட்டம்

- பிஎம் விகாஸ் திட்டத்தின் மூலம் தனியார் துறையுடனான கூட்டுறவு மேலும் வலுப்பெறும். அத்துடன், தனியார் துறையின் புத்தாக்க ஆற்றல், வணிக திறனையும் அதிகரிக்க முடியும்.
- கைவினைக் கலைஞர்கள் மற்றும் சிறுதொழில் புரிவோருக்கு உதவுவதற்காக, வலுவான செயல்திட்டத்தை உருவாக்க அனைத்து தரப்பினரும் பங்களிக்க வேண்டும்.
- கைவினைஞர்களில் பெரும்பாலானோர் தலித், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் அல்லது பெண்களாக உள்ளனர்.
- அவர்கள் பலனடைய நடைமுறை சார்ந்த வியூகம் அவசியம். கைவினைஞர்களின் தேவைகளுக்கு ஏற்ப நாட்டின் திறன் உள்கட்டமைப்பு செயல்முறையை மறுசீரமைக்க வேண்டியுள்ளது.

### தற்சார்பு இந்தியாவின் சின்னம்

- உள்ளூர் கைவினைப் பொருள்கள் உற்பத்தியில் சிறு கைவினைஞர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவர்களுக்கு பிஎம் விகாஸ் திட்டம் அதிகாரமளிக்கும்.
- கிராமப்புறங்களில் அனைத்துத் தரப்பினருக்கும், அதிகாரமளிப்பது நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானதாகும்.
- திறன்மிக்க கைவினைஞர்களே, 'தற்சார்பு இந்தியா'வின் உண்மையான உணர்வுச் சின்னங்களாவர்.

## பெண்களுக்கு சமகட்ட உரிமைகள் கிடைக்க 50 ஆண்டுகள் ஆகலாம்

### பெண்கள்

- சர்வதேச மக்கள்தொகை எண்ணிக்கை 800 கோடியைக் கடந்தது.
- அதில் சுமார் 391 கோடி பேர் பெண்கள்
- இந்தியாவில் மட்டும் சுமார் 65 கோடி பெண்கள் உள்ளனர்.
- இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் பெண்கள் சுமார் 48 சதவீதம்
- உலகின் மொத்த மக்கள் தொகையிலும் இந்திய மக்கள் தொகையிலும் ஏறக்குறைய சரிபாதிபேர் பெண்கள். ஆனால், பாலின வன்முறைகள் பெண்களுக்கு எதிராகவே அதிகமாக உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. குடும்ப வன்முறை | 4. கொத்தடிமை முறை | 7. அமிலவீச்சுத் தாக்குதல் |
| 2. பாலியல் வன்முறை | 5. சிறார் திருமணம் | 8. நிகரற்ற ஊதியம் |
| 3. சட்டவிரோதக் கடத்தல் | 6. பெண்சிசுக்கொலை | 9. மணக்கொடை |

- இது தவிர சமூகத்தில் நிலவும் பாகுபாடான சூழலும் பெண்களுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

### பெண்கள் பங்களிப்பு

- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு மிக அவசியம். மக்கள்தொகையில் சரிபாதியாக உள்ள பெண்களின் உரிய பங்களிப்பு இன்றி ஒருங்கிணைந்த வளர்ச்சி சாத்தியமில்லை.
  1. ஏழ்மை ஒழிப்பு
  2. மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
  3. பொருளாதார முன்னேற்றம் என அனைத்துத் தளங்களிலும் பெண்களின் பங்களிப்பு அவசியமாகிறது.
- இந்தியா மட்டுமின்றி பல நாடுகளிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கு சட்ட உரிமைகள் வழங்கப்படுவதில்லை என்பதே நிதர்சனமாக உள்ளது.

### பெண்களுக்கு சம சட்ட உரிமைகளை வழங்கும் நாடுகள்

### [உலக வங்கி ஆய்வறிக்கையில் 100 புள்ளிகள்]

- பெல்ஜியம்
- கனடா
- டென்மார்க்
- பிரான்ஸ்
- ஜெர்மனி
- கிரீஸ்
- ஐஸ்லாந்து
- அயர்லாந்து
- லத்வியா
- லக்ஸம்பர்க்
- நெதர்லாந்து
- போர்ச்சுக்கல்
- ஸ்பெயின்
- ஸ்வீடன்

## தொழில் வளர்ச்சி சரி; தொழிலாளர் மேம்பாடு

- 2020-21 கணக்கீட்டின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், இரண்டாம் இடம் வகிக்கும் மாநிலம் தமிழ்நாடு.
- முதல் இடத்தில் மகாராஷ்டிரமும்,
- மூன்றாம் இடத்தில் குஜராத்தும் உள்ளன.
- ஆனால், பதிவு செய்யப்பட்ட தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு முதலிடம் (38,837) வகிக்கிறது. மகாராஷ்டிரம் இரண்டாம் (25,610) இடத்துக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது.

### உழைப்புசக்தி – தமிழக, இந்திய நிலைகள்

- தமிழ்நாட்டில் வேளாண்மையைச் சார்ந்திருக்கும் தொழிலாளர்கள் 29.64% பேர்
- அகில இந்திய அளவில் வேளாண்மையை நம்பியிருக்கும் தொழிலாளர்கள் 46.46%
- தமிழ்நாட்டின் ஆரோக்கியமான போக்குகறில் இதுவும் ஒன்று. வேளாண்மைத் துயிலிருந்து வெளியேறி, மாற்று வேலைகளைத் தேடிக்கொள்வது, கூடுதல் வருவாயை நோக்கி நகர்வது நம் மாநிலத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி.
- தொழில் துறையில் தமிழ்நாட்டில் உழைப்பு சக்தியின் பங்களிப்பு 16.78%. இந்தியசராசரி 10.91%
- கட்டுமானத் துறையில் இதே உழைப்புசக்தி விகிதம் 16.63%. அகில இந்திய நிலைமை 1.08%. மொத்த மற்றும் சில்லறை வணிகத் துறையில் தமிழகப் பங்கு 11.56%. இதன் அகில இந்தியச் சராசரி 10.55%.

### தொழிலாளர்களின் நிலை

- தமிழ்நாட்டின் கிராமப்புற வேலையின்மை 4.8%. அகில இந்திய அளவில், இது 3.3% மட்டுமே. அதே வேளை, நகர்ப்புற வேலையின்மை இந்திய அளவில் 6.7%.
- தமிழ்நாட்டில் 5.8% மட்டும்தான் என்பது ஓர் ஆறுதல்.

### வேலைவாய்ப்பின் தன்மைகள்

- சுயவேலைவாய்ப்பைத் தேடிக்கொள்பவர்களின் இந்தியச் சராசரி 55.6%. தமிழ்நாட்டில் அது 33.9%
- வேளாண்மை அல்லாத பணிகளில் மாதாந்திர ஊதியம் பெறுவோர் இந்திய அளவில் 21.1%; தமிழ்நாட்டில் 31.2%. இதுவும் ஆரோக்கியமான போக்குதான்.
- குறுகியகால, தற்காலிகப் பணிகளைச் செய்துவருபவர்கள், அகில இந்திய அளவில் 23.3% மட்டுமே. தமிழ்நாட்டில் இதன் விகிதம் 34.9%.

### முறைசாராத் தொழிலாளர்களின் நிலை

- தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்களில் 60.1% பேர் முறைசாராத் தொழில் நிறுவனங்களில் வேலை பார்த்து வருகின்றனர். இந்திய அளவில் இது 71.4%.
- தமிழ்நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்களில் 14.8% பேர் பணியாற்றி வருகின்றனர். இதன் அகில இந்தியச் சராசரி 12.3%.
- தமிழ்நாட்டில் தனியார் லிமிடெட் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், 16.7%. இந்தியச் சராசரி 9.9%.
- 15-29 வயது வரை உள்ள இளைஞர்களில் வேலையின்றி இருப்பவர்கள் 20.40%. இது, அகில இந்தியச் சராசரியைக் காட்டிலும் 7% அதிகம்.
- பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்புப் படித்துவிட்டு வேலையின்றி இருப்பவர்கள் தமிழ்நாட்டில் 11.6%. அகில இந்தியச் சராசரி 9.1%.

### தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு

- தமிழ்நாட்டின் தொழிலாளர்களில் எந்தவிதமான ஒப்பந்தமும் அற்றவர்கள் 60. அகில இந்திய அளவில் இது 64.3%.
- எந்தவித சமூகப் பாதுகாப்பும் இன்றிப் பணியாற்றிவரும் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் 48.6%. அகில இந்திய அளவில் இது 53.8%.
- தொழிலாளர்களின் மாதச் சம்பளம் தமிழ்நாட்டில் ரூ.15,154. அகில இந்தியச் சராசரியைவிட தமிழ்நாட்டில் சுமார் ரூ.2,500 குறைவு.
- சுயவேலைவாய்ப்பை நம்பி வாழ்பவர்களின் மாத வருமானம் ரூ.12,357. இந்தியச் சராசரி ரூ.10,75. பெரிய வித்தியாசமில்லை!.

### என்ன செய்ய வேண்டும்?

- வேலைவாய்ப்பை உருவாக்காத பொருளாதார வளர்ச்சியால் முழுமையான பலன் ஏற்படாது.
- தரமான வேலைவாய்ப்புக்கான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். கூடவே, தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அதிரிக்கவும், அதற்கான உறுதியான சட்டங்களை உருவாக்கவும் நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும்.

## எழுத்தறிவு விகிதம் : கடைசி இடத்தில் பிகார்

- ✓ கல்வியில் பாலின மற்றும் சமூக இடைவெளிகளைப் போக்கவும், முழுமையான கல்வித் திட்டம் (சமக்ர சிக்ஷா அபியான்) என்ற திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- ✓ எழுத்தறிவு பெற்ற மாநிலங்களின் விவரங்களின்படி கேரளம் முதலிடத்திலும், பிகார் மாநிலம் கடைசி இடத்திலும் உள்ளன.
- ✓ இந்தப் பட்டியலில் 80.09 சதவீதத்துடன் தமிழகம் 14-ஆவது இடத்தில் உள்ளது.

## மகளிர் மேம்பாடும் அரசின் திட்டங்களும்

### பாலின நிதிநிலை அறிக்கை

- பாலின நிதிநிலை அறிக்கை அல்லது பெண்களுக்கான தனி நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.
- உண்மையில் அத்தகையதொரு முன்னெடுப்பு மிகவும் அவசியம்.
- மக்கள் தொகையல் 50% பங்குவகிக்கும் பெண்களைத் துறை வாரியாக, வாழ்விட வாரியாக, சாதி வாரியாகக் பிரித்துக் கணக்கெடுப்பு நடத்தி, அவர்களின் நிலைக்கேற்ப நிதிநிலை அறிக்கை தயாரிப்பது அவசியம்.

## ஊட்டச்சத்துச் சமமின்மை

- 'ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு' (Malnutrition free Tamil Nadu) என்கிற இலக்கை அடைய இன்னும் தொலைநோக்குத் திட்டங்களும் போதிய நிதியாதாரங்களும் அவசியம்.

### உண்மை நிலை

- 5 வயதுக்கு உள்பட்ட சிறார்களில் வயதுக்கேற்ற உயரம் இல்லாதவர்களின் (குட்டைத்தன்மை) விகிதாச்சாரம் 20%
- அதற்கு மேல், உயரத்துக்கேற்ற எடை இல்லாதவர்கள் 10%க்கும் அதிகம்.
- 40%க்கும் அதிகமானோருக்கு ரத்தசோகைக் குறைபாடு இருக்கிறது.
- உயரத்துக்கேற்ற எடையில்லா சிறார்களின் எண்ணிக்கை 24 மாவட்டங்களில் அதிகம்.
- தமிழ்நாட்டின் ஊட்டச்சத்து தொடர்பான இந்த விரிவான புள்ளிவிவரங்களைப் பன்னாட்டு உணவுக் கொள்கைக்கான ஆய்வு நிறுவனம் (International Food Policy Research Institute) வெளியிட்டிருக்கிறது.
- தமிழ்நாட்டில் பள்ளிக்குச் செல்லும் சிறார்களில் 50%க்கும் அதிகமானோர் தனியார் பள்ளிகளில் உள்ளனர்.
- 5 வயதுக்கு உள்பட்ட சிறார்கள் அனைவரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைத் திட்டத்தின்கீழ் (ICDS) வருகிறார்களா என்பது கேள்விக்குறி.
- ஊட்டச்சத்துச் சமநிலையின்மை அனைத்து வகைக் குழந்தைகளிடமும் நிலவுகிறது.
- ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைத் திட்டம் மூலம் பயன்பெறாத குழந்தைகள், தாய்மார்கள், தனியார் பள்ளியிலுள்ள சிறார்கள் என அனைவரையும் சென்றடையும் விதத்தில் அரசுத் திட்டங்களும் செயலாக்கங்களும் அமைந்தால்தான் அனைவரையும் உள்ளடக்கிய ஊட்டச்சத்துச் சமநிலையை எட்ட முடியும்.

### உடல்பருமன் பிரச்சனை

- ஒட்டுமொத்தமாக உடற்பருமனுடைய வயது வந்த பெண்களின் தமிழக அளவானது (40.4%) இந்திய அளவில் 5வது இடத்தில் உள்ளது.
- இவ்விஷயத்தில் பஞ்சாப் மாநிலத்துக்கு (40.8%) அடுத்த நிலையில் தமிழ்நாடு இருக்கிறது.
- வயது வந்த ஆண்களில் உடல்பருமனுடையவர்கள், தமிழ்நாட்டில் 37%.

- 15-49 வயதுடைய பெண்களில் உயர் ரத்த அழுத்தம் அதிகமுடையவர்கள் 25%.
- நீரழிவு நோய் பாதிப்புள்ளவர்கள் 21%.
- ஆண்களில் உயர் ரத்த அழுத்தமுடையவர்கள் 30%
- நீரழிவு நோயுடையவர்கள் 22% என்று 'தேசியக் குடும்பநல ஆய்வு-5' (NFHS - 2019-21) தெரிவிக்கிறது.

### இறைச்சி உணவு

- மக்களின் உணவு முறையில் ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளின் பங்கு குறைவு.
- தானியங்கள் தவிர பருப்பு, பால் பொருள்கள், பச்சைக் காய்கறிகள், பழங்கள், முட்டை, அசைவ உணவுகள் (மீன், கறி, கோழி இறைச்சி) ஆகிய ஆறு வகை உணவுப் பொருள்களில் மூன்றைக்கூடத் தொடர்ந்து சாப்பிடாத பெண்கள் (15-49 வயது) தமிழ்நாட்டில் 82%.

### சத்தில்லா உணவக உணவு

- உணவகங்களில் தரப்படும் உணவு வகைகளில் தரம் உறுதி செய்யப்படுகிறதே தவிர, என்னென்ன சத்துக்கள் உள்ளன என்பது எங்கும் தெரியப்படுத்தப்படுவதில்லை.

## பெண் காவலர் நலனுக்காக 9 அறிவிப்புகள்

1. பெண் காவலர்களின் நீண்டநாள் கோரிக்கையான ரோல்-கால் எனப்படும் காவல் வருகை அணிவகுப்பு, காலை 7 மணிக்கு பதில் 8 மணி என மாற்றப்படும்.
2. சென்னை, மதுரையல் பெண் காவலர்கள், தங்கும் விடுதிகள் விரைவில் அமைக்கப்படும்.
3. அனைத்து காவல்நிலையங்களிலும் பெண் காவலர்களுக்காக கழிவறை வசதியுடன் தனி ஓய்வறை கட்டித் தரப்படும்.
4. பெண் காவலர்களின் குழந்தைகளுக்காக சில மாவட்டங்களில் காவல் குழந்தை காப்பகம் தொடங்கப்பட்டது. இதை மேம்படுத்த, விரைவில் தேவையான அனைத்து இடங்களிலும் காப்பகம் அமைக்கப்படும்.
5. கருணாநிதி பெயரில் கலைஞர் காவல் பணி விருதும், கோப்பையும் ஆண்டுதோறும் வழங்கப்படும்.
6. பெண் காவலர்களின் குடும்பச் சூழலுக்கு ஏற்ப, விடுப்பு, பணியிட மாறுதல் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும்.
7. பெண் காவலர்களுக்கு தனியாக துப்பாக்கி சுடும் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு விருது, பரிசுகள் வழங்கப்படும். தேசிய அளவிலான பெண் காவலர் துப்பாக்கி சுடும் போட்டியை தமிழகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்படும்.
8. பெண் போலீஸாரின் தேவைகள், பிரச்சனைகள், செயல்திறன் பற்றி கலந்தாலோசிக்க 'காவல் துறையில் பெண்கள்' எனும் தேசிய மாநாடு ஆண்டுதோறும் தமிழகத்தில் நடத்தப்படும்.
9. பெண் காவலர்கள் தங்கள் பணிமுறையை மேலும் செம்மைப்படுத்த, டிஜிபி அலுவலகத்தில் பணி வழிகாட்டும் ஆலோசனை குழு அமைக்கப்படும்.

## தளர்ச்சியடையும் வேலைத்திட்டம்

### MGNREGS

- குடும்பத்தில் ஒருவருக்கு ஓர் ஆண்டில் குறைந்தபட்சம் நூறு நாள் வேலைவாய்ப்பினை உறுதி அளிக்கும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

### புகார்கள்

- இத்திட்டம் வந்ததால் கிராமப்புறங்களில் விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பதில்லை என்றும்,
- வேலைக்கு வராத ஆட்களையும் வந்தது போல் காட்டுவது.
- வேலை செய்வர்களுக்கு சரியான கூலி தராதது என இத்திட்டம் மீது பல புகார்கள் கூறப்படுகின்றன.
- வேலைக்கு வரும் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட அளவு வேலை என நிர்ணயிக்கப்படாததால், மேலோட்டமாக ஓரிரு மணி நேரம் மட்டுமே குழுவாக இவர்கள் வேலை செய்கின்றனர்.
- ஒவ்வொருவருக்கும் தரப்படும் கூலிக்கு ஏற்ப அவர்கள் வேலை செய்தனர் என்பதை உறுதி செய்ய முடிவதில்லை.

### குறைவான நாட்டில் வேலை

- சராசரியாக, 2018 – 19 மற்றும் 2019 – 20 ஆண்டுகளில் முறையே 51 நாட்களும், 48 நாட்களும்
- 2020 – 21 மற்றும் 2021 – 22 ஆண்டுகளில் முறையே 52 நாட்களும் 50 நாட்களும் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் வேலை தரப்பட்டது.

### 20 நாட்கள் நிதிநிலை

- 2023 – 24 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், இத்திட்டத்திற்கு ரூபாய் அறுபதாயிரம் ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இது கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியைவிட 32 சதவீதம் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.
- தற்போது இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் மூலம் 2023 – 24 நிதியாண்டில் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வேலை செய்ய பதிவு செய்து உள்ளவர்களுக்கு சராசரியாக இருபது நாட்கள் மட்டுமே வேலை தர இயலும்.

### பலவீனமடையும்

- குறைவான நாட்களே வேலை கிடைப்பது, வேலை செய்யும் நாட்களுக்கான கூலியும் மிகவும் தாமதமாக வழங்கப்படுவது போன்ற காரணங்களால் நூறு நாள் வேலை உறுதி திட்டத்திற்கு தற்போது கிராமப்புற மக்கள் ஆர்வமாக வராத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
- இந்நிலையில் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு குறைவாக ஒதுக்குவதும், மாநில அரசும் தனது பங்களிப்பை தர வேண்டும் என வலியுறுத்துவதும் இத்திட்டம் பலவீனமடையவே வழிவகுக்கும்.
- இத்திட்டம் நாட்டின் மிகப்பெரிய பெண்கள் பாதுகாப்பு மற்றும் கிராம வளர்ச்சி திட்டம் என்பதில் ஐயமில்லை.
- எனவே, இத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைவதோடு போதிய நிதியும் ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

## மாநில கல்விக் கொள்கைக் குழு

### தேசிய கல்விக் கொள்கையின் நல்ல அம்சங்கள்

- ஓராண்டு மட்டும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படித்தாலோ ஆராய்ச்சி மேற்கொண்டாலோ அம்மாணவர் இந்திய மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தின் பட்டத்தைப் பெற வழி செய்யப்பட்டுள்ளது.
- ஒரு கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் பயிலுகின்ற மாணவர், அதே நிறுவனத்தில் அல்லது இந்தியாவில் அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்தில் உள்ள படிப்புகள் அல்லது பாடத்தில் சேர்ந்து தேர்ச்சி பெறலாம்.
- ஒரு நிறுவனத்தில் பயிலுகின்ற மாணவர், அதே நிறுவனத்தில் அல்லது பிற நிறுவனங்களில், ஒரே சமயத்தில் மற்றுமொரு பட்டப்படிப்பில் நேரடி வகுப்பிலோ இணையவழி மூலமாகவோ சேர்ந்து இரண்டு பட்டங்களை ஒரே நேரத்தில் பெற முடியும்.
- தாய்மொழியில் உயர்கல்வி அளித்தலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு மருத்துவம், பொறியியல் பாடங்களைத் தாய்மொழியில் வழங்க அனுமதியும் நிதியும் அளிக்கப்படுகிறது.

### மாநிலக் குழுவிக்குச் சில யோசனைகள்

- தமிழ்நாடு அரசு 2022 ஜுன் 1 அன்று, தமிழ்நாடு கல்விக் கொள்கையைத் தயார் செய்ய நீதிபதி டி.முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.
- கல்விக்கு மத்திய அரசு அதிக நிதி அளிக்க வேண்டும் என்று பரிந்துரைப்பதோடு, மாநில அரசும் தங்களது நிதிநிலை ஒதுக்கீட்டில் குறைந்தது 20% நிதியை அளிக்க வேண்டும்.
- தமிழ்நாடு மாணவர்களைத் தயார்செய்ய, அவர்கள் விரும்புகின்ற, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பைத் தரக்கூடிய மூன்றாவது மொழியை அவர்கள் விருப்பப் பாடமாக அளிக்கப் பரிந்துரைக்கலாம்.
- தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள உள்கட்டமைப்பு, ஆராய்ச்சிக் கூடங்கள், மென்பொருள்கள், நூல் நிலையங்கள் ஆகியவற்றை மையப்படுத்தப்பட்ட வசதியாக உருவாக்கி, அனைத்து நிறுவன மாணவர் – மாணவியர்க்கும் அனைத்து நிறுவனங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட, தமிழ்நாடு அரசிடம் இக்குழு பரிந்துரைக்கலாம்.

- அரசுப் பல்கலைக்கழகங்களில் செயல்பட்டு வரும் கல்விப் பணியாளர் கல்லூரியில், தனியார் பல்கலைக்கழக, சுயநிதிக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும் பயிற்சிபெற வழிவகை செய்ய வேண்டும்.

## மகளிர் தினமும் போராட்டங்களும்

- பெண்களுக்கு வாக்குரிமை எட்டு மணி நேர வேலை, சங்கம் வைக்கும் உரிமை, உழைப்புக்கேற்ற ஊதியம் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, ரஷ்யாவில் உழைக்கும் பெண்கள் 1917இல் அணிதிரண்ட மார்ச் 8ஆம் தேதிதான் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### இந்தியாவில் பெண்களின் நிலை

- ராஜாராம் மோகன்ராய் போன்ற சீர்திருத்தவாதிகள் போராடியதன் விளைவாக, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1887இல் உடன்கட்டை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- பெண்களுக்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு இந்தியச் சமூகம் கல்வியை மறுத்தது.
- 1848இல் புனேயின் பிடேவாடாவில் முதல் பெண்கள் பள்ளியை ஜோதிராவ் பூலே – சாவித்திரி பாய் தம்பதியினர் இணைந்து தொடங்கினார்கள்.
- தேவதாசி (தேவரடியார்) முறையை எதிர்த்து, தமிழ்நாட்டு மூவலூர் ராமாமிர்தமும் அயர்லாந்தைச் சேர்ந்த பெண்ணியச் செயல்பாட்டாளர் ஏமி கார்மைக்கேலும் போராடினர்.
- மதராஸ் சட்டமன்றத்தின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் முத்துலட்சுமி, தேவதாசி முறையைத் தடை செய்வதற்கான மசோதாவைக் கொண்டுவர 1947இல் தேவதாசி முறையைத் தடைசெய்வதற்கான மசோதாவைக் கொண்டுவர 1947இல் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் நிறைவேறியது.
- தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், பெண்ணுரிமைக்கான பணியைத் தொடர்ந்து செய்திருக்கிறது.

### உரிமைக்கான போராட்டங்கள்

- ஒடுக்கப்பட்ட பெண்கள், மார்பை துணியால் மறைக்கக் கூடாது எனத் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கட்டுப்பாடுகள் இருந்தபோது, அய்யா வைகுண்டர், ஜார்ஜ் ஜோசப் போன்ற தலைவர்கள் இணைந்து முன்னெடுத்த தோள்சீலைக் கலகமானது, இறுதியில் 1859இல் வெற்றி பெற்றது.
- 1943இல் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் முதன்முதலில் மாதர் அழைப்பு உருவாக்கப்பட்டது.
- இந்த அமைப்பு வைத்த முதல் கோரிக்கை மானங்காப்போம் பஞ்சம் தீர்ப்போம் என்பதே.
- இந்தியாவில் முதன்முதலாக 1921இல் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும் அதைத் தொடர்ந்து பம்பாய், சென்னை மாகாணங்களிலும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

## மாதவிடாய் விடுப்பு

- மாணவியருக்கும் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் மாதவிடாய் விடுப்பு வழங்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்துமாறு டெல்லியைச் சேர்ந்த சைலேந்திர மணி திரிபாதி பொதுநல வழக்கு ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தார்.
- பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு வழங்கும்பட்சத்தில் பெரும்பாலான நிறுவனங்களில் இதைக் காரணம் காட்டிப் பெண்களை வேலைக்கு எடுக்கத் தயங்குவார்கள்.
- இது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட பிரச்சனை.
- அரசின் கொள்கை முடிவோடு தொடர்புடையது என்று சொன்ன தலைமை நீதிபதி, இந்த விவகாரத்தை மத்திய அரசின் குழந்தைகள் – மகளிர் மேம்பாட்டு அமைச்சகத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லும்படி அறிவுறுத்தி, மனுவைத் தள்ளுபடி செய்தார்.

## பீகாரில்

- பீகாரில் பெண்களுக்கு மாதவிடாய் விடுப்பு அளிப்பதைப் பொதுநல மனுவில் சுட்டிக்காட்டியதுடன், இது மகப்பேறு நலன் சட்டம் 1961 பிரிவு 14க்கு எதிரானது.
- கூட்டாட்சி, மாநில அரசின் கொள்கைகள் போன்றவற்றின் பெயரால் பெண்களைப் பிரித்துப் பார்ப்பது தவறு.
- மாதவிடாய் நாள்களில் பெண்கள் அனைவரும் உடலியல், உளவியல்ரீதியாக ஒரே மாதிரி பிரச்சினைகளைச் சந்திக்கையில், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையில் பெண்கள் நடத்தப்படுகின்றனர்.
- இந்தியக் குடியுரிமை பெற்ற பெண்கள் அனைவரும் மாதவிடாய் விஷயத்தில் சமமாக நடத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## இந்தியாவில் மாதவிடாய்

- இயற்கை நிகழ்வான மாதவிடாய் தீட்டு என்று இந்தியாவில் இன்றைக்கும் நம்பப்படுகிறது.
- மாதவிடாய் நாள்களின் மூடநம்பிக்கைகள் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுகின்றன.
- போதிய விழிப்புணர்வு இல்லாததால், மாதவிடாய் சுகாதாரம் குறிக்கும் பெரும்பாலானோர் கவலைப்படுவதில்லை.
- இந்தியாவில் 15-24 வயதுக்கு உள்பட்ட பெண்களில், 49.6% பேர் மாதவிடாய் நாள்களில் துணிகளைப் பயன்படுத்துவதாக தேசியக் குடும்பநலக் கணக்கெடுப்பு-5 தெரிவிக்கிறது.

## பொருளாதாரம்

- மாதவிடாய் நாள்களின் சுகாதாரம் என்பது பெண்களின் சமூக-பொருளாதார நிலையுடன் நேரடித் தொடர்பு கொண்டது.
- சமூக அந்தஸ்தில் மேம்பட்ட நிலையிலிருக்கும் பெண்கள், மாதவிடாய் நாள்களில் சிறப்பான முறையில் (95.1%) சுகாதாரத்தைப் பேணுகிறவர்களாகவும், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் இது குறித்துப் போதிய அக்கறை (53.6%) செலுத்த முடியதவர்களாகவும் இருக்கிறார்கள்.
- பெண்கள் எளிதில் வாங்க முடிகிற தொலைவில் நாப்கின்கள் கிடைப்பதைப் பொறுத்தும் அவர்களின் மாதவிடாய் சுகாதாரம் அமைகிறது.

## அரசின் கொள்கை

- மாதவிடாய் விடுப்பு அளிக்கப்படுவதாகச் சொல்லப்படும் பிஹாரில்தான் பெண்களின் மாதவிடாய் சுகாதாரம் மிகக் குறைவு (59%)
- மாதவிடாய் சுகாதாரத்தில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது (98.4%).

## தடைபடும் வளர்ச்சி

- கல்வி நிறுவனங்களிலும் பணியிடங்களிலும் இருக்கிற கட்டமைப்புப் போதாமை மாதவிடாய் நாள்களில் பெண்களைப் பெருமளவில் பாதிக்கிறது.
- போதுமான எண்ணிக்கையில் கழிப்பறை இல்லாதது, தண்ணீர்த் தட்டுப்பாடு, நாப்கின்களை அப்புறப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லாதது
- கழிப்பறையைப் பயன்படுத்த நேரம் கொடுக்கப்படாதது உள்ளிட்ட பல காரணங்கள் பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்றன.

## ஆதரவும் எதிர்ப்பும்

- நிறுவனங்களின் இந்தப் பாலினப் பாகுபாட்டு அணுகுமுறையை மாற்றுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் தவிர, மாதவிடாய்

விடுப்பை மறுபரிசீலனை செய்வது பெண்களுக்குச் செய்யும் அநீதி என்பது ஆதரவாளர்களின் வாதம்.

- மாதவிடாய் என்பதை, பெண்களுக்கு நிகழும் உடலியல் நிகழ்வு என்று சுருக்கிவிடாமல், மனித குலத்தின் மறு உற்பத்தியில் ஈடுபடுகிறவர்கள் பெண்களே என்கிற விரிவான கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும். அதில் நாம் காட்டுகிற அலட்சியம் எதிர்காலச் சந்ததியின் நலனை நேரடியாகப் பாதிக்கும்.

## ஜல்சக்தி

- நாடு முழுதும், 11.49 கோடி வீடுகளுக்கு, குழாய் இணைப்பு வாயிலாக குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.
- 1.53 லட்சம் கிராமங்களில், அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வசதி கிடைக்கிறது.
- பள்ளிகள் அங்கன்வாடி மையங்கள், முன்னேற்றத்துக்கு ஆர்வமுள்ள மாவட்டங்களில் குழாய் இணைப்பு வாயிலாக குடிநீர் விநியோகம் செய்ய, நடப்பு நிதியாண்டில், 70 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. கடந்த 2018-2019 உடன் ஒப்பிடுகையில் இது, 12 மடங்கு அதிகம்.
- 9.34 லட்சம் அங்கன்வாடி மையங்களுக்கு, மூன்று ஆண்டுகளில் குழாய் இணைப்பு வாயிலாக குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. இது, 37 மடங்கு உயர்வாகும்.
- நாடு முழுவதும், 9.02 லட்சம் பள்ளிகளுக்கு குழாய் இணைப்பு வாயிலாக குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. இது, 18 மடங்கு உயர்வாகும். முன்னேற்றத்துக்கு ஆர்வமுள்ள மாவட்டங்களில் குடிநீர் வசதி, 6 மடங்கு அதிகரித்துள்ளது.
- ஹரியானா, குஜராத், கர்நாடகா, மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம் மாநிலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும். 80 மாவட்டங்களைச் சேர்ந்த, 8,220 கிராம பஞ்சாயத்துகளில், நிலத்தடி நீரை சேமிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, 6,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.
- கங்கை தூய்மை இயக்கத்தின் கீழ், 32 ஆயிரத்து 912 கோடி ரூபாய் செலவில், 409 திட்டங்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டன; 232 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 'ஸ்வச் பாரத்' எனப்படும் தூய்மை இந்தியா இயக்கம், 2014, அக்., 2ல் துவக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, 11 கோடி வீடுகளுக்கு கழிப்பறை வசதி செய்யப்பட்டுள்ளது. 2.23 லட்சம் சமூக சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.
- நாடு முழுவதும் உள்ள அனைத்து கிராமங்கள், கிராம பஞ்சாயத்துகள், மாவட்டங்கள், பொது இடத்தில் அசுத்தம் செய்யப்படாதவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## ராஜஸ்தானில் அமலான சுகாதார உரிமை

- நாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சுகாதார உரிமை சட்டம் காங்கிரஸ் ஆளும் ராஜஸ்தானில் அமலாகி உள்ளது.
- இந்த சட்டத்தின்படி, விபத்துகளில் படுகாயம் அடைந்தும் அல்லது பிற பாதிப்புகளுக்கும் அவசர சிகிச்சை பிரிவுக்கு வரும் அனைவருக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.
- முன்தொகை, சிகிச்சைக்கான தொகை, மருந்துகளுக்கான தொகை என எதையும் பெறக்கூடாது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கும் இது பொருந்தும்.
- இந்த சட்டத்திற்கு தனியார் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.
- சுகாதார உரிமை சட்ட விதிகளை மீறும் தனியார் மருத்துவமனைகளின் உரிமங்களை அப்பகுதி பஞ்சாயத்து தலைவர் அல்லது அதன் உறுப்பினரே ரத்து செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.
- இதை ரத்து செய்து, முன்பு இருந்தது போல், மாநில சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அந்த உரிமை அளிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இலவச அவசர சிகிச்சைக்கான தொகையை மாநில அரசே அளிக்கவும் முன் வந்துள்ளது.

# 03 இந்திய அரசியலமைப்பு

## அமைச்சரவை பரிந்துரைக்கும் முடிவை கவர்னர் ஏற்க வேண்டும்: சுப்ரீம் கோர்ட்

- 'சட்டசபை கூட்டத்தை கூட்டும் படி மாநில அமைச்சரவை முடிவு எடுத்து பரிந்துரை செய்தால், அதையேற்று சட்ட சபையை கூட்ட, கவர்னர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.
- இந்த பிரச்சனையில் மாநில அமைச்சரவையின் முடிவுகளுக்கு கவர்னர் கட்டுப்பட்டவர். அதே நேரத்தில், கவர்னர் கேட்கும் கேள்விகளுக்கு முதல்வர் பதில் அளிக்க வேண்டும்'. என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### உத்தரவு

- நாம் வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஒரு விஷயம் தொடர்பாக மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம்.
- ஆனால், அரசியல் அமைப்பு சட்டப்படி நாம் செயல்பட வேண்டும்.
- சட்டசபை கூட்டத் தொடரை கூட்டுவது தொடர்பாக மாநில அமைச்சரவை ஒரு முடிவை எடுத்து, அது தொடர்பாக கவர்னருக்கு பரிந்துரைத்தால், அதை கவர்னர் ஏற்க வேண்டும்.
- அமைச்சரவை முடிவை ஏற்று, சட்ட சபையை கூட்ட கவர்னர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்; இதற்கு கவர்னர் கடமைப்பட்டவர்.
- நம் அரசியல் அமைப்பு சட்டப்படி கவர்னர் என்பவர், எந்த ஒரு அரசியல் கட்சியையும் சேராதவர்.
- அரசமைப்பு கடமையை நிறைவேற்றுவதில், முதல்வருக்கும் சம பங்கு உள்ளது.
- கவர்னர் கேட்கும் தகவல்களுக்கு முதல்வரின் அலுவலகமோ, அல்லது சம்பந்தப்பட்ட செயலரோ, பதில் அளிக்க வேண்டும்.

## தேர்தல் ஆணையரை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும்

### உச்சநீதிமன்றம் தீர்ப்பு

- பிரதமர், மக்களவை எதிர்க்கட்சி தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும் என உச்சநீதிமன்றம் நேற்று வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை அளித்தது.

### அருண் கோயல்

- மத்திய அரசின் கனரக தொழில்துறை அமைச்சகத்தின் செயலாளராக இருந்தவர் அருண் கோயல். பஞ்சாப் மாநில ஐஏஎஸ் அதிகாரியான இவர் கடந்த ஆண்டு நவம்பர் 18-ம் தேதி தானாக முன்வந்து ஓய்வு பெற்றார்.
- ஆனால், மறுநாளே இவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.
- தற்போதைய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமாரின் பதவிக்காலம் 2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிவடைகிறது.
- அதன்பின் அருண் கோயல் தலைமை தேர்தல் ஆணையராக இருப்பார். மொத்தம் 5 ஆண்டுகளுக்கு மேல் இவர் தேர்தல் ஆணையத்தில் இருப்பார்.
- தேர்தல் ஆணையராக அருண் கோயல் நியமனம் மின்னல் வேகத்தில் நடந்ததற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பலர் மனுத்தாக்கல் செய்தனர்.

### அரசியல் சாசன அமர்வு விசாரணை

- அரசியல் சாசன அமர்வு விசாரணை நடத்தியது. அப்போது முன்னாள் அரசு அதிகாரி அருண் கோயலை 24 மணி நேரத்திற்குள் மின்னல் வேகத்தில் நியமனம் செய்தது ஏன்?
- இது எந்த மாதிரியான மதிப்பீடு? அருண் கோயல் நியமனம் தொடர்பான அசல் கோப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
- அருண் கோயலின் தகுதி நம்பகத்தன்மை குறித்து நாங்கள் கேள்வி எழுப்பவில்லை. நியமன நடைமுறை பற்றித்தான் கேள்வி எழுப்புகிறோம்.

- தேர்தல் ஆணையர் பதவிக்கு 4 பெயர்கள் அடங்கிய பரிந்துரையை மத்திய சட்ட அமைச்சர், பிரதமருக்கு பரிந்துரை செய்துள்ளார்.
- இவர்களில் யாருமே 6 ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்யமாட்டார்கள் என மத்திய அரசிடம் உச்சநீதிமன்றம் கூறியது.

### சட்டம் இயற்றும்வரை...

- பிரதமர், மக்களவை எதிர்கட்சி தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும்.
- மக்களவை எதிர்க்கட்சி தலைவர் இல்லை என்றால், தனிப்பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சியின் தலைவர், இந்த குழுவில் இடம் பெற வேண்டும்.
- தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும்வரை இந்த நடைமுறை தொடரும்.
- ஜனநாயகத்தில் தேர்தல் எந்தவித சந்தேகமும் இன்றி நியாயமாக நடைபெற வேண்டும். புனிதத்தன்மை காக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் ஏற்படும்.
- அரசியல் சாசன அமைப்புக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் சட்டப்படி செயல்பட வேண்டும்.
- அரசியல் சாசனத்தின் 324-வது பிரிவில், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நியமனத்துக்கு சட்டம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆனால் எந்த சட்டத்தையும் நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை.

## மாநில மொழியில் தீர்ப்பு

- இந்தியாவிலேயே முதன்முறையாக, கேரள உயர்நீதிமன்ற இணையதளத்தில் இரண்டு தீர்ப்புகள் மலையாளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளது பாராட்டத்தக்க நடவடிக்கை.
- உலகத் தாய்மொழி தினமான பிப்ரவரி 21 அன்று, இந்தத் தீர்ப்புகள் வெளியிடப்பட்டிருப்பதன் மூலம், மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்டவர்களுக்குக் கேரள உயர்நீதிமன்றம் பெருமை சேர்த்திருக்கிறது.
- சென்னை உயர்நீதிமன்றம் தமிழில் தீர்ப்புகளை வெளியிட வேண்டும் என்று தமிழ்நாடு பார்கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.
- இந்திய அரசமைப்புக்கூறு 348(1)(a) உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்களின் அனைத்து நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்று கூறினாலும், உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில், மாநிலத்தின் அதிகாரபூர்வ நோக்கத்துக்காக இந்தி அல்லது வேறு மொழிகளைப் பயன்படுத்துவதைக் குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற்று ஆளுநர் அங்கீகரிக்கலாம் என்கிறது 348(2) கூறு.

### இந்தியாவில்

- இந்தியாவில் 1950ஆம் ஆண்டிலேயே ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தில் இந்தியைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.
- 1965இல் உயர்நீதிமன்றங்களில் ஆங்கிலம் அல்லாத வேறு மொழியைப் பயன்படுத்தும் எந்த முன்மொழிவுக்கும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்று நிபந்தனை விதித்து, மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது.
- அதன் தொடர்ச்சியாக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதலுக்குப் பிறகு, உத்தரப்பிரதேசம் (1969), மத்தியப்பிரதேசம் (1971), பிஹார் (1972) உயர்நீதிமன்றங்களில் இந்தியைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

### SVVAS

- இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று உச்சநீதிமன்றம் இந்தி, தமிழ், குஜராத்தி, ஒடியா ஆகிய நான்கு மொழிகளில் தீர்ப்புகளை வெளியிட்டு, புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தது.
- இதற்காகவே தீர்ப்புகளை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கும் வகையில் 'SUVAS' என்ற பிரத்யேக மென்பொருள் கருவியை உருவாக்க, நீதிபதிகள் அடங்கிய செயற்கை நுண்ணறிவுக் குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்தது.
- இந்தக் கருவியைப் பயன்படுத்தியே கேரள உயர்நீதிமன்றம் தற்போது மலையாளத்தில் தீர்ப்புகளை வெளியிட்டுள்ளது.

## ஆளுநர்கள் சர்ச்சை

- தமிழ்நாட்டில் 35 ஆண்டுகளாக விற்பனையில் இருந்த லாட்டரிச்சீட்டு, 2003 இல் தடை செய்யப்பட்டது.
- லாட்டரிச்சீட்டால் எண்ணற்ற குடும்பங்கள் சீரழிந்த நிலையில், தமிழ்நாடு அரசு இந்த முக்கிய முடிவை எடுத்தது.
- 19 ஆண்டுகளாகக் காணாமல் போயிருந்த லாட்டரிச் சூதாட்டம், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஆன்லைன் சூதாட்டமாகப்

பரிணமித்துள்ளது.

### ஒப்புதல் அளிக்காத ஆளுநர்

- ஆன்லைன் சூதாட்டத்துக்குத் தடை விதித்துச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்துக்கு ஒப்புதல் கோரி ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
- நான்கு மாதங்கள் ஆன நிலையிலும்கூட இந்தச் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காதது வேதனையளிக்கிறது.
- ஆன்லைன் சூதாட்டத் தடைச்சட்டம், அரசமைப்பு விதிகளின்படி மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இல்லை என ஆளுநர் முடிவு செய்தால் அதனை நிராகரிக்கவோ குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கவோ வேண்டும்.
- இதில் எதையும் செய்யாமல், சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காமல் காலம் தாழ்த்துவதை, அரசமைப்பு சார்ந்த தனது கடமையை ஆளுநர் செய்யத் தவறியதாகவே கொள்ள வேண்டும்.

### குட்டுவைத்த நீதிமன்றம்

- இந்திய அரசமைப்பின் 361ஆவது கூறின்படி, குடியரசுத் தலைவரையும் மாநில ஆளுநரையும் கேள்வி கேட்கும் அதிகாரம் யாருக்கும் வழங்கப்படவில்லை.
- அரசமைப்பின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக எந்த நீதிமன்றமும் கேள்வி கேட்க முடியாத வகையில் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- ஆனால், ராஜிவ்காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன் உள்ளிட்ட கைதிகளை விடுதலை செய்வதில் முடிவெடுக்க ஏன் காலதாமதம் என்று ஆளுநரிடம் உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.
- அது மட்டுமல்லாமல், தனது தனிப்பட்ட அதிகாரமான சட்டப்பிரிவு 142 இன்படி, தனக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுவித்தது.
- இத்தகைய சூழலில், நீதிமன்றக் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்கிற கவசத்துக்குள் அமர்ந்து கொண்டுள்ள ஆளுநர்களை, நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குள் கொண்டுவர வேண்டிய தேவை எழுந்துள்ளது.

## தேர்தல் ஆணையர் நியமனம்

### சிறப்பு மிக்க தீர்ப்பு

- பிரதமர், மக்களவை எதிர்கட்சித் தலைவர் அல்லது அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் பரிந்துரைப்படி தலைமைத் தேர்தல் ஆணையரையும், பிற தேர்தல் ஆணையர்களையும் குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட அமர்வு தீர்ப்பளித்துள்ளது.
- இதற்கென நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும்வரை இந்த வழிமுறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு இது.
- தேர்தல் ஆணையராக அருண் கோயல் அவசர அவசரமாக நியமிக்கப்பட்டதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கின் ஒரு பகுதியாகவே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.
- தேர்தல் ஆணையம் என்பது அரசமைப்பு ரீதியான அமைப்பாகும். தேர்தல்களை நடத்துவது, கண்காணிப்பது, கட்டுப்படுத்துவது என ஜனநாயகத்தின் விழுமியங்களைக் காக்கும் வகையில் மிகப் பெரிய அதிகாரங்களைப் பெற்றிருக்கும் நாட்டின் மிக முக்கியமான ஓர் அங்கம் அது.

### 324ஆவது கூறு

- இந்திய அரசமைப்பின் 324ஆவது கூறு, நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு சட்டத்தின்படியும் தேர்தல் ஆணையர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கலாம் என்கிறது.
- ஆனால், பொதுவாக மத்திய அரசின் ஆலோசனையின் பேரிலேயே தலைமைத் தேர்தல் ஆணையரையும் பிற தேர்தல் ஆணையர்களையும் குடியரசுத் தலைவர் நியமிப்பது வழக்கமாக இருந்துவருகிறது.
- சிபிஐ இயக்குநர் போன்ற உயர் பதவிகளுக்கான நியமனங்கள் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் பரிந்துரைப்படியே நடைபெறுகின்றன.
- அந்த வகையில், தேர்தல் ஆணையர்களை நியமனம் செய்யும் முறைக்கும் குழு ஏற்படுத்தி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது ஜனநாயகத்துக்கு வலுசேர்க்கும் நடவடிக்கை ஆகும்.

## 80 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி

- இந்தியாவில் முதல்முறையாக 80 வயதுக்கும் மேற்பட்டவர்களும் மாற்றுத் திறனாளிகளும் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் முறையை அறிமுகம் செய்ய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.
- 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒருவேளை நடமாட முடியாத சூழ்நிலையில், அவர்களின் வாக்குரிமையை மதிக்கும் வகையில் வீட்டில் இருந்தபடியே வாக்களிக்கும் முறையை அறிமுகம் செய்கிறோம்.
- இந்த வசதியைப் பெற முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இதன்பேரில் தேர்தல் ஊழியர்கள், வீட்டுக்குச் சென்று மிகவும் ரகசியமாக படிவம் 12டி-இல் வாக்கை பதிவு செய்து கொள்வார்கள்.
- இந்த நடைமுறைகள் அனைத்தும் காணொலியாகப் படமாக்கப்படும். மேலும் இந்தத் தகவல் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகளுக்காக சக்ஷம் என்ற கைப்பேசி செயலி மேம்படுத்தப்பட்டுள்ளது. அதில் வாக்களிக்கும் வாய்ப்பை தேர்வு செய்து கொள்ளலாம்.
- நேரில் வர விரும்பினாலோ, வீட்டில் இருந்தபடியே வாக்களிக்க விரும்பினாலோ, அதற்கேற்ப வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

### செயலி

- வேட்பாளர்களின் நலன் கருதி சுவிதா என்ற கைப்பேசி செயலி தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலியைப் பயன்படுத்தி வேட்பாளர்கள் வேட்புமனுக்களையும் உறுதியேற்புப் பத்திரங்களையும் தாக்கல் செய்யலாம்.
- இந்தச் செயலியை பயன்படுத்தி, கூட்டங்கள், பேரணிகளுக்கான முன் அனுமதியையும் வேட்பாளர்கள் பெறலாம்.

## ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம்

- நாட்டின் சமூக விழுமியங்களுக்கு ஒரே பாலின திருமணங்கள் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் எனக்கூறி, அதுபோன்ற திருமணங்களுக்கு சட்ட அங்கீகாரம் அளிக்க உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
- மனித உறவுகளுக்கு அங்கீகாரமும் உரிமைகளும் அளிப்பது, சட்டம் மற்றும் சலுகைகள் வழங்குவதில் விளைவுகளைக் கொண்டுள்ளன.
- அந்த அங்கீகாரத்தையும், உரிமைகளையும் வழங்குவது சட்டம் இயற்றுவது தொடர்பான செயல்பாட்டின் அடிப்படை பண்பாக உள்ளது.
- இது நீதிமன்றத் தீர்ப்புக்குட்பட்ட விஷயமாக இருக்க முடியாது. எனவே, மனுதாரர்களின் கோரிக்கை முற்றிலும் ஏற்க முடியாததாக இருப்பதுடன் தவறாகவும் உள்ளது.

### திருமண உறவு

- ஹிந்துக்களைப் பொருத்தவரை திருமணம் என்பது தங்கள் கடமைகளைச் செய்வதற்கு ஆணும் பெண்ணும் இணையும் புனிதமான மதச் சடங்கு.
- முஸ்லிம்களுக்கு திருமணம் என்பது ஒப்பந்தம்.
- அவர்களுக்கு இடையிலும் ஆணும் பெண்ணும் இணைவதுதான் திருமணம் என்று கருதப்படுகிறது.
- எனவே, மதம் மற்றும் சமூக விதிமுறைகளில் ஆழமாக பதித்து வைக்கப்பட்டுள்ள நாட்டின் சட்டக் கொள்கையை மாற்றுமாறு உச்சநீதிமன்றத்திடம் தீர்ப்பு கோருவதை ஏற்க முடியாது.
- ஒரே பாலினத்தவர்கள் விருப்பத்துடன் பாலுறவு கொள்வது குற்றமல்ல என்று உச்சநீதிமன்றம் ஏற்கெனவே தீர்ப்பளித்ததால், நாட்டுச் சட்டங்களின் கீழ் ஒரே பாலின திருமணத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதை அடிப்படை உரிமையாகக் கோர முடியாது.
- ஒரே பாலின திருமணங்கள் போன்றவற்றை மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை. அதேவேளையில், அதுபோன்ற திருமணங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படாது.

### தன் பாலின திருமணம் தொடர்பான தீர்ப்பு

#### உச்சநீதிமன்ற தீர்ப்பு :

- செப்டம்பர் 6, 2018 ல் தன்பாலின உறவு குற்றமற்றது அல்ல என்று உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது.
- தன்பாலின திருமணத்தை பகுத்தறிவற்ற, பாதுகாப்பற்ற மற்றும் வெளிப்படை தன்மை கொண்ட தன்னிச்சையான குற்றமாக கருதப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 377ன் மீது 2018 ல் உச்சநீதிமன்றமானது தீர்ப்பினை வழங்கியது.

#### மத்திய அரசானது தன்பாலின திருமணத்திற்கு எதிரான பிராமண பத்திரத்தை தாக்கல் செய்தது :

- தன்பாலின திருமணம் என்பது இந்திய குடும்ப அமைப்பு என்ற கருத்துடன் ஒத்துப்போகாது.
- இந்திய குடும்ப அமைப்பு என்பது கணவன், மனைவி மற்றும் குழந்தை-களை உள்ளடக்கியது.
- இந்திய குடும்ப அமைப்பில் ஆண், பெண் என உயிரியல் வேறுபாடுகள் கொண்ட இருவர் திருமண ஒப்பந்தம் செய்து கொண்டு குழந்தைப் பெற்றுக்கொள்வதே சிவில் சமூகம் ஆகும்.
- மத்திய அரசானது தன்பாலின திருமணமானது சமூக ஒழுக்கம் மற்றும் இந்திய நெறிமுறைகளுக்கு இணங்கவில்லை என்று தெரிவித்துள்ளது.
- மேலும், மத்திய அரசானது உயிரியல் ரீதியான ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான திருமணம் தனிப்பட்ட சட்டங்கள் அல்லது இந்து திருமணம் சட்டம் 1955, கிறித்துவ திருமணச் சட்டம் 1872, பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1936, சிறப்பு திருமணச் சட்டம் 1954 மற்றும் வெளிநாட்டு திருமணச்சட்டம் 1969ன் கீழ் நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

#### தன்பாலினம் தொடர்பான வழக்குகள் அரசியல் சாசன அமர்விற்கு மாற்றம் :

- இந்நிலையில் இந்தப் பிரச்சினையானது பின்வரும் சமூக மேம்பாட்டின் மீது அழுத்தம் செலுத்தக்கூடியது.
- ஆதலால் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கூறியதாவது, "அரசியலமைப்பு விதி 145(3) ன் படி தன்பாலின திருமணமானது, இரட்டை மதிப்புடன் விளங்குவதால் P.S. நரசிம்மா மற்றும் ஜே.பி. பர்திவாலா ஆகியோர் அடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்விற்கு மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

### தன் பாலின ஈர்ப்பாளர் திருமணம்

- 2018இல் நவ்தேஜ் சிங் ஜோஹர் வழக்கில் உச்சநீதிமன்றம், '18 வயதைக் கடந்த தன்பாலின ஈர்ப்பாளர்களுக்கு இடையிலான பரஸ்பர சம்மதத்துடன் கூடிய பாலியல் உறவு குற்றம் அல்ல' என்று தீர்ப்பளித்தது.
- இதன் மூலம் தன்பாலின ஈர்ப்பாளர்கள் தங்களது பாலின ஈர்ப்பை மறைத்து வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.
- திருமணம் செய்துகொண்டோ செய்து கொள்ளாமலோ இணைந்து வாழ்தல் என்பது காதல் உறவின் இயற்கையான நீட்சி. இந்தியா உள்ளிட்ட நாடுகளில் திருமணம் செய்து கொண்ட இணையர்களுக்குக் கூட்டு வங்கிக் கணக்கு தொடங்கிக் கொள்வது தொடங்கி குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்வது.
- சொத்தில் பங்கு கோருவது வரையிலான பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
- தன்பாலின இணையர்களுக்கிடையிலான திருமணம் சட்டப்படி செல்லாது என்பதால் அவர்களுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்படுகின்றன.
- பெரும்பாலான தனிச்சட்டங்கள் மதங்கள், சாதிகளைக் கடந்த திருமணங்களையும் அங்கீகரிப்பதில்லை.
- அதுபோன்ற திருமணங்கள் சிறப்புத் திருமணச் சட்டம் 1954இன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.
- தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களையும் அதன் கீழ் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு திறந்த மனதுடன் பரிசீலிக்க வேண்டும்.

## தேர்தல் ஆணையர் நியமன முறையில் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்

#### செய்தியில்

- சமீபத்தில் முன்னால் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி அருண் கோயல் அவர்கள் இந்திய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார். இதில் பரபரப்பை ஏற்படுத்திய விவகாரம், அவர் விருப்ப ஓய்வு பெற்ற மறுநாளே தேர்தல் ஆணையராக குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட நடைமுறை தான்.

## வழக்கு

- இதனால் உச்சநீதிமன்ற நீதிபதிகள் முன் இவ்வழக்கானது வந்தபோது, நீதபதிகள், வெறும் 24 மணி நேரத்திற்குள்ளாக நாட்டின் உயர்ந்த பொறுப்பாக கருதப்படும் தேர்தல் ஆணையர் நியமனத்தில் காற்றைக் கிழிக்கும் வேகத்தில் செயல்பட என்ன காரணம்? என்று கேள்வி எழுப்பினர்.

## ஜனநாயகம் (மக்களாட்சி)

- மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் அரசாங்கம் மக்களாட்சி எனப்படும். இதன் உண்மையான சோதனை என்பது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடத்தும் முறையில் தான் உள்ளது. இது சரியான நபர் நாட்டின் உயர்ந்த அரசியல் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுப்பதை உறுதி செய்யும்.

## இந்திய தேர்தல் ஆணையம்

- இந்திய அரசியலமைப்புச் சரத்து- 324ன்படி, ECI ஒரு சுதந்திரமான அரசியலமைப்பு அங்கீகாரம் கொண்ட அமைப்பாகும். இதன் முக்கிய பணியாக,
  1. நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு தேர்தல் நடத்துவது
  2. பிழையில்லா வாக்காளர் பட்டியலை தயார் செய்வது.
- தேர்தல் ஆணையத்தின் முக்கிய சீர்திருத்தம் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் T.N. சேஷனின் காலத்தில் நடைபெற்றது (1991 – 96). அவை,
  1. இந்திய தேர்தல் ஆணையம் பல – நபர் ஆணையமாக மாறியது.
  2. புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை
  3. தேர்தல் நடத்தை விதிமுறைகள் மிகவும் கண்டிப்பான முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்தார்.

## தேர்தல் ஆணையரின் சமமான அதிகாரம்

- 1991-க்குப் பின் உச்சநீதிமன்றம், இரு தேர்தல் ஆணையர்களின் நியமனம் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையருக்கு நிகரான அதிகாரம் என்பன போன்றவற்றை சட்டப்பூர்வமாக அங்கீகரித்தது.

## உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்

## நியமயம்

- ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசமைப்பு அமர்வானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களுக்கான நியமன முறையில் பிரதமர், மக்களவை எதிர்கட்சி தலைவர் அடங்கிய குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை சேர்ப்பது மூலம் அதன் நடுநிலைத்தன்மை உறுதிப்படும். இக்குழுவின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய ஒப்புதல் வழங்க வேண்டும்.

## நீக்கம்

- இரு தேர்தல் ஆணையர்களின் நீக்குவதற்கான நடைமுறைகள் தலைமைத் தேர்தல் ஆணையரின் நீக்க நடைமுறைக்கு சமமானதாக இருக்கக் கூடாது.
- தற்போது தலைமைத் தேர்தல் ஆணையரின் நீக்கம் உச்சநீதிமன்ற நீதிபதியின் நீக்க நடைமுறை போல் உள்ளது. மற்ற இரு ஆணையர்களும் தலைமத் தேர்தல் ஆணையர் பரிந்துரையின்படி நீக்கப்படுகின்றனர்.
- தற்போதைய பதவிக்காலம் : 6 ஆண்டுகள் (அ) 65 வயது வரை

## நிதி மற்றும் செயலகம்

உச்சநீதிமன்றம்

i) தேர்தல் ஆணையத்துக்கான நிதி வசதி

ii) நிரந்தரச் செயலகம் (ம)

iii) தொகுப்பு நிதியில் இருந்து (வாக்களிக்கும் – உரிமை)

ஆகியவற்றின் மீது முடிவெடுப்பதை மத்திய அரசாங்கத்திடம் விட்டுவிட்டது.

## சவால்கள்

- உச்சநீதிமன்றம் EC நியமனம் மீது கொடுத்த வழிகாட்டுதல் அதிகாரப் பிரிவு முறையை மீறிய செயலாகக் கருதப்படுகிறது.

### மாற்றுப் பார்வை

- சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட நிர்வாக முறையில் இல்லாத போது அரசியலமைப்பு வெற்றிடத்தை நிரப்ப உச்சநீதிமன்றம் தலையிடலாம்.

### எதிர்காலப் பாதை

- மத்திய அரசும், உச்சநீதிமன்றமும் உறுதியான முடிவுகள் எடுத்து தேர்தல் ஆணையத்தின் புனிதத் தன்மை மற்றும் மக்களாட்சியின் மாண்புகள் காக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## ஆயுத இறக்குமதியில் இந்தியாவுக்கு முதலிடம்

✓ ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக் ஹோமை சேர்ந்த ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி, ஆய்வு நிறுவனம், ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி குறித்த வருடாந்திர அறிக்கையை வெளியிட்டது.

### ஏற்றுமதி

✓ 2022-ம் ஆண்டில் சர்வதேச அளவில் அதிக ஆயுதங்களை ஏற்றுமதி செய்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

✓ இரண்டாவது இடத்தில் ரஷ்யா உள்ளது.

### இறக்குமதி

✓ அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது.

✓ இந்தியாவுக்கு அதிக ஆயுதங்களை வழங்கிய நாடுகளில் ரஷ்யா 45 சதவீதத்துடன் முதலிடத்தில் இருக்கிறது.

✓ பாகிஸ்தான், சீனாவின்அச்சுறுத்தல் காரணமாக இந்திய அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகிறது.

## இந்தியா - ஆஸ்திரேலியா

### பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம்

- இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் வலிமையான உறவு இந்திய-பசிபிக் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியம்.
- 'க்வாட்'அமைப்பைச் சேர்ந்த இந்த இரு நாடுகளின் கூட்டுறவும் நெருக்கமும் சீனாவின் ஆதிக்க, விரிவாக்க வெளிநாட்டுக் கொள்கையை எதிர்கொள்ள அவசியமாகிறது.
- புதுப்பிக்கப்படும் எரிசக்தி (சூரிய ஒளி, ஹைட்ரஜன்) பாதுகாப்பு ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டுறவு மேலும் வலுப்பட்டது.
- Ind-AusECTA பொருளாதார ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதால், உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களை ஒன்றிணைக்கிறது.
- இந்தியா 5வது பெரிய பொருளாதாரம் (ம) ஆஸ்திரேலியா 14வது பெரிய பொருளாதாரம்.
- பெரும்பாலும் இறக்குமதியைச் சார்ந்து இருக்கும் ஆஸ்திரேலியா பெரிதும் பயனடையும், இந்தியாவில் இருந்து முடிக்கப்பட்ட பொருட்கள் இந்தியாவின் உள் மக்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பு வழங்கும்.
- கடந்த ஆண்டு இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமாகியிருக்கிறது.
- அதன் அடுத்த கட்டம்தான் ஒருங்கிணைந்த பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம்.
- இரு நாடுகளின் பாதுகாப்புப் படைகள் மத்தியில் கலந்தாலோசனையும், கருத்துப் பரிமாற்றமும் அதிகரித்திருக்கிறது.
- இரு நாடுகளின் எல்லைகளிலிருந்து விமானங்கள் மூலம் இந்திய-பசிபிக் கடற்பகுதியின் கண்காணிப்பை அதிகரிப்பது.

### க்வாட்

- பல்வேறு சர்வதேச பிரச்சனைகளால் இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா இணைந்த க்வாட் அமைப்பின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

- சீனாவுடனான ஆஸ்திரேலியாவின் வர்த்தகமும், ராஜாங்க உறவும் கடந்த சில ஆண்டுகளாக சுமூகமாக இல்லை. அதனால் இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளும் நெருக்கமான பொருளாதார உறவு இரு நாடுகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.
- இப்போதைய விநியோகச் சங்கிலிக்கு மாற்றாக புதியதொரு விநியோகச் சங்கிலியை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதால், சீனாவை அகற்றி நிறுத்தி புதிய பாதையை வகுக்க ஆஸ்திரேலியாவும், இந்தியாவும் முனைப்புக் காட்டுகின்றன.

### கல்வியில் கூட்டுறவு

- கல்வித்துறையில் இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம். அதை அவரது நான்கு நாள் இந்திய விஜயத்தின் முதல் நாளான மார்ச் 8-ஆம் தேதி ஆஸ்திரேலிய பிரதமர் வெளியிட்டார்.
- ஆஸ்திரேலியாவில் கல்வித் தகுதிபெற்ற இந்திய மாணவர்களின் பட்டங்கள், நாடு திரும்பியதால் இந்தியாவில் அங்கீகரிக்கப்படும் என்பதுதான் அந்த ஒப்பந்தம்.
- அதேபோல இந்தியாவில் பெறப்பட்ட கல்வித் தகுதிகள் ஆஸ்திரேலியாவில் அங்கீகாரம் பெறுவதையும் அந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்துகிறது.
- ஆஸ்திரேலியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான டீக்கின் பல்கலைக்கழகம் குஜராத் மாநிலம் காந்தி நகரில் தனது கிளையை நிறுவும் முதல் வெளிநாட்டுப் பல்கலைக் கழகமாக இருக்கப் போகிறது.
- இதனால் பெரும் பணச்செலவில் ஆஸ்திரேலியா சென்று படிக்க முடியாத மாணவர்கள் பயன்பெறுவர்.

### பயன்கள்

- புதிய கூட்டுறவு ஒப்பந்தமும்,
- கல்வி
- எரிசக்தி
- பாதுகாப்பு, தளவாட உற்பத்தி ஆகியவற்றில் கையொப்பமாகியிருக்கும் புதிய ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கும் பயனளிப்பவை என்பது மட்டுமல்ல, இன்றைய தேவையும் கூட.
- இந்திய மாணவர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் இரு நாடுகளுக்கும் இடையே பயணிக்கவும், கல்வி கற்கவும், பணிபுரியவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வாய்ப்பு.
- கருத்துப் பரிமாற்றத்துக்கு மட்டுமல்லாமல் நெருங்கிய நட்புறவுக்கும் வழிகோலும்.

## வெளிநாட்டு வக்கீல்கள் நம் நாட்டில் சட்ட பணிகள் செய்ய ஒப்புதல்

- வெளிநாடுகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், சட்ட நிறுவனங்கள், நம் நாட்டில் சட்டப் பணிகளை மேற்கொள்ள இந்திய பார் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.

### கட்டுப்பாடுகள்

- வெளிநாட்டு வழக்கறிஞர்களும், சட்ட நிறுவனங்களும் நம் நாட்டில் சட்டப் பணிகளை மேற்கொள்ள இந்திய பார் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது.
- வெளிநாட்டு வழக்கறிஞர்கள், சட்ட நிறுவனங்கள், இந்திய பார் கவுன்சிலில் முறையாக பதிவு செய்து இங்கு சட்டப்பணிகளை மேற்கொள்ளலாம்.
- இவர்கள் நேரடியாக நீதிமன்றங்களில் ஆஜராக முடியாது.
- இந்தியாவில் உள்ள வாடிக்கையாளருக்கு சர்வதேச சட்டம் அல்லது வழக்கு தொடர்பாக சட்ட ஆலோசனை மட்டும் தர இந்தியா வந்து செல்லும் வெளிநாட்டு வழக்கறிஞர்கள், நிறுவனங்களுக்கு இந்த தடை பொருந்தாது.
- இவர்கள் இங்கு அலுவலகம் திறக்க முடியாது. ஆண்டுக்கு 60 நாட்கள் மட்டுமே இந்த பணியை அவர்கள் மேற்கொள்ள முடியும்.

### பாதுகாப்பு

- பார் கவுன்சிலில் பதிவு பெற, வழக்கறிஞர்களுக்கு 2 லட்சம் ரூபாயும், சட்ட நிறுவனங்களுக்கு 4 லட்சம் ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும்.

- ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும்.
- பதிவு பெற விரும்பும் வழக்கறிஞர்கள், மத்திய அரசின் சட்ட அமைச்சகம், வெளியுறவு மற்றும் வர்த்தக துறையிடம் தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட வழக்கறிஞர் இந்தியாவில் சட்ட பணிகளை மேற்கொள்ள தகுதியானவர் என்பதை அவர் சார்ந்த நாடு, வழக்கறிஞர்கள் சங்கம் உள்ளிட்ட சட்ட அமைப்புகள் உறுதி செய்ய வேண்டும்.
- வழக்கு விவகாரங்களில் சிக்கி தண்டனை பெறவில்லை என்பதை உறுதி அளிக்க வேண்டும்.
- பதிவு கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை, உரிய காரணம் இன்றி இந்திய பார் கவுன்சில் நிராகரிக்காது.
- கவுன்சிலின் முடிவே இறுதியானது.
- தேசிய பாதுகாப்பு, நாட்டு நலன் அல்லது வேறு முறையான காரணங்களுக்காக, வெளிநாட்டு வழக்கறிஞர்களின் பதிவை ரத்து செய்வது அல்லது புதுப்பித்தலை நிறுத்தி வைப்பது போன்ற நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசுக்கு உரிமை உள்ளது.

# நுகர்வோர் உரிமைகள்

- உலக நுகர்வோர் உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ம் தேதி கொண்டாடப்படுகிறது.
- மொத்த நுகர்வோர் வழக்குகளின் எண்ணிக்கை 5.4 லட்சம்
- பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 1,73,457 (2022-ம் ஆண்டு)
- தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,82,248 (2022-ம் ஆண்டு)

## நுகர்வோர் குறைதீர் ஆணையங்கள்

- 1 - தேசியநுகர்வோர் ஆணையம்
- 36 - மாநில நுகர்வோர் ஆணையம்
- 696 - மாவட்ட நுகர்வோர் ஆணையம்

## நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்

- இந்தியாவில் 1986 டிசம்பர் 24-ம் தேதி, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டு அமலுக்கு வந்தது.

## நுகர்வோரின் அடிப்படை உரிமைகள்

- பாதுகாப்பு உரிமை
- அடிப்படை தேவைகளுக்கான உரிமை
- தேர்ந்தெடுக்கும் உரிமை
- தகவல் அறியும் உரிமை
- பிரதிநிதித்துவ உரிமை
- பரிகாரம் தேடும் உரிமை
- ஆரோக்கியமான சூழலுக்கான உரிமை
- நுகர்வோர் கல்விக்கான உரிமை

# எத்தனால், எரிவாயு, ஜவுளி கொள்கைகள்

## எத்தனால் கொள்கை

- தமிழகத்தை, மாற்று பசுமை எரிபொருளுக்கான முதலீட்டு மையமாக மேம்படுத்துவது, இக்கொள்கையின் நோக்கம்.
- எத்தனால் கலந்த பெட்ரோலால், வாகனங்கள் வெளியேற்றும் புகை அளவு வெகுவாக குறையும்.
- சுற்றுப்புற மாசுபாட்டின் நிலை குறைந்து மக்கள் சுகாதாரம், வாழ்க்கை நிலை மேம்படும்.
- உபரி பருவத்தில், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

- விவசாயிகளுக்கு தரவேண்டிய, விளைபொருள் கொள்முதலுக்கான நிலுவைத் தொகையை, தாமதமின்றி வழங்க இயலும்.
- கரும்பு, மக்காச்சோளம் போன்ற மூலப் பொருட்களை பயிரிடும் விவசாயிகளின் வருமானம் பெருமளவு அதிகரிக்கும்.
- எரிபொருள் இறக்குமதியில், வெளிநாடுகளை சார்ந்து இருப்பது குறையும்.
- இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு, இது பெரிதும் உதவும். இக்கொள்கை, ஐந்து ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

### நகர எரிவாயு வினியோகம்

- சுற்றுச்சூழலுக்கு உகந்த, பசுமையான எரிபொருளான, இயற்கை எரிவாயு உபயோகத்தை ஊக்கப்படுத்தவும், அதற்கான உட்கட்டமைப்பை, தமிழகத்தில் விரைவாக அமைக்க, தேவையான விதிகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்குவது, இக்கொள்கையின் நோக்கம்.
- தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் வாகன பயன்பாட்டுக்கும், 2.30 கோடி வீடுகளுக்கும், குழாய் வழியே இயற்கை எரிவாயு வழங்க, இக்கொள்கை வழிவகை செய்கிறது.
- இதன் வழியே, 35 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு, எட்டு ஆண்டுகளில் ஈர்க்கப்படும்.

### சரக்கு போக்குவரத்து

- மாநிலத்தின் வேகமான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தொலைநோக்கு பார்வையுடன், இக்கொள்கை வகுக்கப்பட்டு உள்ளது.
- ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் வலுவான போக்குவரத்து உட்கட்டமைப்பை உருவாக்குதல்; குறைந்த செலவில், உயர்ந்த தரத்திலான சேவைகள் கிடைக்கும் நிலையை ஊக்குவித்தல்.
- ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் அமைப்பை உருவாக்குதல்; சரக்கு போக்குவரத்து துறையில், திறன் மேம்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவை, இக்கொள்கையின் முக்கிய கருப்பொருட்கள்.
- இக்கொள்கையின் வழியே சரக்கு போக்குவரத்து துறைக்கு, தொழில் அந்தஸ்து வழங்குதல். புதிய தொழில்நுட்ப உத்திகளை செயல்படுத்துதல்; திறன் மேம்படுத்துதல்; நிலைப்பு தன்மையை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.
- 'சரக்கு போக்குவரத்து செயல் திட்டம்' வழியே மூன்று பெருவழித் தடங்களில் மட்டுமே, 50 செயல்திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டு உள்ளன.
- இதனால், அடுத்த 10 ஆண்டுகளில், 63 ஆயிரம் கோடி அளவுக்கு செயல் திட்டங்களும், 1.6 லட்சம் பேருக்கு, வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

### ஜவுளி தொழில்நுட்பம்

- தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளி, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களில் இருந்து செயற்கை இழை நூல், செயற்கை இழை துணி மற்றும் ஆடை தயாரிப்புகளுக்கான சிறப்புத் திட்டம்.
- இச்சிறப்பு திட்டமானது, பெண்களுக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்புகள் வழங்குதல்; பெரிய திட்டங்களுக்கு சற்றே குறைவாக உள்ள முதலீடுகளுக்கும், அதிக அளவிலான ஊக்கத்தொகை வழங்குதல்; ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்து, இத்துறையை பயன்படுத்துதல்.
- மாநிலம் முழுதும், முக்கியமாக தொழில் ரீதியாக வகை செய்யப்பட்டுள்ளன.
- பி, சி மாவட்டங்களில், சமச்சீரான தொழில் மேம்பாடு ஆகியவை குறித்து, இக்கொள்கை விளக்குகிறது.

## இந்தியா ஜப்பான் நல்லுறவு

- இந்தியா – ஜப்பான் இடையேயான ராஜீய ரீதியிலான நல்லுறவு இந்தோ – பசிபிக் பிராந்தியத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.
- ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்து வருகிறது.
- அதே வேளையில் ஜி7 கூட்டமைப்புக்கு ஜப்பான் தலைமை வகித்து வருகிறது.

### வலுவடையும் நல்லுறவு

- க்வாட் கூட்டமைப்பில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா, ஜப்பான் நாடுகளும் செயல்பட்டு வருகின்றன.
- கடந்த 2006ஆம் ஆண்டு முதல் இந்தியா – ஜப்பான் இடையே ஆண்டுதோறும் மாநாடு நடைபெற்று வருகிறது.
- இரு நாடுகளின் வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்கும் 2 + 2 பேச்சுவார்த்தையும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

## உலகின் மகிழ்ச்சியான நாடு - பின்லாந்து

- உலக மகிழ்ச்சி தினம் ஆண்டுதோறும் மார்ச் 20ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
- தொடர்ந்து 6ஆவது ஆண்டாக பின்லாந்து முதல் இடத்தை தக்கவைத்துள்ளது.
- 2ஆவது இடத்தில் டென்மார்க், 3ஆவது இடத்தில் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- 4ஆவது, 5 ஆவது இடங்களில் முறையே இஸ்ரேல் மற்றும் நெதர்லாந்து உள்ளன.
- இந்த பட்டியலில் ரஷ்யா 70ஆவது இடத்தில் உள்ளது.
- தனிப்பட்ட நல்வாழ்வு, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆயுட்காலம், சிவில் உரிமைகளைக் கடைபிடித்தல், வேலைப் பாதுகாப்பு மற்றும் ஊழலின் அளவு போன்ற காரணிகளின் அடிப்படையில் மகிழ்ச்சியான நாடுகளின் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது.

## மரண தண்டனையை நிறைவேற்ற மாற்று வழிகளை ஆராயலாம்

- நாட்டில் நிறைவேற்றப்படும் மரண தண்டனை என்பது தூக்கு தண்டனையாகும்.
- இது மிகவும் கொடூரமானது என்பது தொடர்பாக விவாதம் நடத்த மத்திய அரசு ஆலோசிக்க வேண்டும்.
- மரண தண்டனையை, குறைந்த வலியுடன் நிறைவேற்றுவதற்கான மாற்று வழிகள் உள்ளனவா என்பது குறித்தும் மத்திய அரசு தீவிரமாக பரிசீலிக்க வேண்டும்.
- இது தொடர்பாக விவாதம் நடத்தி, தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.
- இந்த விவரங்களைச் சேகரித்து நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்ய வேண்டும்.
- தூக்கு தணடனைக்குப் பதிலாக துப்பாக்கியால் சுடுதல், மரணஊசி அல்லது மின்சார நாற்காலி போன்றவை குறித்து பரிசீலிக்கலாம்.

## தேசிய கட்சி அங்கீகாரம்

- அரசியல் கட்சிகள் தேசிய கட்சி அங்கீகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 4 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் நாடாளுமன்றத் தேர்தல் அல்லது சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சமாக 6 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற வேண்டும்.
- நாடாளுமன்றத்தில் குறைந்தபட்சம் 4 எம்.பி.க்களை கொண்டிருக்க வேண்டும்.
- இந்நிலையில், 2019 மக்களவைத் தேர்தலில் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசிய அங்கீகாரத்துக்கு சிக்கல் வரும் என எதிர்பார்க்கப்பட்டது.
- அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சியைப் பொருத்தவரை அனைத்து மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் சொந்த சின்னத்தில் போட்டியிட முடியும்.
- தேர்தல் பிரச்சாரத்தில் அதிக எண்ணிக்கையில் நட்சத்திர பேச்சாளர்களைக் களமிறக்க முடியும்.
- பாஜக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ் (பிஎஸ்பி), திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், தேசிய மக்கள் கட்சி ஆகிய 8 அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளும், 50 அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளும் உள்ளன.

## 2 ஆண்டுகள் சிறை தண்டனை

- சூரத் தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார்.
- இந்த வழக்கை விசாரித்த மாஜிஸ் திரேட் எச்.எச்.வர்மா தீர்ப்பு வழங்கினார்.
- இந்தியக் குற்றவியல் சட்டம் 499, 500 ஆகிய பிரிவுகளின்படி ராகுல் காந்தி குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது.
- அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.15,000 அபராதம் விதிக்கப்பட்டது.

## குற்றவியல் வழக்கில்...

- குற்றவியல் வழக்கில் 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்ட எம்.பி., எம்எல்ஏ-க்களை உடனடியாக பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.
- மக்களவைச் செயலகம் வெளியிட்ட அறிவிக்கையில், சூரத் தலைமை நீதித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி கேரளாவின் வயநாடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் பதவியில் இருந்து ராகுல் காந்தி பதவி நீக்கம் செய்யப்படுகிறார்.
- இந்த அறிவிக்கையின் நகல், தலைமை தேர்தல் ஆணையத்துக்கும் அனுப்பப்பட்டு உள்ளது.

## தண்டனையால் விளையும் தகுதியிழப்பு

- இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் வயநாடு மக்களவை உறுப்பினருமான ராகுல்காந்திக்கு எதிராகத் தொடரப்பட்ட அவதூறு வழக்கில், அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்துள்ள சூரத் நீதிமன்றம், அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.
- அந்தத் தீர்ப்பு வெளியான தேதியிலிருந்தே (மார்ச் 23) ராகுல் மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து தகுதியிழந்துவிட்டதாக மக்களவைச் செயலரின் அறிவிப்பு வெளியானது.

## தகுதியிழப்புக்கான அடிப்படைகள்

- இந்திய அரசமைப்பின் 102 (1), 191 (1) ஆகிய இரண்டு கூறுகளும் முறையே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தச் சூழல்களில் எல்லாம் தகுதியிழந்தவராக அறிவிக்கப்பட வேண்டும் என்பதை விவரிக்கின்றன.
- மூன்று வகையான சூழல்களில் மக்களவை, மாநிலங்களவை, சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதியிழக்கிறார்கள்.
  1. லாபம் தரும் பதவி வகிப்பது (உறுப்பினர் / அமைச்சர் பதவியைத் தவிர, வேறொரு அரசுப் பதவியில் இருப்பது
  2. மனநல பாதிப்புக்குள்ளானவர் அல்லது திவாலானவராக அறிவிக்கப்படுவது
  3. உரிய இந்தியக் குடியுரிமை இல்லாதவர் அல்லது குடியுரிமையை இழந்தவராக இருப்பது மேலும் உறுப்பினர்களின் தகயிழந்தவராக அறிவிப்பதற்கு தேவையான சட்டத்தை அமல்படுத்த நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.
- அரசமைப்பின் பத்தாம் அட்டவணை, கட்சித்தாவல் செய்யும் உறுப்பினர்கள் (கொறடா உத்தரவை மீறுகிறவர்கள்) பதவி இழப்பதற்கு வழிவகுக்கிறது.

## மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951

- இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சட்டமன்றங்களுக்கும் தேர்தல்களை நடத்துவது, தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகுதிகளை நிர்ணயிப்பது, தகுதியிழக்கும் சூழல்களை வரையறுப்பது உள்ளிட்ட நோக்கங்களுக்காக நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951இல் அமலுக்கு வந்தது.
- இச்சட்டத்தின் பிரிவு 8, நீதிமன்றத்தால் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட உறுப்பினர்கள் தகுயிழப்பது தொடர்பானது.
- குற்றக்கறை படிந்தவர்கள் சட்டம் இயற்றும் அவைகளில் இருக்கக் கூடாது என்பதற்காகவும் அரசியல் குற்றமயமாவதைத் தடுப்பதற்காகவும் இந்தப் பிரிவு சேர்க்கப்பட்டது.
- இதன் முதல் இரண்டு உட்பிரிவுகளையும் இரண்டு குழுக்களுக்கிடையே வன்முறையைத் தூண்டுதல், லஞ்சம் வாங்குதல், உணவு அல்லது மருந்துக் கலப்படத்தில் ஈடுபடுதல், வரதட்சணைக் கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேலான சிறைத் தண்டனை விதிக்கப்படுதல் ஆகிய குறிப்பிட்ட காரணங்களுக்காக உறுப்பினர்கள் தகுதியிழந்தவர்களாகிறார்கள்.

# மரண தண்டனை தேவையா? தேவையில்லாயா?

## மரண தண்டனை

- கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டி மரணமடையும் வரை தூக்கிலிடப்படும் முறைக்கு மாற்றாக வேறு ஏதாவது முறையைக் கையாளலாமா என்கிற யோசனை உச்சநீதிமன்றத்தால் எழுப்பப்பட்டிருக்கிறது.

## வழக்கு

- 1980 பச்சன் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் வழக்கின் தீர்ப்பில், மரண தண்டனை ஏற்கப்பட்டது.
- ஆனால், மிகமிக அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்கிறது.
- அந்தத் தீர்ப்பு 1983 தீன்தயாள் எதிர் இந்திய அரசு வழக்கில் ஏனைய முறைகளைவிட தூக்கில் தொங்கவிட்டு மரணதண்டனையை நிறைவேற்றுவதுதான் மிகக் குறைவான வேதனையை குற்றவாளிக்கு அளிக்கும் என்று கூறப்பட்டது.
- நீதித்துறையும் சரி, நிர்வாகமும் சரி, தூக்கு தண்டனையை ஆதரிப்பதாகவே இருந்திருக்கின்றன.
- கர்நாடகம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா மாநிலங்கள், குழந்தைகளை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குபவர்களை மரண தண்டனை வரம்பிற்குள் கொண்டு வந்திருக்கின்றன.
- மத்தியப் பிரதேசத்திலும், பஞ்சாபிலும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், விற்பதும்கூட மரண தண்டனைக்குரிய குற்றங்கள்.

## ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்

- ஆயுள் தண்டனை என்பதேகூட கடுமையான குற்றங்களுக்கு மிக அதிகமான தண்டனையாக இருக்கும்தான்.
- ஆனால், இன்றைய மாறிவிட்ட உலகத்தில் மிகக் கடுமையான குற்றவாளிகள் உருவாகிறார்கள்.
- ஏகே 47 ரக துப்பாக்கியால் அப்பாவிகள் மீது குண்டுகளைப் பொழிந்து தேசத்துக்கு எதிராக போர் தொடுத்த அஜ்மல் கசாப் போன்றவர்களுக்கு மரண தண்டனை வழங்கக் கூடாது என்பதை ஏற்க முடியவில்லை.
- பயங்கரவாதம் உள்ளிட்ட குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கான மூலம்தான் அச்ச உணர்வை ஏற்படுத்தித் தடுக்க முடியும் என்பதே ஒரேயடியாக புறந்தள்ள முடியாது.

## அம்னஸ்டி இன்டர்நேஷனல்

- அம்னஸ்டி இன்டர்நேஷனல் வழங்கும் புள்ளிவிவரப்படி 108 நாடுகளில் மரண தண்டனை முழுமையாக அகற்றப்பட்டுவிட்டது.
- 36 நாடுகள் அரிதிலும் அரிதாக மட்டுமே மரண தண்டனையை பயன்படுத்துகின்றனர்.
- 55 நாடுகளின் சட்டப்படி மரண தண்டனை நடைமுறையில் இருக்கிறது.

## CrPC

- பிரிட்டிஷ் காலனி அரசால் 1888இல் குற்றவியல் சட்டம் உருவாக்கப்பட்டது.
- 1898ல் திருத்தப்பட்டது.
- 1973இல் மாற்றி எழுதப்பட்டது.
- உச்சநீதிமன்றம் தூக்கிலிட்டு மரண தண்டனை வழங்குவதை அகற்ற விரும்பினாலும்கூட அதற்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவைப்படும்.
- நாடாளுமன்றத்தின் இந்த பிரச்சனையில் இறுதி முடிவு எடுக்க முடியுமே தவிர, நீதித்துறை பரிந்துரைக்கத்தான் முடியும்.

# 04 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## இந்தியாவின் மூன்றாவது நிலவு பயணம்

- சமீபத்தில், சந்திரயான் – 3 மிஷனுக்கான எல்விஎம்-3 ஏவுகணை வாகனத்தின் கிரையோஜெனிக் மேல்நிலைக்கு சக்தி அளிக்கும் CE-20 கிரையோஜெனிக் எஞ்சினை இஸ்ரோ வெற்றிகரமாக விமான ஏற்பு சோதனையை நடத்தியது.

### அம்சங்கள்

- தமிழ்நாடு மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் சோதனை நடத்தப்பட்டது.
- உயர் உயர சோதனை வசதியில் 25 வினாடிகள் நடத்தப்பட்டது.

### சந்திரயான் சோதனை – 3 லேண்டர்

- பெங்களூரில் உள்ள யு.ஆர்.ராவ் செயற்கைக்கோள் மையத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- EMI-EMC க்காக சோதிக்கப்பட்டது (மின்காந்த தூண்டல் / மின்காந்த இணக்கத்தன்மை)

### சந்திரயானின் அம்சங்கள் – 3

- கிரகங்களுக்கு இடையிலான பணி
- மூன்று முக்கிய தொகுதிகள் உள்ளன
  - i. உந்துவிசை தொகுதி
  - ii. தரையிரங்கி
  - iii. ரோவர்
- இந்த மூன்று தொகுதிகளுக்கு இடையே ரேடியோ அலைவரிசை தொடர்பு வேலை செய்கிறது.
- LVM-3 மூலம் 2023 இல் தொடங்கப்படும்.

## புரோட்டான் பீன் சிகிச்சை (PBT)

- பல புற்றுநோய் நோயாளிகளுக்கு அணுக முடியாதது மற்றும் மலிவு.

### PBT பற்றி

- கதிர்வீச்சு சிகிச்சைக்கு சாத்தியமான மாற்று
- திடமான கட்டிகளுக்கு குஷ்ப்பாக தலை மற்றும் கழுத்து புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்க முடியும்.
- புரோஸ்டேட், கருப்பைகள், மார்பகம், நுரையீரல், எலும்புகள் மற்றும் மென்மையான திசுக்களின் புற்றுநோய்களுக்கும் சிகிச்சையளிக்க முடியும்.
- சிகிச்சை பெற்ற புற்றுநோயாளிகள் – 47% மூளைக் கட்டிகள்.

### இந்தியாவில் PBT இன் கிடைக்கும் நிலை

- 1,412 மில்லியன் மக்களுக்கு ஒரே ஒரு சாதனம். (அப்பல்லோ மருத்துவமனையில்)
- நவி மும்பையில் உள்ள டாடா மெமோரியல் மருத்துவமனையின் நேஷனல் ஹாட்ரான் பீன் வசதியில் மற்றொரு PBT பிரிவை அமைக்க முன்மொழியப்பட்டது.

### ரீச் வெளியே பற்றிய கவலைகள்

- இது மூன்று மாடிகள் வரை உயரமான ஒரு பெரிய கான்ட்ராப்ட் மற்றும் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் செலவாகும்.
- ஹைட்ரஜனின் ஆவியாகும் தன்மை
- அதன் கசிவுக்கான வழக்கமான சோதனை.
- PBT ஹைட்ரஜனைப் பயன்படுத்துகிறது

### மதிப்பீடுகள்

- இந்தியாவில் கிட்டத்தட்ட 40,000 குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்களில் 1,400 பேர் PBT மூலம் பயனடையலாம்.

## இந்தியாவும், ஏவுகணைகளும்

- பாதுகாப்பு அமைச்சகத்தின் பிரிவான பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) பலவித ஏவுகணைகளை வடிவமைத்து, மேம்படுத்தித் தயாரித்திருக்கிறது.
- ப்ரித்வி, த்ரிசூல், ஆகாஷ், நாக், அக்னி, பிரமோஸ் ஆகியவை இங்கேயே தயாரிக்கப்பட்ட இந்திய ஏவுகணைகள்.
- ப்ரித்வி என்பது தரையிலிருந்து புறப்பட்டு, தரையில் இருக்கும் இலக்கைப் போய்த்தாக்கும் குறுந்தொலைவு ஏவுகணை. 150 கிலோ மீட்டர் தொலைவு தாக்கக்கூடிய இதில் திரவ எரிபொருள் கொண்ட ஒரே நிலை செயல்படுகிறது.
- முப்படைகளுக்கும் ஏற்றாற்போல் இதில் பல வடிவங்கள் செய்யப்பட்டன.
- ப்ரித்வி-3 ஏவுகணையை நிலத்திலிருந்தும், வாகனத்திலிருந்தும், கப்பலிலிருந்தும் ஏவலாம்.
- அக்னி என்பது இன்டர்மீடியட் ரேஞ்ச் பேலிஸ்டிக் ஏவுகணை. அக்னி-2-ல் இரு நிலை திரவ எரிபொருள் பயன்படுகிறது.
- 2500 கிலோமீட்டர் தொலைவு செல்லும். 'அக்னி 3'-ன் ரேஞ்ச் 3500 கிலோமீட்டர்.
- ஆகாஷ் என்பது தரையிலிருந்து விண்ணைத் தாக்கும் ஏவுகணை. 'த்ரிசூலும்' இதே வகைதான்... ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்திலிருந்துகூட இதை ஏவலாம். நாக் என்பது பீரங்கிகளுக்கு எதிரான ஏவுகணை.
- 'பிரமோஸ்' என்பது ஒலியின் வேகத்தைக் காட்டிலும் 3 மடங்கு வேகம் கொண்ட சூப்பர்சானிக் ஏவுகணை. நீர்மூழ்கி, கப்பல், விமானம் என இயங்கிக் கொண்டிருக்கும். எதிலிருந்து வேண்டுமானாலும் ஏவலாம்..
- இதன் ரேஞ்ச் 350 கிலோமீட்டர். 350 கிலோகிராம் எடையுள்ள பேராயுதத்தை இதனால் எறிய முடியும். இருநிலை ஏவுகணையான இதில் திட எரிபொருள் பூஸ்டரும், ஆண்டிஜாமிங் கருவிகளுடன் கூடிய திரவ எரிபொருள் ரேம்ஜெட்டும் இருக்கின்றன. ரஷிய ஒத்துழைப்புடன் உருவானது இது.

## நானோ திரவ ஏழபி உரம்

- நானோ தொழில்நுட்ப அடிப்படையிலான திரவ டிஏபி (டை - அம்மோனியம் பாஸ்பேட்) உரத்தை அறிமுகம் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நானோ திரவ யூரியா உரத்தைத் தொடர்ந்து, நானோ திரவ டிஏபி உரத்தை அறிமுகம் செய்ய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2021இல் இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம் (இஃப்கோ) நானோ திரவ யூரியாவை அறிமுகம் செய்திருந்தது.
- இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம், நானோ டிஏபியை தயாரிக்கவுள்ளது. இது இந்திய வேளாண்மை மற்றும் பொருளாதாரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தும்.
- நானோ டிஏபி உரத்தைத் தொடர்ந்து, நானோ பொட்டாஷ், நானோ ஜிங்க், நானோ காப்பர் உரங்களையும் அறிமுகப்படுத்த இஃப்கோ திட்டமிட்டுள்ளது.
- திரவ யூரியா தயாரிப்புக்காக உத்திரப்பிரதேசம், குஜராத்தில் பல்வேறு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- இது பாட்டில் ஒன்று ரூ 240 விலையில் விற்கப்படுகிறது.

## இன்ஃப்ளுயன்ஸா ஏ வகை வைரஸ்

- இந்தியாவில் பரவுவது இன்ஃப்ளுயன்ஸா ஏ எச்3என்2 வகையை சேர்ந்த வைரஸ் என்பது தெரியவந்துள்ளது.
- இன்ஃப்ளுயன்ஸா ஏ எச்3என்2 வகை வைரஸால் பாதிக்கப்படுவோருக்கு நுரையீரல் தொற்று ஏற்படுகிறது.
- நோயாளிகளில் 10 சதவீதம் பேருக்கு ஆக்ஸிஜன் சிகிச்சை தேவைப்படுகிறது. 7 சதவீதம் பேர் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படுகின்றனர்.
- இந்த வைரஸ் தொற்றில் இருந்து தப்பிக்க அடிக்கடி சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும்.
- முகக்கவசம் அணிய வேண்டும். கழுவாத கைகளால் கண்களையோ, மூக்கையோ தொடக்கூடாது.
- அதிக தண்ணீர் குடிக்க வேண்டும்.
- காய்ச்சல், உடல் வலி அதிகமாக இருந்தால் மருத்துவரின் அறிவுரைப்படி பாராசிட்டமால் மாத்திரையை உட்கொள்ள வேண்டும்.

- பொது இடங்களில் எச்சில் துப்பக்கூடாது. கைகுலுக்கியோ, கட்டித் தழுவியோ வாழ்த்து கூறக்கூடாது. கூட்டமான இடங்களுக்கு செல்லக்கூடாது.
- தனிமனித இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். மருத்துவரின் அறிவுரை இன்றி மருந்துகளை உட்கொள்ள கூடாது.

### ஐஎம்ஏ அறிவுரை

- இந்தியாவில் இன்ஃப்ளுயன்ஸா ஏ எச்3என்2 வைரஸால் பாதிக்கப்படுவோருக்கு இருமல், தொண்டை வலி, உடல் வலி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன.
- காய்ச்சல் பாதிப்பு 7 நாட்கள் வரை நீடிக்கிறது. 50 வயதுக்கு மேற்பட்டோர், 15 வயதுக்கு உட்பட்ட சிறார் இந்த வகை வைரஸால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
- உலகசுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் உலக நாடுகளின் பருவநிலைக்கு ஏற்ப ஆண்டுதோறும் இன்ஃப்ளுயன்ஸா வகை வைரஸ் பரவுகிறது.
- இந்த வகை வைரஸால் உலகம் முழுவதும் ஓராண்டுக்கு சுமார் 6.5 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முற்றிலும் சூரியமின்சக்தியை பயன்படுத்தும் ஒடிஸா கிராமம்!

- ஒடிஸா மாநிலத்தில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சுக்தர்கார் மாவட்டத்தில் உள்ள தொலைதூர கிராமமான சக சாஹி, தனது மின்சாரத் தேவைக்கு முழுவதுமாக சூரிய மின்சக்தியைப் பயன்படுத்தும் கிராமமாக மாறியுள்ளது.
- கிராமத்தில் உள்ள 90 வீடுகளுக்கு சூரியமின்சக்தி அடிப்படையிலான மின்விளக்கு அமைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- சூரிய மின்சக்தியைப் பயன்படுத்தி 10,000 லிட்டர் கொள்ளளவு மூலம் நீர் வசதிக்கான அமைப்புகள் கிராமத்தின் 12 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 70 சூரிய மின்சக்தி தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சூரிய மின்சக்தியில் இயங்கும் ஸ்மார்ட் வகுப்பறை இந்த முன்னெடுப்பில் கட்டப்பட்டு வருகிறது.
- சகசாஹி கிராமத்தைச் 'சூரியமின்சக்தி கிராமம்' ஆக அறிவித்து அந்தக் கிராம பஞ்சாயத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## நிஸார் செயற்கைக்கோள் : இஸ்ரோவிடம் அமெரிக்கா ஒப்படைப்பு

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவும், இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமும் (இஸ்ரோ) இணைந்து அமெரிக்காவில் கூட்டாக உருவாக்கிய நிஸார் என்ற புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை இஸ்ரோவிடம் அமெரிக்க விமானப் படை ஒப்படைத்தது.

### நாசா–இஸ்ரோ

- இந்த செயற்கைக்கோள் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்திலிருந்து வரும் 2024-இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- கலிஃபோர்னியாவில் உள்ள நாஸாவின் ஜெட் உந்துவிசை ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட 2,800 கிலோ எடைகொண்ட நாஸா-இஸ்ரோ சிந்தடிக் அபெர்ட்சர் ரேடார் (நிஸார்) செயற்கைக்கோள் அமெரிக்க விமானப்படையின் சி-17 விமானம் மூலமாக பெங்களூருக்கு கொண்டுவரப்பட்டு இஸ்ரோவிடம் ஒப்படைக்கப்பட்டது.

### ஆய்வு

- இந்த செயற்கைக்கோளில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த ரேடார் மூலமாக பூமியின் நிலம் மற்றும் பனிப்பரப்பை துல்லியமாக ஆய்வு செய்ய முடியும்.
- வேளாண் பரப்பு அளவீடு மற்றும் நிலநடுக்கம், நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளை கணித்தல் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளுக்கு இந்த செயற்கைக்கோளை இஸ்ரோ பயன்படுத்தவுள்ளது.

## முடிவுக்கு வருமா கொசுத்தொல்லை?

### கொசுவின் தகவல்கள்

- பெண் கொசுக்கள் மட்டுமே மனிதனை கடிக்கின்றன.
- கொசுக்களுக்குப் பற்கள் இல்லை. நீண்ட, கூர்மையான குழல் மட்டுமே உண்டு. உயிரினங்கள் வெளியிடும் மூச்சுக் காற்றிலிருந்து வரும் கார்பன் டை ஆக்ஸைடை நுகர்ந்து, அந்த இடங்களுக்கு கொசுக்கள் செல்லும்.

- 50 மீட்டர் தூரத்துக்குள் வெளியாகும் கார்பன் டை ஆக்சைடை நுகரக்கூடிய ஆற்றல் கொசுக்களுக்கு உள்ளது.
- கொசுக்கள் பொதுவாகத் தரையிலிருந்து 23 அடிக்குக் கீழேதான் பறக்கும். நம்முடைய வியர்வை துர்நாற்றம், கார்பன்டை ஆக்சைடு போன்றவற்றால்தான் கொசுக்கள் நம்மை அடையாளம் காண்கின்றன.
- தூய்மையான ரத்தம் இல்லாதவர்களையும், உடலில் அதிக அளவு கழிவுகள் சேர்ந்திருப்பவர்களையும் கொசுக்கள் அதிகமாகக் கடிக்கின்றன.

## ஏடிஸ் & குலெக்ஸ்

- 'ஏடிஸ்' போன்ற சில கொசு இனங்கள் பகல் நேரத்தில் மட்டும் கடிக்கும். இவ்வகை கொசுக்கள் தண்ணீரில் முட்டையிட்டு அது கூட்டுப்புழு பருவம் வரை வளர 7 முதல் 10 நாள்கள் வரை ஆகும்.
- இந்தக் கொசுக்களின் முட்டைகள் ஓராண்டு வரை அழியாமல் இருக்கும். 'குலெக்ஸ்' இன கொசுக்கள் மாலை முதல் இரவு வரை கடித்துக் கொண்டிருக்கும்.

## நோய்கள்

- ஏடிஸ் இகிப்தி வகை கொசுக்கள் மூலம் சிக்குன் குனியா நோய் பரவுகிறது.
- அனாஃபிலிஸ் கொசுக்களினால் மலேரியா நோய் தொற்றுகிறது.
- குலிசின் வகைக் கொசுக்கள், ஜப்பானீஸ் – பி கிருமிகளை மனித உடலில் செலுத்தி மூளைக் காய்ச்சலை உண்டாக்குகிறது.
- பொதுவாக பருவமழைக்காலத்தில்தான் டெங்கு பரவல் இருக்கும்.

## உயிர் சமநிலை

- பூச்சிகள் இருந்தால்தான் தவளை, தவளை இருந்தால்தான் பாம்பு, பாம்பு இருந்தால்தான் ஆந்தைகள். ஆந்தைகளும் பாம்புகளும் இருந்தால் பூச்சிகளும், எலிகளும் இயற்கையாகவே கட்டுப்படும்.
- இப்போது, இந்த உயிர் சமநிலை சிதைந்து, உணவுச் சங்கிலி அறுந்து, சில உயிரினங்கள் அதிகரித்தும், சில அழிந்தும் வருகின்றன.
- இதனூடே ரசாயன விவசாயம், பருவநிலை மாற்றம், சூழலியல் பாதிப்பு, உயிரினச் சூழலில் ஏற்பட்டிருக்கும் மாறுபாடுகளால் கொசுக்கள் எண்ணிக்கை பெருகி வருகிறது.
- பொதுவாக பறவைகள், மீன், தவளை, பூச்சிகள், வௌவால்கள், பல்லிகள் போன்ற ஊர்வனவற்றுக்கு கொசு முட்டையும் லார்வாவும் உணவாகின்றன.
- பூச்சிகளை உண்ணும் உயிரினங்களும், பறவைகளும் அழிந்து வருவதே கொசுக்கள் பெருக்கத்திற்கு காரணமாகிறது.
- கொசுக்களுக்கு ரசாயன தாக்கத்தைத் தாங்கி வாழும் திறன் இருக்கிறது. பெண் கொசுக்களென்றால் 42 முதல் 56 நாட்களும், ஆண் கொசுக்களென்றால் 10 நாட்களும் உயிர்வாழும்.
- அதே நேரம், கொசுக்களை உணவாகக் கொள்ளும் தட்டான், தவளை, ஈப்பிடிப்பான், தலைப்பிரட்டை, மீன் போன்ற உயிர்கள் ரசாயனங்களால் அழிந்து வருகின்றன.

## தட்டான்

- தட்டானின் முட்டை, தண்ணீரில்தான் வளரும். அது கூட்டுப்புழு ஆன பின்தான், மேலே பறக்கும். தட்டான்கள், கொசு முட்டைகளைத் தின்று வளரும்.
- தற்போது நீர், நிலம், காற்றில் பரவியுள்ள ரசாயனங்களால் தட்டான் இனம் அழிந்து வருகிறது. ரசாயனப் பயன்பாடு குறைந்தால்தான் நீர்நிலைகளில் தவளைகள் அதிகரிக்கும்; தவளைகள் அதிகரித்தால், கொசுக்கள் குறையும்.

# பிரம்மோஸ் ஏவுகணை

## அறிமுகம்

- பிரம்மோஸ் ஏவுகணைத் திட்டம் இந்தியா மற்றும் ரஷியாவின் கூட்டு முயற்சியால் 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- இந்தியாவின் டிஆர்டிஓ (பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் குழுமம்) மற்றும் ரஷியாவின் என்பிஓஎம் இணைந்து பிரம்மோஸ் ஏரோபேஸ் நிறுவனத்தை ஏற்படுத்தியது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ளது.

### பின்புலம்

- இரு அரசாங்கங்களுக்கிடையேயான இவ்வொப்பந்தம் 1998ஆம் ஆண்டு முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு, ஏ.பி.ஜே.அப்துல்கலாம் – அன்றைய ரஷிய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் மிக்கிலொங் – ஆல் கையெழுத்தானது.

### பெயர்க்காரணம்

- இந்திய நதியான பிரம்மபுத்திரா + இரஷிய நதி மோஸ்க்வா ஆகிய இரு நதிப் பெயர்களின் இணைப்பு பிரம்மோஸ் ஆகும்.

### பிரம்மோஸ் கூட்டுத் திட்டம்

- இந்தியாவின் பங்கு வீதம் – 50.5%
- இரஷியாவின் பங்கு வீதம் – 49.5%

### நோக்கம்

- உலகின் ஒரே சூப்பர்சோனிக் ஏவுகணை-யான 'பிரம்மோஸ்' கட்டமைத்தல், உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் இதன் நோக்கமாகும்.

### சிறப்பம்சங்கள்

- பிரம்மோஸ் ஏவுகணையை தற்போது நிலம், நீர், வான் என மூன்று நிலைகளில் இருந்தும் செலுத்த முடியும்.
- 2001இல் இதனை நில வழி தாக்குதலுக்கு ஏற்ப வடிவமைத்திருந்தனர்.
- பிரம்மோஸ் ஒரு சூப்பர்சோனிக் ஏவுகணை. இதன் வேகம் ஒலியைவிட அதிகம் (மக் 1 / Mach 1). ஒலியின் வேகம் – 343 து/வி.
- செலுத்து மற்றும் மறந்துவிடு' கொள்கையின்படி செயல்படுவது. இதனால் இலக்கை நோக்கி பாயும்பொழுது வெவ்வேறு முறைகளில்தன்னை தகவமைத்துக் கொண்டு பறக்க இயலும்.
- இந்தியாவின் மற்ற ஏவுகணைகளுடன் ஒப்பிடும் போது இதன் வேகம் மூன்று மடங்கு அதிகம்.
- தற்போது நீர்மூழ்கிக் கப்பலில் இருந்தும் இதனை செலுத்த முடியும். "தண்ணீரில் இருந்து வெளியே கட்டளை" என்பதன் அடிப்படையில் செயல்படும்.

### தயாரிப்புக் கூடங்கள்

- உற்பத்திக் கூடம் – ஹைதராபாத்
- உதிரிபாகக் கூடம் – திருவனந்தபுரம்

### வெளிநாடுகளின் ஆர்வம்

- பிலிப்பைன்ஸ் அரசாங்கம் பிரம்மோஸ் ஏவுகணையை வாங்க முடிவு செய்து, இந்திய – பிலிப்பைன்ஸ் இடையே ரூபாய் 3,103 கோடியில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.
- சவுதி அரேபியா உட்பட பிறநாடுகளும் பிரம்மோஸ் ஏவுகணையை வாங்க முடிவு செய்துள்ளது.
- செய்தியில் : இந்திய கடற்படை 200 பிரம்மோஸ் ஏவுகணைகளை ரூ15,000 கோடியில் வாங்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## சீன எல்லையில் பசுமை ஹைட்ரஜன் எரிசக்தி ஆலை

- தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தை இந்திய அரசு செயல்படுத்தி வரும் நிலையில், வடக்கு எல்லைப் பகுதியில் பசுமை ஹைட்ரஜன் அடிப்படையிலான எரிசக்தி உற்பத்தி ஆலையை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- தேசிய அனல் மின் கழகத்தின் (என்டிபிசி) கீழ் இயங்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையத்துடன் ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.
- கிழக்கு லடாக் எல்லையில் அமைக்கப்படவுள்ள அந்த ஆலையைக் கட்டுவது, இயக்குவது, நிர்வகிப்பது உள்ளிட்ட அனைத்து உரிமைகளும் என்டிபிசி-க்கு வழங்கப்படும்.
- சூரிய எரிசக்தி ஆலையுடன் இணைந்த பசுமை ஹைட்ரஜன் அடிப்படையிலான எரிசக்தி ஆலையாக அது செயல்படும்.
- சூரிய எரிசக்தியைப் பயன்படுத்தி நீரை மின்னாற்பகுத்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்யப்படும்.
- சூரிய எரிசக்தி கிடைக்காத நேரங்களில் பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்தி எரிசக்தி உற்பத்தி செய்யப்படும்.
- பசுமை ஹைட்ரஜன் அடிப்படையிலான எரிசக்தி உற்பத்தி ஆலையை அமைப்பதற்கு என்டிபிசி-யுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் முதல் அரசு அமைப்பாக இந்திய ராணுவம் திகழ்கிறது.

# காசநோய் இல்லா இந்தியா

## நோய்களின் தலைவர்

- காசநோய், தைசிஸ், டேப்ஸ், ஒயிட் பிளேக் என வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது.
- டியூபர்குளோசிஸ் (டி.பி) என்ற காசநோய் ஏற்படுத்திய இறப்பு விகிதம் காரணமாக நோய்களின் தலைவன் என்று கூறப்பட்டது.
- காற்றில் பரவும் பாக்டீரியாவால் ஏற்படுவது என்று டாக்டர் ராபர்ட் காக் என்ற ஜெர்மானிய மருத்துவ விஞ்ஞானி நிரூபித்தார்.

## மார்ச் 24

- மைக்ரோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ் என்ற பாக்டீரியாதான் காசநோய் ஏற்படக் காரணம் என்பதை உறுதி செய்த ராபர்ட் காக், 1882ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் தேதி அதை உலகிற்கு அறிவித்தார்.
- அந்த நாளைத்தான் உலக காசநோய் விழிப்புணர்வு நாளாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.
- அதை அனைத்து நாடுகளும் கடைப்பிடித்து வருகின்றன.

## அறிகுறிகள்

- 14 நாட்களுக்கு மேல் தொடர்ந்து, இருக்கக்கூடிய இருமல், காய்ச்சல், உடல் எடை குறைதல், பசியின்மை, மூச்சுத்திணறல், மார்புவலி, இரவு நேரத்தில் வியர்த்தல், இரத்தம் கலந்த சளி வெளியேறுதல், சோர்வு, மயக்கம், மந்தநிலை ஆகியவை காசநோய்க்கான அறிகுறிகள்
- இந்த நோயைக் கண்டறிய பரிசோதனை ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.
- 72 மணி நேரம் கழித்து ஊசி போட்ட இடத்தை ஆய்வு செய்யும்போது அவ்விடம் சிவந்தும் தடித்தும் இருந்து அதன் அளவு 10 எம்.எம் அல்லது அதற்கு அதிகமாக இருந்தால் காசநோய் தாக்கம் உள்ளது என்பது உறுதியாகும்.
- 6 முதல் 9 எம்.எம் வரை தடிப்பு இருந்தால் காசநோயின் தாக்கம் இருக்க வாய்ப்பு உள்ளது.
- 5 எம்.எம்க்கு குறைவாக இருந்தால் காசநோய் இல்லை எனலாம்.

## எளிதில் பாதிக்கும்

- சிகிச்சை பெற வரும் நோயாளிகளுடன் அதிக நேரம் செலவிடும் மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரையும் காசநோய் பாதிக்க அதிக வாய்ப்பு இருக்கிறது.
- உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்களை காசநோய் எளிதில் பாதிக்கும்.
- குறிப்பாக எச்.ஐ.வி உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டு அதன் தொடர்ச்சியாக மருந்து மாத்திரை சாப்பிடுபவர்களை காசநோய் உடனே பாதிக்கும்.
- எச்.ஐ.வியும் காசநோயும் நெருக்கமான தொடர்புடையவை.
- தலைமுடி, நகம் தவிர உடலின் எந்த உறுப்பிலும் காசநோய் பாதிப்பு ஏற்படக்கூடும்.
- இந்நோய் 60% முதல் 70% வரை நுரையீரலைத் தாக்குகிறது.
- மற்ற உறுப்புகளை 30% முதல் 40% வரை பாதிக்கும்.
- காசநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க வேண்டியது மிகவும் முக்கியம்.
- அப்படி கண்டுபிடித்து விட்டால் ஆறே மாதத்தில் நோயாளியை குணப்படுத்திவிடலாம்.
- காசநோயால் மரணம் ஏற்படுவது மல்டி டிரக் ரெசிஸ்டன்ஸ் என்கிற நோய் முற்றிய நிலையில்தான், காசநோய் பாதித்தும், சரியாக மருந்து, மாத்திரைகள் சாப்பிடாமல் இருப்பது, தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ளாதது போன்ற காரணங்களால் நோய் முற்றிய நிலைக்குச் செல்பவர்கள் உண்டு.
- இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள காசநோய் பாதிப்பில் 5% தமிழகத்தில் காணப்படுகிறது.
- இந்தியாவில் அதிகபட்சமாக உத்திரப்பிரதேசத்தில் 20% பாதிப்பு உள்ளது.
- 2030ஆம் ஆண்டிற்குள் காசநோயை இந்தியாவை விட்டு விரட்ட மருத்துவத் துறையினர் இலக்கு நிர்ணயித்துள்ளனர்.
- அந்த இலக்கு எட்டப்படும் என்று நம்புவோம்.

## இஸ்ரோவின் எல்விஎம்-3

- இங்கிலாந்தின் ஒன்வெப் நிறுவன செயற்கைக் கோள்களை ஜிஎஸ்எல்வி மார்க்-3(எல்விஎம்-3) ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த, இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் (Newspace India Limited) நிறுவனம் சுமார் ரூ.1,000 கோடியில் ஒப்பந்தம் செய்தது.
- முதல் கட்டமாக, 36 செயற்கைக் கோள்கள் எல்விஎம்-3 ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.
- பூமியில் இருந்து 450 கி.மீ தூரத்தில் உள்ள சுற்றுப்பாதைகளில் 36 செயற்கைக் கோள்களும் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன.
- இவற்றின் மொத்த எடை 5,805 கிலோ. இணைய சேவை பயன்பாட்டுக்காக இவை ஏவப்பட்டுள்ளன

### பாகுபலி

- இஸ்ரோவின் 'பாகுபலி' என வர்ணிக்கப்படும் எல்விஎம்-3 ராக்கெட் 43.5 மீட்டர் உயரம், 640 டன் எடை கொண்டது.
- மிகவும் சிக்கலான கிரையோஜெனிக் தொழில்நுட்பத்தில் செயல்படக்கூடியது.

## செறிவூட்டப்பட்ட அரிசி

- இந்தியாவில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைப்பதற்கு 2020 முதல் 2022ஆம் ஆண்டுவரை 112 மாவட்டங்களில் செறிவூட்டப்பட்ட அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டு, மாதிரி ஆய்வு நடத்தப்பட்டது.
- எல்லா மாநிலங்களிலும் பொது விநியோக முறை, மதிய உணவுத் திட்டம் உள்ளிட்ட அரசு சார்ந்த திட்டங்கள் மூலம் செறிவூட்டப்பட்ட அரிசியை வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 5.51 லட்சம் அந்தியோதயா அன்னயோஜனா, முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்கள் ஆகியோருக்குச் செறிவூட்டப்பட்ட அரிசி ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு

- ஏப்ரல் 1 முதல் மாநிலம் முழுவதும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை நீட்டிக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- தமிழ்நாட்டில் சுமார் 18.64 லட்சம் அந்தியோதயா அன்ன யோஜனா பயனாளர்கள், 96.12 லட்சம் முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்கள், 1.1 கோடி முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்களுக்குச் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### செறிவூட்டுதல்

- நாம் உண்ணும் உணவின் ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்தும் வகையில், தேவையான நுண்ணூட்டச் சத்துக்களின் உள்ளடக்கத்தைத் திட்டமிட்ட வகையில் அதிகரிப்பதே, செறிவூட்டல் என இந்திய உணவுப் பாதுகாப்பு, தர நிர்ணய ஆணையம் வரையறை செய்துள்ளது.
- இந்த அரிசியில் இரும்பு, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி - 12 ஆகிய ஊட்டச்சத்துக்கள் செயற்கையாக ஏற்றப்படும்.
- வைட்டமின்கள், தாதுக்கள் உள்ளிட்ட பல நுண்ணூட்டச் சத்துப் பொருள்கள் கொண்ட செயற்கையான செறிவூட்டும் கலவை (பிரிமிக்ஸ்) இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த வேதிப்பொருள் கலவையும், மாவாக்கப்பட்ட அரிசியும் சேர்க்கப்படும்.
- பிறகு, இந்த மாவு அரிசி வடிவில் மீண்டும் இயந்திரங்களில் வார்த்தெடுக்கப்படுகிறது.
- சாதாரண அரிசியுடன் 100 : 1 என்ற விகிதத்தில் இந்தச் செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் கலக்கப்படுகின்றன.

### அறிவியல் உண்மைகள்

- தானியங்களில் இரும்புச் சத்தை செறிவூட்டுவது உடலில் ஃபெரிடின் போன்ற இரும்புச் சத்து சார்ந்த சேமிப்பைக் கணிசமாக அதிகரிக்கும்.
- அது மட்டுமல்லாமல், ஹீமோகுளோபின் அளவையும் இது உயர்த்தாது என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- குடலில் உள்ள நல்ல நுண்ணுயிர்களை அழித்து பாக்டீரியத் தொற்று எளிதில் ஏற்படவும் இரும்புச்சத்து வழிவகுக்கும்.
- உடலில் இரும்புச்சத்து அதிகரித்தால் நீரிழிவு நோய் பாதிப்பு ஏற்படலாம்.
- பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல் குழந்தைகளுக்கும் உயர் ரத்த அழுத்தம் ஏற்பட சாத்தியமுள்ளது.

- ரத்த சோகையின் தீவிரமான பிரச்சனைகளில் ஒன்றான, அரிவாள் உயிரணுச் சோகையால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தியாவில் அதிகம் உள்ளனர்.
- இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட உணவால் ஏற்கனவே உள்ள பாதிப்புகள் இவர்களுக்கு அதிகரிக்கும்.
- இத்தகைய பிரச்சனைகளை ஒப்புக்கொள்ளும் அரசாங்க அதிகாரிகள், குறிப்பிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இரும்புச்சத்து நிறைந்த உணவு வகை சார்ந்த பைகளில் எச்சரிக்கை வாசகங்களைப் பொறித்துவிட்டார், தீய விளைவுகளைத் தவிர்த்து விடலாம் என்கின்றனர்.
- போதிய கல்வியறிவும் விழிப்புணர்வும் இல்லாதவர்கள் நிறைந்த நாட்டில், இந்த எச்சரிக்கை வாசகங்களால் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த இயலாது என்பதே உண்மை.

### யாருக்கு லாபம்

- செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் மருத்துவ அறிவியல் கண்ணோட்டத்துடன் உருவாக்கப்படவில்லை.
- ரத்தசோகை, பசி, ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்கான தீர்வுகளை, தானியங்களைச் செறிவூட்டுவதன் மூலமாக மட்டும் சரிசெய்துவிட முடியாது.
- பல தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், மீன், அசைவ உணவு போன்ற சத்தான பல்வேறு உணவு வகைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம்தான் பூர்த்தி செய்ய முடியும்.
- பன்முகத்தன்மை மிகுந்த சத்தான உணவு வகைகளைக் குழந்தைகள், பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மருத்துவ, ஊட்டச்சத்து நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.
- உடல் சிறப்பாகக் கிரகித்துக் கொள்ளக்கூடிய காய்கறி, பழங்கள், தானியங்களைக் குறைந்த விலையிலும், எளிதாகக் கிடைக்கும் வகையிலும் சமூக – பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதே அரசு செய்ய வேண்டியது.
- அதற்குப் பதிலாகச் செயற்கையாக ஊட்டமேற்றப்பட்ட அரிசியைத் தருவதால் என்ன உத்தரவாதமான பலன் கிடைக்கப் போகிறது?

### விழிப்புணர்வுப் பிரச்சாரம்

- பொது விநியோக முறையில், செறிவூட்டப்பட்ட அரிசியைக் கண்மூடித்தனமாக வழங்கும் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்.
- மூன்று வருட கால மாதிரி ஆய்வுகளில் கிடைத்த தரவுகளைப் பொதுவெளியில் வெளியிட வேண்டும்.
- அப்போதுதான் இந்தத் திட்டத்தின் சாதக, பாதக அம்சங்களைத் துறைசார் நிபுணர்களும் மக்களும் முழுமையாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு உருவாகும்.
- இதுதொடர்பாக, மக்கள் மத்தியில் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.
- அதன்பிறகு, மருத்துவ, ஊட்டச்சத்து நிபுணர்களின் முறையான ஆய்வுத் தரவுகள் அடிப்படையில் இந்தத் திட்டத்தை மாற்றியமைத்து செயல்படுத்த முன்வர வேண்டும்.

## விண்வெளியில் வெள்ளி விழா

### சர்வதேச விண்வெளி நிலையம்

- இந்தியா உள்பட உலகின் அனைத்து முன்னணி நாடுகளும் விண்வெளி ஆராய்ச்சிக்காக பூமியில் இருந்து தொடர்ந்து செயற்கைக் கோள்களை ஏவி வருகின்றன.
- குறிப்பாக அமெரிக்காவின் நாசா, ரஷியா, ஐரோப்பாவின் ஈசா, இந்தியாவின் இஸ்ரோ போன்ற விண்வெளி மையங்களில் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் மூலம் விண்கலங்களை அனுப்பி விண்வெளி ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றன.
- வலிமை மிக்க நாடுகள் என்று வர்ணிக்கப்படும் அமெரிக்கா, ரஷியா மற்றும் பிரிட்டன், கனடா, ஜப்பான் ஆகிய 5 உலக நாடுகள் தங்களுக்கென சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்க முடிவு செய்தன.

### 10 ஆண்டு முயற்சி

- விண்வெளிக் கப்பல்கள் (ஸ்பேஸ் ஷிப்ஸ்) மூலம், 10 ஆண்டுகள் தொடர்ந்து இதற்கான பாகங்கள் விண்வெளிக்கு எடுத்துச்

செல்லப்பட்டு, கடந்த 1998-ம் ஆண்டில் பூமியில் சுற்றுவட்டப்பாதையின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இவை மிதக்கவிடப்பட்டன.

- பிறகு விண்வெளி வீரர்கள் 30 முறை விண்வெளிக்குச் சென்று இந்த பாகங்களை மெல்ல மெல்ல வெற்றிகரமாக ஒன்றிணைத்தார்கள்.
- இதன் மொத்த எடை 460 டன். அதாவது, கிட்டத்தட்ட ஒரு கால்பந்து மைதானம் அளவு பரப்பளவு கொண்டது என்றால் இந்த பிரம்மாண்டத்தை கற்பனை செய்து பாருங்கள்.
- பூமியில் இருந்து 360 கி.மீட்டர் உயரத்தில் மிதந்தபடி பூமியின் சுற்றுவட்டப் பாதையில் இது வலம் வருகிறது.

## கண்காணிப்பு

- விண்வெளி நிலையத்துக்குச் செலவிட்ட நாடுகள் விண் கப்பல்கள் மூலம் பயணம் செய்து பூமியின் இயக்கம்
- அதன் சுற்றுச்சூழல் மாற்றங்கள்
- கடலில் உருவாகும் புயல்களின் நகர்வுகளை கண்காணித்தல்
- பால்வெளியை நோக்குதல் என தொடர்ச்சியாக வீடியோ பதிவு மூலம் கண்காணிக்கிறார்கள்
- பூமிக்கு வெளியே மனிதனால் கட்டப்பட்ட பிரம்மாண்ட அமைப்பாக சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம் உள்ளது.
- 19 நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு சென்று வெற்றிகரமாக திரும்பியுள்ளனர்.
- ஒவ்வொரு 24 மணி நேரத்திலும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம் 16 சூரிய உதயம், 16 சூரிய மறைவை சந்திக்கிறது.
- பூமியில் இருந்து கிளம்பும் விண்வெளிக் கப்பல் சுமார் 6 மணி நேரத்தில் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை சென்றடையும்.
- இந்த விண்வெளி ஆய்வு நிலையம் கிட்டத்தட்ட 90 நிமிடங்களில் பூமியை ஒரு முழு சுற்று சுற்றி விடுகிறது.
- மனிதனால் உருவாக்கப்பட்ட மிகவும் செலவு அதிகமான ஆய்வகம் இது. இதனுடைய மொத்த மதிப்பு 12 கோடி அமெரிக்க டாலர்கள்

## ஆராய்ச்சி கூடங்கள்

- பூமியில் விண்வெளி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதைவிட, விண்வெளியில் பூஜ்ய ஈர்ப்பு விசையில் தனித்துவமான முறையில் ஆராய்ச்சி செய்வதற்காகவே இந்த சர்வதேச விண்வெளி நிலையம் உருவாக்கப்பட்டது.
- விண்வெளி வீரர் ஒருவர் அனுப்பப்படுவதற்கு முன், அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள், பரிசோதனைகள், கருவிகள் செயல்பாடு குறித்து பூமியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி விண்வெளி கூடத்தில் பயிற்சி அளிக்கப்படும்.
- சர்வதேச விண்வெளி நிலையத்தில் மொத்தம் 5 ஆராய்ச்சிக் கூடங்கள் உள்ளன. ரஷியாவிற்கு சொந்தமாக 2 சிறிய ஆராய்ச்சிக் கூடங்களும், அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு தலா ஒரு ஆராய்ச்சி கூடங்களும் உள்ளன.
- விண்வெளியில் இருந்து பூமியை படம் பிடிப்பது, தரவுகளை திரட்டுவது போன்ற பணிகளோடு ஒரு செல் உயிரிகள், எலிகள், எறும்புகள், மீன், புழுக்கள் ஆகியவற்றை பூஜ்ய ஈர்ப்பு விசையில் வைத்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## வெள்ளி விழா நிறைவு

- அடுத்த ஆண்டு (2024) வரை தான் சர்வதேச விண்வெளி நிலையத்தின் செயல்பாடு இருக்கும் என திட்டமிடப்பட்டு இருந்தது.
- நிலையத்தின் கட்டுமான பணிகளும் அதற்கேற்றபடி தான் வடிவமைக்கப்பட்டு இருந்தது.
- இருப்பினும் இந்த நிலையம் அடுத்த 6 ஆண்டுகளுக்கு செயல்படும் தன்மையுடன் இருப்பதால் 2030-ம் ஆண்டு வரை சர்வதேச விண்வெளி நிலையத்தை இயக்கலாம் என அமெரிக்கா உள்பட ஒப்பந்த நாடுகள் முடிவு செய்துள்ளது.

## விண்ணில் விவசாயம்

- 2012-ம் ஆண்டில் விண்வெளியில் முதன் முதலில் பூத்தது சூரியகாந்தி பூ தான். அதைத் தொடர்ந்து 2016-ல் ஜின்னியா மலர்ந்தது.
- கடந்த 2015-ம் ஆண்டு விண்வெளி விவசாயத்தில் விஞ்ஞானிகள் வெற்றி அடைந்தனர்.
- அன்று பயிரிடப்பட்ட தாவரத்தின் பெயர் 'வெஜ் 01'. இது ஒரு சிவப்பு நிறக்கீரை. இது முளைத்து 33 நாட்கள் கடந்து கீரையான பின்னர் அங்கிருந்த விண்வெளி வீரர்கள் இதனை உணவாக்கிக் கொண்டனர்.
- இதை சாப்பிடும் முன்பாக சிட்ரிக் அமிலம் சார்ந்த ஒரு வகை கரைசல் மூலம் சுத்தப்படுத்தி பிறகு உண்டனர்.
- விண்வெளியில் இதுவரை உருளைக்கிழங்கு, தானியங்கள், அரிசி, தக்காளி, மிளகு, கீரை, முட்டைக்கோஸ், ஸ்ட்ராபெரி, வெங்காயம், மிளகு துலிப் மலர், சூரியகாந்தி ஆகியவை பயிரிட்டு சோதித்து பார்க்கப்பட்டுள்ளது.

# 05 தமிழ் சமூகம்

## பிறமொழி கலப்பின்றிப் பேசுவோம்!

### தொன்மை

- தமிழ்மொழியின் உயர்வுக்கு அதன் தொன்மையும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. திருவள்ளுவரின் திருக்குறள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் மணிவாசகரின் திருவாசகம் முதலான நூல்கள் உலகப் புகழ் பெற்றவையாகத் திகழ்கின்றன. மக்களின் உயர்வுக்கு வழிகாட்டுகின்றன. மக்களின் உயர்வுக்கு வழிகாட்டுகின்ற இலக்கியங்கள் தமிழில் நிரம்ப உண்டு.

### இந்தியாவின் இதிகாசம்

- இந்தியாவில் இதிகாசம் என்று போற்றப்படும் நூல்கள் இரண்டு. அவை வால்மீகி இயற்றிய ராமாயணமும், வியாசர் இயற்றிய மகாபாரதமும். இந்நூல்கள் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும், இவற்றில் தமிழ்நாடு, தமிழ் மொழி பற்றி பல்வேறு குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

### திராவிட மொழியின் தாய்

- தமிழ் மொழி தனித்த மொழி என்பது அதன் மற்றுமொரு சிறப்பு. தமிழ்மொழி வாழ வளர மற்றொரு மொழியின் துணை தேவையில்லை. ஆனால், பல மொழிகள் வாழ தமிழ்மொழி உதவியாக இருந்திருக்கிறது.
- மலையாளம், தெலுங்கு, கன்னடம் துளு ஆகிய திராவிட மொழிக்குடும்பத்தின் தாயாகத் தமிழே திகழ்கிறது.

### செம்மொழி

- செம்மொழி என்பதற்கான அடிப்படைத் தகுதி திருத்தமான மொழி தெளிவான எழுத்து வடிவம்.
- எழுத்து வடிவத்திற்கு ஏற்ற ஒலிப்பு முறை எழுத்து வடிவத்திற்கும் ஒலிப்பு முறைக்கும் ஏற்ற பொருள் முடிவு.
- இவற்றைப் பெற்ற மொழியே திருத்தமான மொழி எனப்படும். தமிழ்மொழிக்கு தெளிவான எழுத்துவடிவம், ஒலிப்புமுறை, பொருள் முடிவு ஆகியன இயல்பாகவே அமையப் பெற்றிருக்கின்றன. ஆகவேதான், தமிழ்மொழி செம்மொழிக்குத் தகுதியைப் பெற்றிருக்கிறது.
- வளர்ந்து வரும் செம்மொழியாவும் வாழ்ந்து வரும் செம்மொழியாகவும், பழைமைக்குப் பழைமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் விளங்குவது நமது தமிழ் மொழி ஒன்றே.

### ஐந்திலக்கணம்

- உலக மொழிகளில் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு அணி உண்டு, ஆனால் தமிழ்மொழியில் மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகவேதான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர்.
- பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் என்னும் நூல் வழி அறியலாம்.
- மேலும் அகத்திணை ஏழும், புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ்.
- வீரத்தைப் பறைசாற்றும் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும்
- மனத்தை நெகிழ வைக்கும் தேவாரம் திருவாசகம்
- தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கண இலக்கிய நூல்கள் தமிழுக்கு வளம் சேர்ந்திருக்கின்றன.
- பெரும்பாலான வட இந்திய மொழிகளில் க,ச,ட,த,ப என்னும் ஐந்து வகைகளில் ஒவ்வொரு ஒலிக்கும் நான்கு நான்கு எழுத்துகள் இருக்கின்றன.
- ஆனால் தமிழில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எழுத்துதான், ஒலி வேறுபட்டபோதும் எழுத்து ஒன்றுதான்.
- அதிக எழுத்துகளை நினைவில் வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்பதால், தமிழைக் கற்பது மிக மிக எளிதான ஒன்றாகும்.

## தொல்லியல் அதிசயம்

- சங்ககால தமிழ் இலக்கியங்கள் படித்திருப்போம். தமிழர்களின் வாழ்வியல், பழக்க வழக்கங்கள், வசிப்பிடம், வணிகம், வீரம், காதல், திருமணம், இறப்பு – இப்படி எத்தனையோ தகவல்களை வெறும் பார்வையாளராக படித்து விட்டு நகர்ந்திருப்போம். ஆனால் அதற்கான சான்றுகள் பூமிக்கடியில் புதைந்து கிடக்கிறது.
- இன்றைய நாகரீக வாழ்வின் அச்சாரம், சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. ஆதி தமிழன் வாழ்க்கையே ஒரு அற்புதம். அழகியலோடு கட்டிடங்கள் கட்டி வாழ்ந்தான்.
- தனியறைக்குள் கழிப்பறை வசதிகளோடு கூட வாழ்ந்திருக்கிறான் என்ற கீழடியில் தோண்ட, தோண்ட கிடைத்த அடையாளங்கள், உலகத்தையே உலுக்கிப்போட்டது. அந்த இடம்தான் கீழடி.
- மதுரை மாட்டுத்தாவணி பஸ்நிலையத்தில் இருந்து 12வது கிலோ மீட்டரில், ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலையில் கீழடி உள்ளது.

### முதல்கட்ட அகழாய்வு

- பழங்கால தமிழர்களின் வாழ்வியல் ஆதாரங்களை கண்டறியலாம் என எண்ணி, ஒன்றிய அரசின் ஒப்புதலுடன் முதலாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த 2014-ம் ஆண்டு தொடங்கியது.

### கண்கவர் கட்டுமானம்

- 2016 வரை ஒன்றிய அரசு அகழாய்வு பணிகளை தொடர அனுமதித்தது. இந்த ஆய்வின்போது சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்களின் கட்டிட கட்டுமானங்கள், சாயப்பட்டறை, செங்கல் உள்ளிட்டவை கிடைத்தன.
- இதன் மூலம் நாகரீக மனித வாழ்வின் முன்னோடியே தமிழர்கள்தான் என உலகமெங்கும் அறியப்பட்டது.
- தொடர்ந்து கிடைத்த அகழாய்வு சுடுமண் பொருட்கள், இரும்பு, தங்கம் உள்ளிட்ட பொருட்கள் மூலம், அந்த காலத்திலேயே தமிழர்கள் அணிகலன்கள் அணிந்து, அற்புதமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பது நிரூபணமானது.
- இதையடுத்து ஒன்றிய பாஜ அரசு, தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணாவை அதிரடியாக இடமாற்றம் செய்தது.

### தமிழ்நாடு அரசு நிதியில்....

- ஒன்றிய அரசின் 3 அகழாய்வுகளுக்கு பின் 2017ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசு தனியாக நிதி ஒதுக்கி, அகழாய்வு பணிகளை மேற்கொண்டது.
- கீழடி, அகரம், கொந்தகை உள்ளிட்ட இடங்களிலும் அகழாய்வு தொடர்ந்தது.
- தமிழ்நாட்டில் அகழாய்வு நடந்த கீழடி, சிவகளை, கொற்கை, அரிட்டாபட்டி உள்ளிட்ட 21 இடங்கள் பற்றிய பிரம்மாண்ட சைஸ் வரைபடம் நம்மை வரவேற்கிறது.

### கீழடியை தொடர்ந்து 3 தளங்களில் ஆய்வு

- கீழடியை தொடர்ந்து அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய தளங்களிலும் அகழாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- இதில் கொந்தகை தளம் பண்டைய காலத்தில் இடுகாடாக பயன்படுத்தப்பட்டது கண்டறியப்பட்டது. கொந்தகையில் பண்டைய காலத்தில் மூன்று விதங்களில் இறந்தவர்களை புதைப்பது கண்டறியப்பட்டது.
- பராமரிக்க முடியாத முதியவர்களை உயிருடன் உணவு, தண்ணீர் வைத்து மிகப்பெரிய தாழியினுள் வைத்து அப்படியே புதைப்பது, இறந்தவர்களை அவர்கள் சம்பந்தப்பட்ட பொருட்களுடன் புதைப்பது, வேறு இடத்தில் இறந்தவர்களை எடுத்து வந்து தாழியினுள் வைத்து புதைப்பது என மூன்று நிலைகள் கண்டறியப்பட்டன.

## நகர நாகரிகத்துடன் வாழ்ந்த பழந்தமிழ் சமூகம்

### அமர்நாத் ஆய்வு

- தமிழக நதிகளில் மிகவும் பழமையானது வைகை. இதன் நதிக் கரைகளில் மத்திய தொல்லியல் துறையின் துணைக் கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையிலான குழு ஆய்வு செய்தது.
- அதில் வைகை ஆற்றின் இருபுறமும் 293 இடங்களில் தொல்லியல் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளம் இருந்த 100 இடங்கள் அகழாய்வு மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டன.
- முதல்கட்டமாக சிவகங்கை மாவட்டம் கீழடி கிராமத்தில் மத்திய தொல்லியல் துறையினர் அகழாய்வைத் தொடங்கினர்.

- தமிழக தொல்லியல் துறை 4, 5-ம் கட்ட அகழாய்வுகளில் ஈடுபட்டது. இதில் 6,800-க்கும் மேற்பட்ட தொல்பொருட்களும், பழந்தமிழரின் கட்டுமானப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டன.

### 2,600 ஆண்டுகள் பழமை

- இதன்மூலம் கீழடியில் 2,600 ஆண்டுகள் பழமையான நகர நாகரிகம் நிலவியது தெரியவந்தது. மேலும், கங்கை சமவெளியின் நகரமயமாக்கலுக்கு சமகாலமானது என்பதும் உறுதி செய்யப்பட்டது.
- தொடர்ந்து, கீழடி மற்றும் அதைச் சுற்றிய மணலூர், அகரம், கொந்தகை ஆகிய இடங்களில் 6-ம் கட்ட அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.
- 60-க்கும் மேலான தமிழில் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கிடைத்தன. இவை, 6-ம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் வாழ்ந்ததற்கான முக்கிய சான்றுகளாகும்.
- இது தவிர ரோம் நாடு, குஜராத், கங்கை சமவெளி உட்பட பல்வேறு பகுதிகளுடன் வாணிபத் தொடர்பு இருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

## கீழடி அருங்காட்சியகம்

### பழந்தமிழர்களின் காலடி, அதுதான் கீழடி...!

- கூடல் (மதுரை) நகரையொட்டிய வைகை கரை நாகரிகத்தின் வயது சுமார் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- அதை மெய்ப்பித்த இடம்தான் கீழடி.

### அருங்காட்சியகம்

- கீழடியில் அகழாய்வு நடந்தபோது, அதன் அருகில் உள்ள கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களிலும் அகழாய்வுகளை தொல்லியல் துறை மேற்கொண்டு அங்கும் பல்வேறு பொருட்களை கண்டெடுத்தனர்.
- மேற்கண்ட 4 ஊர்களிலும் கிடைத்த பொருட்கள்தான் கீழடி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்படுகின்றன. 2 ஏக்கர் பரப்பளவில் 31 ஆயிரம் சதுர அடியில், ரூ.18 கோடியே 43 லட்சம் செலவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

### கீழடி கடந்து வந்த பாதை

- கீழடியில் பழங்கால பொருட்களுடன், தமிழர்களின் முற்கால நாகரிகமும் மண் மூடி கிடந்ததை அறிந்த தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள் அங்கு அகழாய்வு நடத்த வேண்டும் என அரசுக்கு குரல் கொடுத்து வந்தனர்.
- 2014-ல் வைகை கரை பகுதியில் அகழாய்வு நடத்த அனுமதி வழங்கப்பட்டது.
- 2015-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கட்ட அகழாய்வு, மத்திய தொல்லியல் துறை சார்பில் தொடங்கப்பட்டது.
- 2016-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் கட்ட அகழாய்வு பணி தொடங்கி நடைபெற்றது.
- 3-ம் கட்ட அகழாய்வு 2017-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கியது.
- அதன்பின்பு, தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் 4-ம் கட்ட அகழாய்வு பணி 2018-ம் ஆண்டு நடைபெற்றது.
- 2019-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் கட்ட அகழாய்வு பணி தொடங்கியது. இந்த அகழாய்விலும் பணி தொடங்கியது. இந்த அகழாய்விலும் ஏராளமான வியக்கத்தக்க வகையிலான பொருட்கள் கிடைத்தன.
- 6-ம் கட்ட அகழாய்வு பணிகள், 2020-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கி சில மாதங்கள் நடைபெற்றன.
- 2021-ல் 7-ம் கட்ட அகழாய்வு பணி நடந்தது.
- 8-ம் கட்ட அகழாய்வு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு, செப்டம்பரில் நிறைவு பெற்றது.
- இந்த 8 கட்டங்களாக சேகரிக்கப்பட்ட பொருட்கள் தான் கீழடி அருங்காட்சியகத்தில் இடம்பெறுகின்றன.
- இதில் 4-ம் கட்ட அகழாய்வு முடிவுகள் தமிழக அரசால் வெளியிடப்பட்டன. அதன் மூலம் கீழடியில் கிடைத்த பொருட்கள் சுமார் 2600 ஆண்டுகள் பழமையானவை என அறிவிக்கப்பட்டது.
- அதன்பின்பு நாடு முழுவதும் உள்ள தொல்லியல் ஆராய்ச்சியாளர்களின் கண்கள் கீழடியையும் உற்று நோக்கியது.

### கிடைத்த பொருள்கள்

- எடைக்கற்கள் மிகவும் முக்கியமானவை. இந்த எடைக்கற்களானது பல துல்லிய எடைகளில் கிடைத்தன.
- செங்கல் கட்டுமானங்கள், மண்பாண்ட ஓடுகள், மண்ணால் செய்த மணிகள், மண் அடுக்குகள், முத்து மணிகள், கல் மணிகள்,

பானை குறியீடுகள், கண்ணாடி மணிகள், இரும்பு மற்றும் உலோகத்தால் செய்த ஆயுதங்கள், சதுரங்க காய்கள், கலைநயமிக்க பானைகள், நீர்வழிப்பாதை தடங்கள், பல அடுக்கு உறைகிணறுகள் உள்ளிட்ட ஏராளமான பழங்கால பொருட்கள் கிடைத்தன.

- தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஓடுகளும் கிடைத்தன. கண்ணாடிகள், பச்சைக்கல், சூதுபவளம், காதணிகள், தந்தத்தில் செய்த சீப்பின் ஒரு பகுதி, செப்பு பொருட்கள், எலும்பு முனைகள், சுடுமண் உருவங்கள், காளை, குதிரை, மனிதனின் தலை போன்ற உருவங்கள் கிடைத்தன. இதில் இன்னொன்றாக கிரீடம் அணிந்தது போன்ற தலை ஒன்றும் கிடைத்தது.
- யானை தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக்காய், கூம்பு, நட்சத்திரம் போன்ற வடிவங்களில் தங்க ஆபரணங்களும் கிடைத்தன.
- தக்களி எனப்படும் சிறு சிறு கருவிகள், விளையாட பயன்படுத்திய வட்ட சில்லுகள் உள்ளிட்டவையும் கண்டெடுக்கப்பட்டன.
- புகைப்பான், சூதுபவளம், முதுமக்கள் தாழிகள், மனித எலும்புக்கூடுகள், சுடுமண் உலை உள்ளிட்டவையும் கிடைத்தன.

## கீழடி : துலங்கும் தமிழ் வரலாறு!

### நகர நாகரிகம்

- மதுரைக்குத் தென்கிழக்காக, 12 கி.மீ தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் வைகை ஆற்றங்கரையோரம் அமைந்துள்ளது கீழடி.
- இங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அகழாய்வு, தமிழ்நாட்டில் சங்க காலத்தில், வைகை ஆற்றின் கரைகளில் நகர நாகரிகம் (urban civilisation) செழித்திருந்ததற்கான ஆதாரங்களை வழங்குகிறது.

### கீழடி அகழாய்வு அறிக்கை

- இந்தியத் தொல்லியல் ஆய்வகம் (Archaeological Survey of India - ASI), 2013-14 ஆம் ஆண்டில் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வைகைச் சமவெளிப் பகுதியில் 293 தளங்களில் அகழாய்வு மேற்கொண்டது. அதில் கீழடியும் ஒன்று.
- தொல்லியல் கண்காணிப்பாளர் கே.அமர்நாத் ராமகிருஷ்ணா தலைமையில், 2014 மற்றும் 2016 ஆண்டுகளில், கீழடியில் இரண்டு கட்டங்களில் அகழாய்வு நடைபெற்றது.
- இந்த அகழாய்வின் அறிக்கையை, இந்தியத் தொல்லியல் ஆய்வக இயக்குநர் வி.வித்யாவதியிடம் அமர்நாத் சமர்ப்பித்தார்.
- 12 அத்தியாயங்களுடன் 982 பக்கத்துக்கு நீளும் இந்த அறிக்கை, கீழடியின் வரலாற்றுப் பின்னணி, அகழாய்வின் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பதிவு செய்திருக்கிறது.

### சங்க காலம்

- பொ.ஆ.மு.(கி.மு) 3 ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.(கி.பி.) 3 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டம். மதுரையில் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களால் 'சங்க காலம்' எனப் பெயரிடப்பட்டது.
- தமிழ்நாடு தொல்லியல் துறை, கீழடியில் 2019இல் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த தொல்கலைப் பொருள்கள் ஒன்றின் காலகட்டம், பொ.ஆ.மு.6 ஆம் நூற்றாண்டுக்கும் பொ.ஆ.மு.1 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டது.
- கதிரியக்கக் கரிமக் காலக்கணிப்புக்காக (carbon dating) அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- காலகட்டம் பொ.ஆ.மு.580 எனக் கண்டறியப்பட்டிருக்கிறது. இது சங்க காலத்தின் காலகட்டத்தைக் கூடுதலாக 300 ஆண்டுகள் பின்னோக்கி நகர்த்தியிருக்கிறது.

### நகர நாகரிகம்

- சங்க காலத்தில் தமிழ்நாட்டின் நகர நாகரிகம் பற்றிய விரிவான பதிவுகள் சங்க இலக்கியத்தில் காணக் கிடைக்கின்றன.
- கீழடியின் செங்கல் கட்டுமானங்கள், ஆடம்பரப் பொருள்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் என நகர நாகரிகத்துக்கான எல்லா கூறுகளையும் கீழடி கொண்டிருப்பதாகத் தமிழ்நாடு தொல்லியல் துறை உறுதிப்படுத்துகிறது.

### சிந்துவெளித் தொடர்பு

- சிந்துவெளி நாகரிகத்துடனான கீழடியின் சாத்தியமுள்ள தொடர்புகள் பற்றிய அறிக்கை வெளியான பிறகு, இந்தியத் தொல்லியல் ஆய்வகம் கீழடியில் மூன்றாம் கட்ட அகழாய்வைத் தொடங்குவதில் தொய்வு ஏற்பட்டது (2017).

- கீழடி அகழாய்வின் தொல்லியல் கண்காணிப்பாளரான அமர்நாத் ராமகிருஷ்ணா, அஸ்ஸாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.
- சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தலையிட்ட பிறகு, தமிழ்நாடு தொல்லியல் துறை கீழடியில் அகழாய்வு மேற்கொள்ள இந்தியத் தொல்லியல் ஆய்வகம் அனுமதித்தது.
- கீழடி நாகரிகத்துக்கும் சிந்துவெளி நாகரிகத்துக்கும் சுமார் 1,000 ஆண்டு பண்பாட்டு இடைவெளி இருந்தாலும், கீழடியில் கண்டெடுக்கப்பட்ட சில பொருள்களில் உள்ள அடையாளங்கள், சிந்துவெளியின் குறிகளுடன் நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்துகின்றன.
- எனினும், சிந்துவெளிக்கும் கீழடிக்குமான தொடர்பை உறுதிப்படுத்த, இன்னும் ஆழமான அகழாய்வும் அது பற்றிய விரிவான ஆய்வுகளும் தேவை.

## தேசிய கலாச்சார பல்கலைக்கழகம்

- நம் நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட கலாச்சாரம் காணப்படுகிறது.
- நவீன கால மாற்றத்தால் இது மறைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.
- இதை காத்து, இந்தியா ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாடு என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு புதிய யோசனை.

### ஆய்வு

- நாட்டில் தேசிய கலாச்சார பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்.
- வேதங்கள், உபநிடதங்கள் மற்றும் இந்திய மொழிகளின் வரலாறு உள்ளிட்டவை குறித்து இப்பல்கலைக்கழகம் ஆய்வு மேற்கொள்ளலாம்.
- தேசிய கலாச்சார பல்கலைக்கழகத்தை டெல்லியில் அமைத்து அதன் உறுப்புக் கல்லூரிகளை அனைத்து மாநிலங்களிலும் அமைக்க வேண்டும்.
- பெரியார் வைக்கத்தில் செய்த தியாகத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் இயற்றி வரவேற்றது. 'வைக்கம் வீரர்' என்று திரு.வி.க. அவரை அழைத்தார்.

### அந்த ஒரு வாக்கு

- ஈழவருக்குச் சஞ்சார உரிமையைத் தரக்கூடாது என்பதற்கு 22 வாக்குகளும் அவர்களை நடக்க அனுமதிக்கலாம் என்பதற்கு ஆதரவாக 21 வாக்குகளும் பதிவாயின.
- ஒரே ஒரு வாக்கு வித்தியாசம்தான். அந்த வாக்கை அளித்தது அரசின் நியமன உறுப்பினரான ஒரு ஈழவர் என்பது இதில் உள்ள முரண் நகை.
- சட்டத்தை நாடிய போராட்டக்காரர்கள் நீதிமன்றத்தை நாடவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டோர் பெரும்பாலும் வழக்கறிஞர்கள்; ஆலோசனை வழங்கியவர் 'பாரிஸ்டர்' காந்தி என்பதையும் கவனத்தில் கொள்ளலாம்.

### வைக்கம் முடிவுகள்

- போராட்டம் தொடங்கிய காலத்தில் மரபுவாதிகள் பக்கம் இருந்த அரசாங்கம், முடிவின்போது சத்தியாகிரகிகள் பக்கம் சாய்ந்தது.
- தாங்கள் கைவிடப்பட்டதை உணர்ந்த மரபுவாதிகள் வேறு வழியின்றி இறங்கிவந்தனர். தங்கள் மரியாதையை முற்றிலும் இழந்துவிடாதபடி நான்கு தெருக்களில் கிழக்குத் தெருவை வைத்துக் கொண்டு, மற்ற மூன்று தெருக்களில் ஈழவரை அனுமதிக்க ஒப்புக்கொண்டனர்.
- வைக்கம் போராட்டத்தின் விளைவாக 12 ஆண்டுகளுக்குப் பிறகு 1936இல், சகலருக்கும் கோயில்களைத் திறந்துவிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் 'கோயில் நுழைவுப் பிரகடனம்' வெளியிடப்பட்டது.

SURESH' IAS ACADEMY

# 06 புவியியல்

## பருவம் படுத்தும் பாடு

### எல்நினோ/லாநினோ

- பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் எல் நினோ, லா நினா அடிப்படையில் தான் கீழமை நாடுகளின், குறிப்பாக தெற்கு ஆசியாவின் தட்பவெப்பநிலை அமைகிறது.
- பிப்ரவரி, மார்ச் மாதங்களில் குளிர் காலத் தன்மைகள் தொடரவும் அவை காரணமாகின்றன.
- கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் இந்தியாவின் பல பகுதிகளிலும் குளிர்காலம் முடிந்து வசந்த காலம் தொடராமல், நேரடியாக கோடை கால வெப்பநிலை காணப்படுவதை உணர முடிகிறது.
- 2022-க்கும் 2023-க்கும் வித்தியாசம் இருக்கிறது. கடந்த ஆண்டு அதிகரித்த வெப்பத்தால் குளிர்காலப் பயிர்களின் அறுவடைக்கு முன்பு மார்ச் மாதம் கருகத் தொடங்கியது.
- இந்த ஆண்டு பிப்ரவரி மாதமே கோடை வெப்பம் தொடங்கியிருப்பது விவசாயிகளை அதிரச்சியடைய வைத்திருக்கிறது.
- கோதுமை அறுவடைக்குக் காற்றில் ஈரப்பதம் இருப்பது மிகவும் அவசியம், குளிர்காலத்தில் போதுமான மழை இல்லாததால், கோடை வெப்பம் மேலும் அதிகரிக்கக்கூடும்.
- அதனால் வழக்கமான பருவமழையும் பாதிப்பை எதிர்க்கொள்ளும்.

## இந்தியாவில் லித்தியம்

- ஜம்மு – காஷ்மீரிலுள்ள ரியாசி மாவட்டத்தில் அமைந்திருக்கும் தலால் – ஹைமானா பகுதியில் லித்தியம் தாது இருப்பதாக இந்தியப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது.
- வெள்ளைத்தங்கம் என்று அறியப்படும் லித்தியம் தாது கைப்பேசி, மடிக்கணினி, மின்சார வாகனங்கள் உள்ளிட்ட பல நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களில் ஒன்று.

### லித்தியம் முக்கோணம்

- உலகில் லித்தியம் அதிகமாகக் காணப்படுவது பொலீவியா, அர்ஜென்டீனா, சிலி ஆகிய நாடுகளில்தான் என்றாலும்கூட, அதன் சுத்திகரிப்பு சீனாவில் நடைபெறுவதால் சர்வதேசச் சந்தையில் இப்போது சீனாவின் ஆதிக்கம்தான் கொடிகட்டிப் பறக்கிறது.

### தேவை

- மின்சார வாகனங்களின் மின்கலன்களில் தொடங்கி மருந்து, விண்கலன்கள், அலுமினிய உற்பத்தி, உரங்கள் தயாரிப்பு மட்டுமல்லாமல், மருத்துவத் துறையிலும் லித்தியத்தின் தேவை அதிகரித்து வருகிறது.
- இதய அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப்படும் பேஸ்மேக்கர்களுக்குக்கூட லித்தியம் தேவைப்படுகிறது.
- பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை புதைவடிவ எரிசக்தியிலிருந்து மின்வாகனங்களுக்கு மாற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.
- அதனால், வரும் காலங்களில் லித்தியம் ஐயான்மின்கலன்களின் தேவை கடுமையாக அதிகரிக்கும் என்கிற எதிர்பார்ப்பு நியாயமானது.
- அதனால் லித்தியம் இருப்புகளை தங்களது கட்டுப்பாட்டில் வைக்க உலக நாடுகளும், நிறுவனங்களும் போட்டி போடுகின்றன.

### சவால்கள்

- கடினமான பாறைகள், நிலத்தடி ஊருணி தேக்கங்களில் இருந்து லித்தியம் பிரித்தெடுக்கப்படுகிறது. அதற்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படும்.
- அது மட்டுமல்லாமல், லித்தியம் தயாரிப்பு காரணமாக சுற்றுச்சூழல் பிரச்சனை ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது. அதனால், சர்வதேச அளவில் லித்தியம் உற்பத்திக்கு எதிர்ப்பும் காணப்படுகிறது.

### இறக்குமதி

- தற்போதைய நிலையில், இந்தியா தனது தேவைக்கான லித்தியத்தை ஆஸ்திரேலியா, அர்ஜென்டீனா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறது.
- லித்தியம், கோபால்ட், நிக்கல் உள்ளிட்டவை சோலார் பேனல், மடிக்கணினி, கைப்பேசி, மின்சார வாகன மின்கலம் உள்ளிட்டவைக்கு அத்தியாவசியம் என்பதால் நாம் இறக்குமதி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.
- அதனால் ஜம்முவில் லித்தியம் கண்டுபிடிப்பு மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருப்பதில் வியப்பில்லை.
- உலகளாவிய அளவில் லித்தியம் இருப்பு 80 மில்லியன் டன் என்று கணக்கிடப்படுகிறது. ஆனால் அவற்றிலிருந்து 22 மில்லியன் டன் அளவில்தான் லித்தியத்தை பிரித்தெடுத்து சந்தைப்படுத்த முடியும். லித்தியம் தாது இருப்பதை அடையாளம் காண்பதும், பிரித்தெடுப்பதும் எளிதல்ல.

### நான்கு கட்ட உற்பத்தி

- நான்கு கட்டமாக லித்தியம் தாது உற்பத்தி பிரிக்கப்படுகிறது.
  1. முதலாவது கட்டம், தாது இருப்பதற்கான அறிகுறி.
  2. இரண்டாவது கட்டம் லித்தியம் தாது இருக்கும் இடங்களில் செய்யப்படும் ஆய்வுகள்
  3. மூன்றாவது கட்டம், தாதுவைப் பிரித்தெடுக்கும் முயற்சி.
  4. நான்காவது கட்டத்தில்தான் தாதுவின் அளவும், அதிலிருந்து பெறப்படும் உற்பத்தியும் தீர்மானிக்கப்படும்.
- ஜம்முவில் லித்தியம் இருப்பது என்பது இன்னும் முழுமையாக உறுதிப்படவில்லை. தற்போது அனுமானிக்கப்பட்டிருக்கும் 5.9 மில்லியன் டன்னிலிருந்து எந்த அளவு லித்தியம் பிரித்தெடுத்து உற்பத்தி செய்ய முடியும் என்பதை கடைசி கட்டம்தான் தீர்மானிக்கும்.

### பொலிவியா

- சர்வதேச அளவில் குறைவான படிவமே காணப்படும் லித்தியம் தாதுவைக் கைப்பற்ற பன்னாட்டு நிறுவனங்கள் பல போட்டி போடுகின்றன, நாடுகளும் கூட.
- உலகிலேயே அதிக அளவிலான (2.1 கோடி டன்) லித்தியம் இருப்பு காணப்படும் பொலீவியாவுடன் சீனா ஒரு பில்லியன் டாலர் (சுமார் ரூ.8,236 கோடி) ஒப்பந்தத்தை சமீபத்தில் மேற்கொண்டிருக்கிறது.

## கடல்நீர்மட்டம் உயர்வு

- மனித சமூகம் தனது செயல்பாடுகளின் மூலம் வெளியேற்றும் கரியமில வாயு, மீத்தேன் உள்ளிட்ட பசுமை குடில் வாயுக்களின் அளவு தொடர்ந்து அதிகரிக்குமானால், இந்தியாவின் சென்னை, கொல்கத்தா உள்ளிட்ட ஆசியாவின் சில முக்கிய நகரங்கள் கடல்நீர் மட்டம் உயர்வால் இந்த நூற்றாண்டுக்குள் பாதிக்கப்படும்.

### காரணங்கள்

- பெருங்கடல் நீரின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பதன் மூலம், நீர் விரிவடைந்து கடல்நீர்மட்டம் உயர்வுக்குக் காரணமாகிறது.
- மேலும் துருவப் பகுதியில் உருகும் பனிப்பாறைகளால், அதிக அளவிலான நீர் பெருங்கடலில் வெளியேற்றப்படுகிறது.
- கடல்நீர் மட்ட உயர்வில் பிராந்திய அளவிலான வேறுபாடுகள் காணப்படும.
- சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டும் அதிக அளவிலான நீரை இடப்பெயர்வு செய்ய பெருங்கடல் நீரோட்டங்களில் ஏற்படும் மாற்றம் காரணமாக இருக்கும்.
- எல் - நினோ அல்லது பெருங்கடல் நீர் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற இயற்கை சார்ந்த காலநிலை மாறுபாடு செயல்முறையின் காரணமாகவும் கடல்நீர் மட்டத்தில் இயற்கையாகவே ஏற்ற - இறக்கங்கள் ஏற்படுகிறது.

### பாதிப்புகள்

- 20 முதல் 30 சதவீதம் வரை கடல்நீர் மட்ட உயர்வு ஏற்படும்.
- மிக மோசமான வெள்ள பாதிப்பு நிகழ்வுகள் ஏற்படுவது அதிகரிக்கும்.
- ஆசியாவின் பல பெருநகரங்கள் 2100க்குள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளும்.
- அமெரிக்கா, ஆஸ்திரேலியா நாடுகளின் மேற்கு கடற்கரையோரப் பகுதிகளில் கடல்நீர் மட்டம் உயரும்.

- காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பைவிட 50 சதவீதம் அதிகமாக இருக்கும்.
- இதன் காரணமாக கடற்கரையை ஒட்டிய பெருநகரங்களில் மிகவும் மோசமான வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதுடன், லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாகவும் அமையும்.

## போபால விஷவாயு கசிவு வழக்கு

- ✓ மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கடந்த 1984-ம் ஆண்டு விஷவாயு கசிவால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- ✓ யூனியன் கார்பைட் இந்தியா நிறுவனம் என்ற கெமிக்கல் தொழிற்சாலையில் இந்த பயங்கர விஷவாயு கசிவு ஏற்பட்டது.
- ✓ இந்த சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு 1989-ம் ஆண்டு இழப்பீடு வழங்கப்பட்டது.
- ✓ போபால் விஷவாயு கசிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு டாவ் கெமிக்கல்ஸ் நிறுவனம் கூடுதலாக ரூ.7,400 கோடி இழப்பீடு வழங்க உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு சார்பில் கடந்த 2010-ம் ஆண்டு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.
- ✓ மத்திய அரசின் சீராய்வு மனு தள்ளுபடி

## உணவுப் பாதுகாப்பு : சிறுதானியங்கள்

### ஏழைகள் – கிராமங்களுடன் தொடர்புடையது

- சிறுதானியங்கள் ஏழைகளுடனும் கிராமங்களுடனும் தொடர்புடையவை. பழங்குடியினரால் கொண்டாடப்படுபவை.
- ரசாயனம் இல்லாத வேளாண் நடைமுறைகளுக்கு பெரும் அடித்தளமாக விளங்குபவை. குறைந்த தண்ணீர் பயன்பாட்டில், அதிக விளைச்சலை தரக்கூடியவை.
- குறைந்த கால கட்டத்தில் சாகுபடி செய்ய முடிவதுடன், பருவநிலை மாற்றத்தையும் தாங்கி வளர்பவை.
- சிறுதானிய ஊக்குவிப்பு பிரச்சாரத்தை உலகளாவிய இயக்கமாக மாற்ற இந்தியா தொடர்ந்து பணியாற்றி வருகிறது.
- இந்தியாவில் இன்று சிறுதானிய உணவுப் பொருள்களின் விற்பனை 30 சதவீதம் அதிகரித்துள்ளது.

### 2.5 கோடி விவசாயிகள்

- இந்திய சிறுதானிய இயக்கத்தின் வாயிலாக அவர்களின் நலன்களை காக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- சிறுதானியங்கள் இப்போது பதப்படுத்தப்பட்ட உணவுகளாக பல்பொருள் அங்காடிகளுக்கும், கடைகளுக்கும் வந்தடைகின்றன.
- சிறுதானியங்களுக்கான சந்தை மேலும் உத்வேகம் பெறும்போது, சிறு விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும்.

### சவால்களுக்கு தீர்வு

- உலகம் இன்று இருவகையான சவால்களை எதிர்கொண்டுள்ளது.
- தெற்குலகில் நிலவும் உணவுப் பாதுகாப்பு சவால்களுக்கும், உணவுப் பழக்கங்களால் வடக்குலகம் எதிர்கொண்டுள்ள உடல்நலன் சார்ந்த பிரச்சனைகளுக்கும் சிறுதானியங்கள் தீர்வளிக்கும்.
- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியில், சிறுதானியங்களின் பங்களிப்பு தற்போது 5-6 சதவீதமே உள்ளது.
- எனவே, சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க இந்திய வேளாண் ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

## நீர்ப்பற்றாக்குறை : நிரந்தரத் தீர்வு

### நீர் உபயோகம்

- இந்தியாவில் பசுமைப்புரட்சிக்குப் பிறகு விவசாய முறையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் நீர்ப்பாசன வசதி மிகவும் முக்கியமாகிவிட்டது.
- காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டுவந்த குளம், ஆற்று நீர்ப்பாசனங்களின் முக்கியத்துவம் குறைந்து, நிலத்தடி நீர்ப்பாசனத்தின் உபயோகம் பலமடங்கு உயர்ந்து விட்டது.

## நீர் சேமிப்பு

- சொட்டு நீர்ப்பாசன முறையின் மூலமாக, குறைந்த நீரையும் மின்சாரத்தையும் பயன்படுத்தி லாபம் தரக்கூடிய வகையில் பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்ய முடியும்.
- சொட்டு நீர்ப்பாசன முறையானது பயிரின் வேர்ப்பகுதிக்குச் சிறிய குழாய்கள் மூலமாக நீரை நேரடியாகக் கொடுப்பதால் நீர் விரயம் தடுக்கப்பட்டு பெரிய அளவில் நீர் சேமிக்கப்படுகிறது.

## பலன்கள்

- சொட்டுநீர்ப்பாசனத்தை அதிகமாகப் பின்பற்றிவரும் மகாராஷ்டிர மாநிலத்தில் இந்நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்தும் விவசாயிகளிடம் நடத்தப்பட்ட களஆய்வின்படி, கரும்புச் சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசனம் மூலமாக ஒரு ஹெக்டேருக்கு 1,065 யூனிட் மின்சாரத்தைச் சேமிக்க முடியும்.
- பயிர்களின் மகசூலை 42-53% வரை அதிகரிக்க முடியும் எனவும், 20-50% வரை நீர்ப்பாசனச் செலவைக் குறைப்பதுடன் உரங்களின் உபயோகத்தில் ஏறக்குறைய 28% வரை குறைக்க முடியும்.

## திட்டங்கள்

- துளிநீரில் அதிக விளைச்சல் என்ற நோக்கை அடையும் வகையில் 'பிரதம மந்திரி விவசாய நீர்ப்பாசனத் திட்டம்' எனும் திட்டம் 2015இல் தொடங்கப்பட்டது.

## அதிகரிப்பதற்கான வழிகள்

- 2004இல் மத்திய அரசு அமைத்த சொட்டு நீர்ப்பாசன வளர்ச்சிக்கு வழிமுறை அறியும் குழு, 270 லட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலங்கள் சொட்டு நீர்ப்பாசனத்துக்கு உகந்தவை என மதிப்பிட்டுள்ளது.
- ஆனால், 2020-21இல் இந்தியாவின் சொட்டு நீர்ப்பாசனப் பரப்பளவானது மொத்த நீர்ப்பாசனப் பரப்பளவில் வெறும் 6% மட்டுமே ஆகும்.
- பருவகால மாற்றங்கள், மழைப்பொழிவின் அளவில் மாற்றங்களை ஏற்படுத்தி நீர்ப்பற்றாக்குறையை ஏற்படுத்தக்கூடும் எனச் செய்திகள் வெளியாகின்றன.
- இந்த சூழலில் குறைந்த நீரில் அதிக மகசூல் தரக்கூடிய சொட்டு நீர்ப்பாசன முறையை வளர்த்தெடுத்தல் காலத்தின் கட்டாயம்.

# தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை

## மேலாண்மை கொள்கை

- வலுவான பேரிடர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் அனைத்து வகை பேரிடர்களின் எதிர்மறையான விளைவுகளைக் குறைத்து, உயிரிழப்பு, பொது சொத்துகள் மற்றும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளின் சேதம் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
- அரசு உருவாக்கிய பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி ஆதாயங்கள் இழப்பைத் தடுத்தல் ஆகியவையே மேம்படுத்தப்பட்ட தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கையின் நோக்கமாகும்.
- பல்வகை பேரிடர்களுக்கான எச்சரிக்கை அமைப்பு, ஆபத்து, பேரிடர் பாதுகாப்புகளின் மதிப்பீடு மற்றும் அபாயம் குறித்த பகுப்பாய்வு, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அனைத்துத் துறைகளால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் பேரிடர் அபாயக் குறைப்பு பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி இணைந்து செயல்படுத்துதல் ஆகியவற்றை அதிகரிப்பதிலும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைக் கொள்கை கவனம் செலுத்துகிறது.
- பேரிடர்களால் ஏற்படும் இறப்பு, பாதிப்புக்கு உள்ளானோரின் எண்ணிக்கை, நலிந்த பிரிவினருக்கு ஏற்படும் பாதிப்பு மற்றும் அடிப்படை சேவைகள் பாதிப்பு, பொருளாதார இழப்பு ஆகியவற்றைக் குறைப்பதற்கு இக்கொள்கை முக்கியத்துவம் அளிக்கிறது.
- பேரிடர் அபாயக் குறைப்புக்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்கும் இந்தக் கொள்கை, பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான உலகளாவிய மற்றும் தேசியக் கட்டமைப்பின் அடிப்படையிலும், மாநிலத்தின் தொலைநோக்குப் பார்வை மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்றவாறும் உருவாக்கப்பட்டுள்ளது.

# 07 சுற்றுச்சூழல்

## இந்தியாவில் அதிகரித்து வரும் புலிகள்

### புலி இந்தியாவின் தேசிய விலங்கு

- ஒரு வனப்பகுதியில் புலி வாழ்கிறது. அங்கு அவற்றுக்கு தேவையான உணவு, தண்ணீர், பாதுகாப்பு, சுற்றித்திரிவதற்கான பரந்த இடம் இருக்கிறது என்பதை உணரலாம்.
- புலிகள் வாழும் வனப்பகுதி செழுமை நிறைந்த காடுகள் இருப்பதற்கான அறிகுறி ஆகும். எனவே நமது இயற்கைச் சூழல் சமன்பாட்டிற்கு புலிகளை நாம் செவ்வனே பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

### புலிகள் பாதுகாப்பு திட்டம்

- இந்தியாவில் இருக்கும் புலிகளைப் பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க புலிகள் பாதுகாப்புத் திட்டம் 1973-ல் தொடங்கப்பட்டது. அப்போது 1,220 புலிகள் தான் இருந்தன.
- இந்தியாவில் 18 மாநிலங்களில் புலிகள் காணப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்புக்காக கடந்த 46 ஆண்டுகளில் நாடெங்கும் சுமார் 50 புலிகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 29-ந் தேதி சர்வதேச புலிகள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- புலிகளையும் அவற்றின் வாழ்விடத்தையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திடவே சர்வதேச புலிகள் தினம் 2010-ம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

### புலிகள் கணக்கெடுப்பு

- இந்தியாவில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்படும். அவ்வாறு நடத்தப்படும் கணக்கெடுப்புகள் குறித்த விவரங்கள் உலக புலிகள் தினத்துக்கு முன்பாக வெளியிடப்படும்.
- கடந்த 2006-ம் ஆண்டில் இருந்து 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை புலிகள் கணக்கெடுப்பு நடந்து வருகிறது.
- 2006-ம் ஆண்டு கணக்கெடுப்பு முடிவில் இந்திய காடுகளில் 1,411 புலிகளும், 2010-ம் ஆண்டில் 1706 புலிகளும், 2014-ம் ஆண்டில் 2,226 புலிகளும் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.
- 2018-ம் ஆண்டில் இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 2,967 ஆக உயர்ந்துள்ளது.

### மேற்கு தொடர்ச்சி மலை

- இதில் மத்திய பிரதேச மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது. மத்திய பிரதேச காடுகளில் மட்டும் 526 புலிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதனை தொடர்ந்து அதிக புலிகள் வாழும் 2-வது மாநிலமாக கர்நாடகம் உள்ளது. இங்கு 524 புலிகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.
- அதற்கு அடுத்தபடியாக உத்தரகாண்ட் மாநிலத்தில் 442 புலிகளும்
- மராட்டியத்தில் 312 புலிகளும்
- தமிழகத்தில் 264 புலிகளும் இருப்பது கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

### புலிகள் மாநிலம்

- இந்தியாவில் புலிகள் அதிகம் வாழும் மாநிலங்களில் மத்தியபிரதேசம் முதலிடத்தில் உள்ளது.

## பல்லுயிர் அருங்காட்சியகம்

- மாநில வனத் துறையானது, சுற்றுச்சூழல் பூங்காவுடன் கூடிய உயிர்-பன்முக அருங்காட்சியகம் மற்றும் பாதுகாப்பு மையத்தை நிறுவுவதற்கான அதன் தளத் திட்டத்தைத் திருத்தியுள்ளது.

- ஆரம்பத்தில், களக்காடு – முண்டந்துறையின் ஆழமான காக்காச்சியில் மையம் மற்றும் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டது.
- புலிகள் காப்பகத்தின் (KMTR) முக்கிய மண்டலம். தற்போது, மணிமுத்தாறு அணை பூங்காவில் வசதி ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.
- காக்காச்சியில் அடையாளம் காணப்பட்ட இடம், மாஞ்சோலைக்கு அப்பால் அமைந்துள்ள பயன்படுத்தப்படாத கோல்ஃப் மைதானமாகும், இது வருடத்திற்கு 4,000 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியைப் பதிவுசெய்கிறது.
- சிங்கவால் மக்காக், நீலகிரி லங்கூர், பிரவுன் பாம் சிவெட் மற்றும் பறக்கும் அணில் போன்ற மரவகைப் பாலூட்டி இனங்களின் முக்கிய வாழ்விடமாக காக்காச்சியில் உள்ள காடுகள் உள்ளன.
- பல உள்ளூர் மற்றும் அழிந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களும் இங்கு காணப்படுகின்றன.

## ருஷிகுல்யா மணல் ஆலிவ் ரிட்லிகளால் நிரம்பியுள்ளது

- இந்த ஆண்டு ருஷிகுல்யா கடற்கரையில் 6.37 லட்சம் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் பெருமளவில் கூடு கட்டுவதற்காக வந்துள்ளன, இது ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள கடற்கரையில் ஒரு புதிய சாதனையை படைத்துள்ளது.
- பிப்ரவரி 23 முதல் மார்ச் 2 வரை – இது வெகுஜன கூடு கட்டும் காலமாக கருதப்படுகிறது.
- இந்த ஆண்டு, சூறாவளி மற்றும் கனமழை இல்லாததால் கடற்கரைகள் பாதிக்கப்படாமல் இருந்தன மற்றும் ருஷிகுல்யா ஆற்றின் முகப்பில் ஆமைகள் சரியாக சாய்ந்த கடற்கரைகளில் ஏறின.
- கடந்த ஆண்டு, 5.5 லட்சம் ஆலிவ் ரிட்லி ஆமைகள் ருஷிகுல்யாவுக்கு வெகுஜன கூடு கட்டுவதற்காக வந்திருந்தன.
- மார்ச் 2க்குப் பிறகு கடற்கரைக்கு ஆமைகள் வருவதால், ருஷிகுல்யா நதி முகத்துவாரத்திற்கு வரும் ஆலிவ் ரிட்லிகளின் உண்மையான எண்ணிக்கை அதிகரிக்கும்.
- பூரி மற்றும் தேவி நதி முகத்துவார கடற்கரைகளிலும் இந்த முறை ஆலிவ் ரிட்லி ஆமைகள் உள்ளன.
- இந்திய விலங்கியல் ஆய்வு (ZSI) ஆலிவ் ரிட்லி ஆமைகளை காஹிர்மாதா, தேவி நதி முகத்துவாரம் மற்றும் ருஷிகுல்யா ஆகிய மூன்று பெரிய கூடு தளங்களில் தொடர்ந்து குறியிடுகிறது.

## தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக்குழு

### அரசின் முன்னெடுப்புகள்

- ✓ தமிழ்நாட்டுக்கான காலநிலைத் திட்டம் உருவாக்கப்பட்டு, அதற்கென ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ✓ அண்ணா பல்கலைக்கழகத்தில் காலநிலை ஸ்டுடியோ (பல்துறை சார்ந்த காலநிலை ஆராய்ச்சி அமைப்பு) அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ கடல் அரிப்பைத் தடுக்கவும், கடற்கரையின் உயிர்ப்பன்மையைப் பேணவும் பனைமரங்கள் நடும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ இத்திட்டங்களை ஒருங்கிணைக்க நாட்டிலேயே முதல் முறையாகத் ‘தமிழ்நாடு பசுமைக் காலநிலை நிறுவனம்’ உருவாக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகக்குழு

- ✓ முதலமைச்சர் தலைமையிலான ‘காலநிலை மாற நிர்வாகக் குழு’ 2022 அக்டோபரில் அமைக்கப்பட்டது.
- ✓ இக்குழுவில் பொருளாதார நிபுணர் மான்டேக சிங் அலுவலியா, ஐ.நா.வின் முன்னாள் துணைப் பொதுச்செயலர் எரிக் எஸ்.சோல்ஹைம் உள்ளிட்டோர் சிறப்பு உறுப்பினர்களாக உள்ளனர்.
- ✓ இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராகச் சுற்றுச்சூழல் துறைச் செயலர் செயல்படுகிறார்.

### காலநிலை அறிவு இயக்கம்

- ✓ தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறையும் எவ்வளவு கார்பனை வெளியிடுகிறது என்பதைச் சில மாதங்களில் அறிவியல்பூர்வமாக அரசு வெளியிடவிருக்கிறது.
- ✓ இக்குழு ஆய்வுசெய்து, இந்தியா கார்பன் சமநிலையை அடைய நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கான 2070ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே தமிழ்நாட்டுக்கான இலக்கு நிர்ணயிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிற செயல்பாடுகள்

- ✓ காலநிலை மாற்றத்தின் தற்போதைய நிலை தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தின் தாக்கம், அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

- ✓ கடற்கரைகளுக்கான நீலக்கொடிச் சான்றிதழ் திட்டம்
- ✓ திறன்மிகு கிராமங்கள் திட்டம்
- ✓ சுமைப்புத்தாய்வுத் திட்டம்
- ✓ ஆவணத்தின் முக்கியஅம்சமான 'பசுமைப்பள்ளி' திட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளுக்குத் தலா ரூ.20 லட்சம் என்கிற அடிப்படையில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### காலநிலை நிதி

- ✓ இந்தியாவிலேயே முதன்முறையாக, காலநிலை மாற்றம் சார்ந்த திட்டங்களுக்கு ரூ.1,000 கோடி நிதி திரட்டும் வகையில் 'தமிழ்நாடு காலநிலை மாற்ற நிதி'யைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.
- ✓ இந்த நிதி, காலநிலை மாற்றம் சார்ந்த பல்வேறு முயற்சிகள், தணிப்பு, பசுமைப்படுத்தும் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும்.
- ✓ அரசு மேம்பாட்டு நிறுவனங்கள், சர்வதேசக் காலநிலை நிதி போன்றவற்றிலிருந்து தேவையான நிதி ஆதாரங்கள் இந்த நிதிக்குத் திரட்டப்படும்.

## இயற்கை வேளாண்மை

- இரசாயனங்களின் பயன்பாடு அற்ற, கால்நடைகள், இயற்கை மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட வேளாண் நடைமுறை.
- விளைபொருள்களை விளைவிக்கத் தேவையான இடுபொருள்கள் அனைத்தும் இயற்கை சார்ந்ததாகவே அமையும்.
- சுற்றுச்சூழல் சமநிலையை ஏற்படுத்துவதற்கு இயற்கை வேளாண்மை முக்கியப் பங்கு வகிக்கும்.

### வேதி உரங்கள் சார்ந்த வேளாண்மை

- சுதந்திரத்துக்குப் பிறகு உணவு தேவைக்காக வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் சூழல் இந்தியாவுக்கு ஏற்பட்டது.
- கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் அமெரிக்காவில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டன.
- உணவு உற்பத்தியில் நாட்டைத் தற்சார்பு அடையச் செய்யும் நோக்கில் 1960களின் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதில் அதிக விளைச்சல் திறன் கொண்ட விதைகள் (ஹைச்ஒய்வி) அறிமுகப்படுத்தப்பட்டன.
- பயிர்களுக்கு அடிப்படைத் தேவைகளான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய சத்துக்கள் செயற்கை வேதி உரங்கள் மூலமாக வழங்கப்பட்டது.
- செயற்கை பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடும் அதிகரித்தது.
- அதன் காரணமாகப் பயிர்கள் நோய்த் தாக்குதல், பூச்சிகளின் தாக்குதலில் இருந்து காக்கப்பட்டன.
- இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட சில பகுதிகளில் அரிசி, கோதுமை உற்பத்தி பெருமளவில் அதிகரித்தது.
- படிப்படியாக அத்தகைய விதைகள் நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டு, நாடு உணவுதானிய உற்பத்தியில் தற்சார்பு அடைந்தது.

### இயற்கை வேளாண்மையின் அவசியம்

- ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு என்ற நியூட்டனின் மூன்றாம் விதி பசுமைப் புரட்சியிலும் எதிரொலித்தது.
- வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகளின் அதீத பயன்பாடு மண்ணின் வளத்தை அதிக அளவில் பாதித்தது.
- நைட்ரஜன் உள்ளிட்ட சத்துக்களை இயற்கையில் இருந்து நேரடியாகப் பெற்று வந்த மண், வேதி உரங்கள் இல்லாமல் அத்தகைய சத்துகளைப் பெற முடியாத சூழல் உருவானது.
- மண்ணின் வளம் வெகுவாகக் குறைந்து, வேதி உரங்களை மேலும் அதிகமாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உருவானது.
- வயல்களில் தெளிக்கப்படும் உரங்கள், மழைநீரில் கலந்தோடி அருகிலுள்ள நீர்நிலைகளைத் தூர்ந்துபோகச் செய்தன.
- பூச்சிக்கொல்லி மருந்துகளில் உள்ள வேதிப் பொருள்கள் உணவு தானியங்கள் வாயிலாக மனித உடலுக்குள் புகுந்து, புற்றுநோய், இதயம் சார்ந்த நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் தோன்றவும் காரணமாக அமைந்துள்ளன.

## இயற்கை வேளாண்மை பலன்கள்

- உற்பத்தி செலவு குறைவு
- ஆரோக்கியமான உடல்நலன்
- புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- கால்நடைகள் பராமரிப்பு
- மண்வளம் பாதுகாப்பு
- இயற்கை இடுபொருள்கள்
- பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன்
- விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பு
- குறைவான நீர்ப் பயன்பாடு
- கிராமப் பொருளாதார பயன்பாடு
- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தன்மை

## இயற்கை வேளாண்மை அங்கக வேளாண்மை

- இயற்கை வேளாண்மையும் அங்கக வேளாண்மையும் வெவ்வேறானவை.
- இயற்கை வேளாண்மையில், இயற்கை இடு பொருள்களானது முற்றிலுமான பண்ணைத் தயாரிப்பில் இருந்து பெறப்படுகின்றது.
- அங்கக வேளாண்மையில் பண்ணைக்கு வெளியில் இருந்து வாங்கப்படும் உயிரி உரங்களும், நவீன தொழில்நுட்பங்கள் வாயிலாக உருவாக்கப்படும் உயிரி உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

## இயற்கை வேளாண்மை சவால்கள்

- வேளாண் பொருள்கள் உற்பத்தி குறைவு
- உணவுத் தட்டுப்பாடு பிரச்சனை
- குறு விவசாய நிலங்கள் அதிகரிப்பு
- இயற்கை இடுபொருள்களின் குறைவான உற்பத்தி
- கிராமங்களில் போதிய விழிப்புணர்வு இன்மை
- போதிய தொழில்நுட்ப வசதி இன்மை
- உயிரி உரங்கள் தேவை அதிகரிப்பு : உற்பத்தி குறைவு

## இயற்கை வேளாண்மை கூறுகள்

### விதைத் தயாரிப்பு

- பசுஞ்சாணம், கோமியம், சுண்ணாம்பு உள்ளிட்டற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் கலவையைப் பயன்படுத்தி விதையைப் பாதுகாத்தல், இதன் மூலமாக இளம் வேர்கள் பூஞ்சைத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்படும்.

### மண் வளம் மேம்பாடு

- கோமியம், பசுஞ்சாணம், பருப்புகளின் உமி உள்ளிட்டவற்றைக் கொண்டு மண் வளத்தை மேம்படுத்தும் நடைமுறை.
- மண்புழுக்கள் உள்ளிட்ட நுண்ணுயிர்களின் செயல்பாட்டை அதிகரிக்கச் செய்யும். இதன் மூலமாக மண்ணுக்குத் தேவையான சத்துகள் அதிகரிக்கும்.

### ஈரத்தைத் தக்கவைத்தல்

- பயிர்க் கழிவுகள், வேம்பு, தாவரங்கள், கூழம் உள்ளிட்டவற்றை மண்ணில் நிரப்பி, மண்ணின் ஈரத்தன்மையைத் தக்கவைத்தல்.
- மேலும், மண்ணின் வெப்பநிலையைக் குறைத்து வேர்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், மண் அரிப்பைத் தடுக்கவும், களைகள் வளர்வதைக் குறைக்கவும் இந்நடைமுறை உதவுகிறது.

### பயிர்ப் பாதுகாப்பு

- இயற்கை இடுபொருள்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளைத் தெளித்தல். பயிர்களில் நோய் பரவல், பூச்சித் தாக்குதல் உள்ளிட்டவற்றைத் தடுக்க இந்நடைமுறை பின்பற்றப்படுகிறது.
- வேப்பிலை, பசுஞ்சாணம், கோமியம், பால், தயிர், பல்வேறு தாவரங்களின் இலைகள் உள்ளிட்டவற்றைக் கலந்து இயற்கை பூச்சிக்கொல்லிகள் தயாரிக்கப்படும்.

### நீர்ப்பயன்பாடு

- மண் துகள்களுக்கு இடையே போதிய அளவிலான காற்று, நீர் இருப்பதை உறுதி செய்தல். மண்புழுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதன் வாயிலாக இதை உறுதி செய்ய முடியும்.
- நீரைத் திறம்படப் பயன்படுத்தவும் வறட்சியைத் திறம்பட எதிர்கொள்ளவும் இந்நடைமுறை உதவும்.

## பெரியார் பெயரில் புதிதாக வனவிலங்கு சரணாலயம்

### நெய்தல் மீட்சி இயக்கம்

- பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தாலும், மக்கள் தொகை பெருக்கத்தாலும் கடலோர சுற்றுச்சூழலும், கடலோர மக்களின் வாழ்வாதாரமும் வருங்காலங்களில் கடுமையாக பாதிக்கப்படக்கூடும்.
- கடல் அரிப்பை தடுக்கவும் கடல் மாசுபாட்டை குறைக்கவும், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாக்கவும் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம் என்ற திட்டத்தை ரூ2 ஆயிரம் கோடியில் உலக வங்கி நிதி உதவியுடன், அடுத்த 5 ஆண்டுகளில் இந்த அரசு செயல்படுத்த உள்ளது.

### பெரியார் வனவிலங்கு சரணாலயம்

- நீலகிரி உயிர்க்கோள காப்பகத்தை தென்காவிரி வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர், கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் உள்ள 80 ஆயிரத்து 567 ஹெக்டேர் வனப்பரப்பில் தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம் என்னும் புதிய சரணாலயத்தை இந்த அரசு ஏற்படுத்தும்.
- இது மாநிலத்தின் 18ஆவது வனவிலங்கு சரணாலயம் ஆகும்.

### பன்னாட்டு பறவைகள் மையம்

- பறவைகளின் பாதுகாப்பை பேணவும், பறவையியல் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், இயற்கையில் பறவைகளின் பங்கை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மரக்காணத்தில் ரூ25 கோடியில் பன்னாட்டு பறவைகள் மையத்தை அரசு அமைக்க உள்ளது.

### காலநிலை மாற்ற வீராங்கனைகள்

- மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் காலநிலை மாற்ற வீராங்கனைகள் என்ற காலநிலை விழிப்புணர்வு திட்டததை தொடங்கும்.
- சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக முதல் கட்டமாக 500 மகளிர் சுய உதவி குழுக்கள் இந்த சுற்றுச்சூழல் பற்றிய பரப்புரையை முன்னெடுப்பார்கள்.

## பி.வி.சதீஷ் : சிறுதானியங்களின் மீது கவனத்தை திருப்பிய முன்னோடி

- 'இந்தியாவின் சிறுதானிய மனிதர்' என்றழைக்கப்பட்டவர் பி.வி.சதீஷ்

### இயற்கை விவசாயத்துக்குப் புத்துயிர்

- பசுமைப்புரட்சியின் விளைவாகப் பணப்பயிர்கள், பம்பு செட்டுகள், செயற்கை இடுபொருள்கள் என இந்தியா ஓடிக்கொண்டிருந்த காலகட்டத்தில், மானாவாரி இயற்கை விவசாயத்துக்கும், சிறுதானியங்களுக்கும் சதீஷ் புத்துயிர் அளித்தார்.
- இதற்காக நண்பர்களுடன் சேர்ந்து 1983-இல், ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலத்தின் மேதக் மாவட்டத்தில், 'தக்காண வளர்ச்சி சங்கம்' (Deccan Development Society) என்ற சமூக நிறுவனத்தைத் தொடங்கினார்.

## பெண் விவசாயிகளின் மேம்பாடு

- சதீஷ், ஓர் எளிய கூட்டு வேளாண் செயல்பாட்டின் மூலம், பட்டியல் சாதி, பழங்குடிப் பெண் விவசாயிகளுக்கு அதிகாரத்தை உருவாக்க முடியும் என்றும், அவர்களின் வாழ்வாதாரம், ஊட்டச்சத்து ஆகியவற்றை உறுதிப்படுத்தி வறுமையை ஒழிக்க முடியும் என்றும் நிரூபித்துக் காட்டினார்.
- ஒரே நிலத்தில் பல சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளைப் பயிரிடுவதன் மூலம் மனிதர்கள், கால்நடைகள், பறவைகளுக்கு உணவளிக்க முடியும்; உயிர் பன்மைப் பெருக்கத்துக்கு வித்திட முடியுமென்ற பாரம்பரிய அறிவைப் பெண் விவசாயிகளிடமிருந்து சதீஷ் கற்றுக்கொண்டார்.

## மக்கள் கைகளில் மரபு விதைகள்

- சதீஷின் முயற்சியால், அரசின் ஜவஹர் வேலைத் திட்ட உதவியுடன், உள்ளூரில் பொதுமக்களுக்கு அரிசிக்குப் பதிலாகச் சிறுதானியங்கள் வழங்கப்பட்டன.
- மரபு விதைகள் மக்கள் கைகளில் இருப்பதன் மூலமே உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று உரக்கச் சொன்னவர் சதீஷ். மரபு விதைத் திருவிழாக்கள் இன்று வழக்கமாகிவிட்டன.

## புத்தாக்க முயற்சிகள்

- 2007இல் இந்திய சிறுதானியக் கூட்டமைப்பை (Millet Network of India)உருவாக்கினார்.
- தெலங்கானாவில் நடந்த விழா ஒன்றில் இக்கூட்டமைப்பைத் தொடங்கிவைத்தவர் இயற்கை வேளாண் அறிஞர் நம்மாழ்வார்.
- தெலங்கானா பட்டியல் சாதி, பழங்குடிப் பெண் விவசாயிகளின் பணிகள், தக்காண வளர்ச்சி சங்கத்தின் மூலம் 1996 இல் இத்தாலியின் ரோமில் நடந்த உணவு உச்சி மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்டன.
- 2019இல் ஐநா வளர்ச்சித் திட்டத்தின் 'பூமத்திய ரேகைப் பரிசு' (Equator Prize) தக்காண வளர்ச்சிச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

# காலநிலை மாற்றம்

## IPCC-58

- காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக் குழுவின் (IPCC) 58ஆவது மாநாடு, சுவிட்சர்லாந்தின் இண்டர்லேகன் முடிந்திருக்கிறது.
- இதில் பன்னாட்டு குழுவின் ஆறாவது காலநிலை அறிக்கையின் (Sixth Assessment Report) நான்காவதும் இறுதியுமான பகுதி வெளியிடப்பட்டிருக்கிறது.

## மூன்று தலைப்புகள்

1. காலநிலை மாற்றத்தின் அறிவியல்
2. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளும் அதை எதிர்கொள்ளும் வழிமுறைகளும்
3. காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் என்ற மூன்று தலைப்புகளில் முந்தைய அறிக்கைகளை 782 விஞ்ஞானிகள் இணைந்து தயாரித்துள்ளனர்.

- இந்த மூன்று அறிக்கைகளின் ஒருங்கிணைந்த கருத்துகள், முடிவுரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- 2023 நவம்பரில் துபாயில் நடக்கவிருக்கும் காலநிலை உச்சி மாநாட்டுக்கு (COP 28) இந்த அறிக்கையின் தரவுகளே அடிப்படையாக அமையும் என்பதால், இதன் முக்கிய அம்சங்களைப் புரிந்து கொள்வது அவசியம்.

## வெப்பம் அதிகரிக்கும்

- கரிம உமிழ்வு இப்போதைய நிலையிலேயே தொடரும் பட்சத்தில், 2040ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸை எட்டுவதற்கு 50% வாய்ப்பு உண்டு.

- பாரிஸ் ஒப்பந்தம் உள்ளிட்ட பல உலகளாவிய ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் எதிர்பார்த்த அளவுக்குச் செயல்படுத்தப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது.
- காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வு ஓரளவு அதிகரித்திருக்கிறது.
- இந்த அறிக்கை அங்கீகரிக்கிறது. காலநிலை மாற்றம் பற்றிய தங்களது ஆவணங்களில், அதை எப்படிச் சமாளிப்பது என்கிற வழிமுறைகளையும் உலக நாடுகள் குறிப்பிடத் தொடங்கியிருக்கின்றன.

## நகரத்தில்

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி முறைகளான சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை மின்சாரம் ஆகியவற்றில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது.
- ஆனால், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அனைவருக்கும் கொண்டு செல்ல இன்னும் முயற்சி எடுக்க வேண்டும்.
- நகர்ப்புறப் பசுமை உள்கட்டமைப்பு, ஆற்றல் செயல்திறன், உணவு வீணாவதைக் குறைப்பது, பயிர் மேலாண்மை ஆகியவற்றில் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

- வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க, பாதிப்புகளின் விகிதம் ஒரு பெருக்கல் தொடரைப் போல (Geometric Progression) அதிகரிக்கும் என்று இதை நாம் புரிந்து கொள்ளலாம்.
- ஒரு டிகிரி அதிகரித்தால் 10 மடங்கு பாதிப்பு என்றால், இரண்டு டிகிரி அதிகரித்தால் 20 மடங்கு என பாதிப்புகளை ஒரே நேர்க்கோட்டில் அணுக முடியாது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## நிதிச் சிக்கல்

- காலநிலைச் செயல்பாட்டின் வேகத்தை அதிகரிப்பதற்கான மூன்று முக்கியத் தேவைகளாக நிதி, தொழில்நுட்பம், சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றை இந்த அறிக்கை பட்டியலிடுகிறது.
- வளர்ந்த நாடுகள் நிதியளிப்புக்குப் பொறுப்பெடுத்துக் கொள்வதில்லை என்பது பல ஆண்டுகளாக இருக்கும் குற்றச்சாட்டு; அதற்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.
- யாருக்கு யார் நிதி வழங்குவது என்ற விவாதமே பெரும்பாலான காலநிலை மாநாடுகளின் ஒப்பந்தத்தைச் சீர்குலைத்துவிடுகிறது.

## தயார்நிலை அவசியம்

- நிலச்சரிவுகளைக் குறைக்க காடழிப்பைத் தடுப்பது, சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பதன் மூலம் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவது, கடல்நீர் உட்புகுதல், கடலோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்றின் பாதிப்பு ஆகியவற்றைத் தடுக்க அலையாத்திக் காடுகளை மீட்டெடுப்பது போன்ற பல்வேறு செயல்பாடுகளைக் குறிப்பிடலாம்.
- கரிமத் தொழில்நுட்பங்கள் பற்றி இதில் அதிகமாகப் பேசப்பட்டிருப்பது கவனத்திற்குரியது.
- உமிழ்வுகளை எவ்வளவு குறைத்தாலும் ஏற்கெனவே வளிமண்டலத்தில் இருக்கும் பசுங்குடில் வாயுக்களைச் சமாளிக்க கரிமத் தொழில்நுட்பம்தான் ஒரே வழி என்பது உண்மையே.
- ஆனால், எண்ணெய் நிறுவனங்களின் தொடர்ந்த 'லாபி' காரணமாக புதைபடிவ எரிபொருள்களின் மீது வெளிச்சம்படாமல் இருப்பதற்காக இந்தத் தொழில்நுட்பம் முன்னிறுத்தப்படுகிறதா என்கிற கேள்வியும் எழுகிறது.

## துயரங்களின் வரைபடம்

- 'மனிதத் துயரங்களின் வரைபடம்' என்று வர்ணிக்கும் ஐநா பொதுச் செயலாளர் அன்டோணியோ குட்டர்ஸ், "எல்லா இடங்களில் இருப்பவர்களும் ஒருசேர, எல்லாவிதமான காலநிலை செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- இதுவே இந்த அறிக்கையை செயல்படுத்துவதற்கான அறைகூவல்" என்று தெரிவித்திருக்கிறார்.
- காலநிலை மாற்றத்தின் தீவிரம் முன்னெப்போதையும் விட அதிகமாகியிருக்கிறது.
- உலகம் தொடர் பேரிடர்களால் பாதிக்கப்படுகிறது. சிறிய முரண்களால் வேறுபடாமல் மனித இனத்தின் எதிர்காலத்தைக் காப்பதற்கு உலக நாடுகள் ஒன்றுகூட வேண்டும் என்று இந்த அறிக்கை தெளிவாக வலியுறுத்துகிறது.

# 08 இந்தியப் பொருளாதாரம்

## ஏர் இந்தியாவின் மாபெரும் ஒப்பந்தம்

- ஏர் இந்தியாவை உலகத் தரம் வாய்ந்த விமான சேவை நிறுவனமாக மேம்படுத்தும் நோக்கில் 'விஹான் ஏ.ஐ' எனும் செயல்திட்டத்தை டாடா குழுமம் செயல்படுத்தி வருகிறது.

### தற்போதைய நிலை

- தற்போது ஏர்பஸ், போயிங் ஆகியவற்றின் தயாரிப்பில் 140க்கும் மேற்பட்ட விமானங்களை ஏர் இந்தியா இயக்கிவருகிறது.
- இவற்றில், பி777-200, பி777-300, பி787-800 ட்ரீம்லைனர் ஆகிய போயிங் விமானங்களும், ஏ319, ஏ320, ஏ320 நியோ, ஏ321 ஆகிய ஏர்பஸ் விமானங்களும் அடக்கம்.

### புதிய விமானங்கள்

- ஏர் இந்தியா வாங்கவிருக்கும் 470 விமானங்களில், 400 விமானங்கள் குறுகிய அமைப்பு அல்லது உள்ளே நீளவாக்கில் ஒற்றை நடைபாதை கொண்டவை; அருகிலுள்ள நாடுகளுக்கான பயணத்துக்கு ஏதுவானவை.
- 70 விமானங்கள் அகன்ற அமைப்பு அல்லது உள்ளே நீளவாக்கில் இரட்டை நடைபாதை கொண்டவை; தொலைதூரப் பயணத்திற்கு, முக்கியமாகச் சர்வதேசப் பயணத்துக்கு ஏதுவானவை.

### சில புதிய விமானங்களில் உள்ள வசதிகள் ஏர்பஸ் 350

- இதில் அதிகபட்சமாக 480 பயணிகள அமர முடியும், இந்த விமானத்தால் 18,000 கி.மீ. வரை இடைநிறுத்தாமல் பறக்க முடியும்.

### போயிங் 787 ட்ரீம்லைனர்

- 248 முதல் 336 பயணிகள் அமர முடியும்; இந்தக் குடும்பத்தின் சிறிய விமானத்தால் 13,530 கி.மீ. இடை நிறுத்தாமல் பறக்க முடியும்; பெரிய விமானத்தால் 11,730 கி.மீ. பறக்க முடியும்.

### போயிங் 777–9

- ஏர் இந்தியாவின் மிகப் பெரிய விமானமாக இதுவே இருக்கும். 426 பேர் அமர முடியும். இடை நிறுத்தாமல் 13,500 கி.மீ. பறக்கும் திறன் கொண்டது; 10% குறைந்த ஏரி பொருள் பயன்பாடும், 10% குறைந்த கார்பன் உமிழ்வும் கொண்டது.

### போயிங் 737 Max

- போயிங்கின் சிறந்த விமானமாக இது கருதப்படுகிறது; ஏ320 நியோ விமானத்தின் போட்டியாளர்; இதில் 230 பயணிகள் அமர முடியும்; இதனால் 6,500 கி.மீ வரை பறக்க முடியும்.

### இந்திய வருகை

- புதிய விமானங்களின் முதல் தொகுதி இந்த ஆண்டு இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.
- முதல் தொகுதியில், 25 பி737-800 ரக விமானங்களும், 6 ஏ350-900 ரக விமானங்களும் இருக்கும்.
- இருப்பினும், 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்தே விமானங்கள் பயன்பாட்டுக்கு வரும் வேகம் அதிகரிக்கும்.

### ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்

- ஒரு காலத்தில் தரமான சேவைக்கும் விருந்தோம்பலுக்கும் பெயர் பெற்றதாக ஏர் இந்தியா இருந்தது.
- அதன் நற்பெயர் 2000-த்தின் நடுப்பகுதியில் ஏற்பட்ட நிதிச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டது.
- ஏறக் குறைய 70 ஆண்டுகளுக்குப் பிறகு அரசிடமிருந்து இந்த நிறுவனம் 2022இல் டாடாவுக்கு விற்கப்பட்டது.
- இந்நிலையில், சமீபத்திய பெரும் ஒப்பந்தங்கள், இழந்த நற்பெயரை மீட்டெடுக்கவும், மீண்டும் வானத்தில் ஆதிக்கம் செலுத்தவும் ஏர் இந்தியாவுக்கு உதவும்.

## பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் வருகிறது கிரிப்டோ பரிவர்த்தனை

- கிரிப்டோ கரன்சியைப் பயன்படுத்தி பணமோசடியில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில், மத்திய அரசு கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனையை பணமோசடி தடுப்புச் சட்டத்துக்குள் கொண்டு வந்துள்ளது.
- மேலும், கிரிப்டோகரன்சி பரிவர்த்தனையை கையாளும் நிறுவனங்கள், அரசுக்கு தகவல் அளிக்க வேண்டிய நிறுவனங்களாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- அதன்படி, அந்நிறுவனங்கள் தங்கள் தளத்தில் நிகழும் அனைத்துப் பரிவர்த்தனைகளையும் முறையாக பதிவு செய்ய வேண்டும்.
- அந்தப் பரிவர்த்தனை குறித்த விவரங்களை, தேவைப்படும் சமயங்களில் அரசுக்கு வழங்க வேண்டும்.
- மத்திய அரசு, மெய்நிகர் டிஜிட்டல் சொத்துகள் பரிவர்த்தனை மூலமான வருவாய்க்கு 30 சதவீதம் வரி விதித்தது. இந்நிலையில் தற்போது கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனையை பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- மெய்நிகர் டிஜிட்டல் சொத்துகளை கையாளும் நிறுவனங்கள், அதன் வாடிக்கையாளர்கள் பற்றிய முழு விவரங்களை பெற வேண்டும் என்றும், ஏதேனும் சந்தேகத்துக்குரிய பரிமாற்றங்கள் நிகழ்ந்தால் அவை குறித்து முறையாக தகவல் அளிக்க வேண்டும்.

## இந்தியா - ஆஸ்திரேலியா 4 ஒப்பந்தங்கள்

- விளையாட்டு, புத்தாக்கம், ஆடியோ-விஷுவல் தயாரிப்பு, சூரிய எரிசக்தி உற்பத்தி ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த வழிவகுக்கும் 4 ஒப்பந்தங்கள் மாநாட்டின் போது கையொப்பமாகின.
- பசுமை எரிசக்தி, வர்த்தகம்-முதலீடு, பாதுகாப்பு, முக்கிய கனிமங்கள், உணவுப் பொருள்கள் விநியோகம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் நிலவி வரும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது

## இந்தியாவும் கச்சா எண்ணெய் இறக்குமதியும்

### என்ன

- கடந்த ஓராண்டில் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியில் பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. இந்தியா அதன் கச்சா எண்ணெய் தேவையில் 85 சதவீதம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது.
- சவூதி அரேபிய, ஈராக், அமெரிக்கா, ஐக்கியஅரபு அமீரகம் ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதில் முன்னிலையில் இருந்தன. தற்போது அந்நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி ரஷ்யா முதலிடம் பிடித்துள்ளது.

### அதனால்

- சென்ற ஆண்டு பிப்ரவரி நிலவரப்படி, ரஷ்யாவிடமிருந்து இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி வெறும் 2 சதவீதமாக இருந்தது. ஆனால், இப்போது அது 35 சதவீதமாக உயர்ந்துள்ளது.

### ஏன்

- கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கியதையடுத்து ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடைவிதித்தது.
- இந்தத் தடையால் நெருக்கடிக்கு உள்ளான ரஷ்யா, தன் நாட்டு கச்சா எண்ணெய்யை சலுகை விலையில் வழங்குவதாக அறிவித்தது.
- அதுவரையில், ரஷ்யாவிடமிருந்து 2% அளவிலே கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்துவந்த இந்தியா, ரஷ்யாவின் சலுகை விலை அறிவிப்புக்குப் பிறகு அந்நாட்டிலிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யத் தொடங்கியது.

### தாக்கம்

- பிப்ரவரி மாதம் இந்தியா ரஷ்யாவிடமிருந்து நாளொன்றுக்கு 16 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது.
- ஈராக்கிடமிருந்து 9.39 லட்சம், சவூதி அரேவியாவிடமிருந்து 6.47 லட்சம், ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து 4.04 லட்சம், அமெரிக்காவிடமிருந்து 2.48 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்துள்ளது.
- கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், சவூதி அரேபியாவிடமிருந்து இறக்குமதி 16 சதவீதமும், அமெரிக்காவிடமிருந்து இறக்குமதி 38 சதவீதமும் குறைந்துள்ளது.

# வேளாண் நிதிநிலை அறிக்கை

- இந்தியாவிலேயே முதன்முதலாக வேளாண்மைக்கு என்று 2011-12 நிதியாண்டில் கர்நாடக மாநில அரசு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தது.
- அதனைத் தொடர்ந்து 2013-14 முதல் ஆந்திரப்பிரதேச மாநில அரசும் வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து வருகிறது.
- தமிழ்நாடு மாநில அரசும் 2021-22 முதல் இணைந்துள்ளது.

## கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்

1. பிரதம மந்திரி கௌரவ உதவித்தொகை திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஆண்டுக்கு ரூ.6,000 தருகிறது. அதோடு தமிழ்நாடு மாநில அரசும் இணைந்து ரூ.6,000 தருவதற்கு பரிசீலனை செய்ய வேண்டும்.
2. தமிழ்நாட்டில் வேளாண்மையை மேற்கொள்ளும் 30 சதவீத குத்தகை விவசாயிகளுக்கு அரசின் மானியம், பயிர்க்கடன் அல்லது உதவித்தொகை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.
3. விவசாயத்தின் இரண்டாம் கட்ட செயல்பாடுகளான தேனீ வளர்ப்பு, வேளாண் சுற்றுலா, உணவு பதப்படுத்துதல் போன்றவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.
4. காலநிலை மாற்றம் என்பது விவசாயத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவாகி வருகிறது. அதனை ஓரளவேனும் சமாளிக்கும் வகையில் வெப்பத்தைத் தாங்கி வளரும் பயிர் ரகங்கள், அதிக விளைச்சல் தரும் ரகங்கள் போன்றவற்றில் ஆராய்ச்சியை மேம்படுத்த வேண்டும்.
5. இனிவரும் காலங்களில் கால்நடைகளின் தீவனங்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே அதனை நிவர்த்தி செய்யும் வகையில் செயல்திட்டம் அறிவிக்கப்பட வேண்டும்.
6. இயற்கைப் பேரிடர் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களைக் கண்டறிந்து நிவாரணம் வழங்குவதற்கு வசதியாக, குஜராத் மாநிலத்தைப் போல தற்காலிக மாநில அரசின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.
7. வேளாண் தொழில் முனைவோரை விவசாயிகளோடு இணைக்கும் வகையில் அரசு புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

   அவற்றின் மூலம் போதிய சேமிப்புக் கிடங்கு வசதி, மதிப்புக் கூட்டல், சந்தை வசதி, உரப் பரிந்துரை, பாசன வசதி, வேளாண் இயந்திரப் பயன்பாடு போன்றவை மேம்படும்.
8. டிஜிட்டல் விவசாயத்திற்கு முன்னுரிமை தந்து அவற்றோடு விவசாயிகளுடனான தொடர்பை மேம்படுத்த வேண்டும்.

## பட்ஜெட்டில் இடம்பெற வேண்டியவை

1. தமிழ்நாட்டின் உணவுச் சந்தையில் அதிகம் விற்பனையாகும் அரிசி, ஆந்திரம் மற்றும் கர்நாடகப் பொன்னி ரகம் ஆகும். நம் மாநிலத்தில் விளையும் அரிசிக்கு வெளி மாநிலத்தவர் ஏங்கிய காலம் முடிந்தது. இந்தச் சூழலில், இல்லம் தேடிக் கல்வி என்பதுபோல், வயல்தேடி விவசாயம் வரவேண்டும்.
   - தரம் உயர்ந்த அரிசியை உற்பத்தி செய்வதற்கான வேளாண் கல்வி அவசியம். மண் வளம், மண்ணுக்கேற்ற பயிர்ச் சாகுபடி ஆய்வு நடத்த வேளாண் மருத்துவ மையங்கள் (Agri-clinics) தேவை.
2. இது பேரிடர்களின் காலம். அதன் விளைவாக விவசாயம் பெரும் சரிவைச் சந்திக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த இரண்டு குறுவைகளிலும் பயிர்க்காப்பீடு இல்லை. மத்திய அரசை நம்பாமல் மகாராஷ்டிரம் போன்ற மாநில அரசுகளே தனிப் பயிர்க் காப்பீடு திட்டத்தை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு அரசும் பயிர்க் காப்பீட்டை உத்தரவாதப்படுத்த வேண்டும்.
3. விவசாயத்தின் வளர்ச்சி என்பது வெறும் உற்பத்திப் பெருக்கம் அல்ல, இதற்குக் காரணமான உழவர்களின் வருவாயை உயர்த்துவதும் ஆகும். எம்.எஸ்.சுவாமிநாதன் குழு கொள்முதல் விலையை 2006 ஆம் ஆண்டிலேயே பரிந்துரைத்தது.
   - திமுக தனது தேர்தல் அறிக்கையில் நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2,500 ரூபாயும், கரும்புக்கு டன்னுக்கு 4,000 ரூபாயும் வழங்குவதாகக் கூறியது உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. எனவே, அரசு தனது வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்.
4. இயற்கை வேளாண்மைக்கு ஆதரவான வலுவான களப் பிரச்சாரம் தேவை.
5. வேதி உர உற்பத்தி மற்றும் பகிர்வுகளைத் தமிழக அரசே நேரடியாக நிர்வகிக்க வேண்டும்.
6. காரீஃப், ராபி போன்றவை உழுகுடி மக்களின் புழங்குச் சொற்கள் அல்ல. மதராஸ் மாகாணம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதுபோல் குறுவை, சம்பா என உரிய தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட வேண்டும். அதிகாரப்பூர்வ அறிவிப்புகளில் அவையே இடம்பெற வேண்டும்.

7. பருவம் தவறிய மழையால் நெல் கொள்முதலில் ஈரப்பதம் நிரந்தரமாகிவிட்டது. செயற்கைக்கோள்களின் உதவியுடன் இயன்றவரை துல்லியமாகக் கணித்து, ஈரப்பதக் கொள்முதல் தளர்வை உடனே மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.
   - உலர் களங்கள், நெல் கிடங்குகளை அதிகப்படுத்தி நடமாடும் கொள்முதல் நிலையங்களை அரசு செயல்படுத்த வேண்டும். பணப்பட்டுவாடா ஊழலில் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை தேவை.
8. மணல் கொள்ளையால் ஆற்றங்கரைகள் வலுவிழந்துவிட்டன. மணல் ஒரு கனிமம் என்ற முறையில் மணல் கொள்ளையைத் தடுக்க வாரியம் உருவாக்க வேண்டும்.
9. பயறு வகைகள், நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட சிறுதானியம் மற்றும் மாற்றுப் பயிர்களை அரசே நேரடியாகச் சந்தைப்படுத்த வேண்டும்.
10. நீர்க்கட்டமைப்புகள், தூர்வாரும் பணிகளைப் பிப்ரவரி முதல் வாரமே ஆரம்பிக்க வேண்டும்.
11. 1877 தாது வருடப் பஞ்சத்தில்தான் பல ரயில்வே தடங்கள் உருவாக்கப்பட்டன. பட்டினியை வெல்ல எடுக்கப்பட்ட முயற்சி அது. அதேபோல 100 நாள் வேலைத்திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க இத்தகு தலைப்புகளிலும் திட்டமிடலாம்.
12. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, சிரவி என்ற பறவை நெற்பயிர்களுக்கு ஏற்படுத்திய சேதம் குறித்துக் கவலைப்பட்டார். இப்போது காட்டுப் பன்றிகள் போன்ற வனவிலங்குகள் ஏற்படுத்தும் சேதத்தைத் தவிர்க்கச் சட்ட நடவடிக்கை தேவை.
13. கடந்த நிதிநிலை அறிக்கைகளில் அறிவிக்கப்பட்ட திருச்சி-நாகப்பட்டினம் வேளாண் தொழில்நுட்பப் பூங்கா, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான தொழிற்பேட்டை உள்ளிட்டவை விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும்.

## தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை - 2023

- ✓ முதல் வேளாண் நிதிநிலை அறிக்கையில் இக்கொள்கை சார்ந்து அறிவிப்பு செய்யப்பட்டது.
- ✓ தற்போது வெளியிடப்பட்டுள்ளது.
- ✓ அங்கக சான்றளிப்புக்கென தனித்துறை உருவாக்கப்படும்.

### புள்ளியியல் விவரங்கள்

- ✓ தேசிய அளவில் அங்கக வேளாண்மையில் தமிழ்நாடு 14-ஆவது இடம்.
- ✓ 2020-21-ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 223 மெட்ரிக் டன் அங்ககப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ.108 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

### நோக்கங்கள்

- ✓ மண்வளம், வேளாண் சூழலியல், பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றை பாதுகாத்தல்.
- ✓ அவற்றை நிலைத்திருக்கச் செய்தல்.
- ✓ ஆரோக்கியமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உணவை வழங்குதல்.

### கொள்கைகள்

- ✓ சந்தை மற்றும் சான்றிதழ் சார்ந்த ஆலோசனை வழங்குதல்,
- ✓ ஏற்றுமதியை ஊக்குவித்தல்
- ✓ விவசாயிகளின் வருவாய் அதிகரித்தல்.
- ✓ பயிர்க்கடன் வழங்குவது அரசால் ஊக்கப்படுத்தப்படும்.
- ✓ மேலும் இயற்கை பேரிடர் காலங்களில் ஏற்படும் இழப்புகளுக்கு பயிர்க் காப்பீடு மூலம் உதவி அளிக்கப்படும்.

### முக்கிய அம்சங்கள்

#### 1. இணையவழி-ஒற்றைச்சாளர முறை

- ✓ அங்கக வேளாண்மையில் முக்கிய அம்சம் சான்றிதழ் வழங்குவது. அதனை எளிதாக்க ஒற்றைச் சாளர முறை செயல்படுத்தப்படும்.
- ✓ விவசாயிகளின் பதிவு, சான்றளிப்பு, விரிவான தரவுதளம் போன்றவை இணையவழியில் பராமரிக்கப்படும்.

## 2. கால்நடை, கோழிவளர்ப்பு

- ✓ அங்கக சான்றளிப்பு துறை மூலம் கால்நடை, கோழி, தேனீ, மீன், காளான் வளர்ப்புகள், பசுமைக்குடில் சாகுபடி ஆகியவற்றின் உற்பத்திக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
- ✓ மானாவாரி விவசாயக் குழுக்களை அங்கக வேளாண்மைக் குழுக்களாக மேம்படுத்தப்படும்.

## 3. அங்கக வேளாண் மண்டலங்கள்

- ✓ அங்கக வேளாண்மைக் குழுக்களை ஒருங்கிணைத்து அங்கக வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்படும்.
- ✓ கிராமப்புற இளைஞர்கள், பண்ணை மகளிர், மாணவர்களுக்கு அங்கக வேளாண் பயிற்சி அளிக்கப்படும்.

## 4. பள்ளிகளில் தோட்டங்கள்

- ✓ அங்கக வேளாண்மை, பல்லுயிர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வ, ஆர்வத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அங்ககக் காய்கறித் தோட்டம், பழத்தோட்டம் அமைக்க முறை செய்யப்படும்.

## 5. உணவுத் திருவிழாக்கள்

- ✓ ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அங்கக உணவுத் திருவிழாக்கள் நடத்தப்படும். இத்துறையின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. மாநில அளவிலான மரபணு வங்கி

- ✓ அனைத்து பயிர்களின் பாரம்பரிய நாட்டு விதைகளைப் பாதுகாக்க மாநில அளவிலான மரபணு வங்கி நிறுவப்படும்.

## 7. உதவி மையம்

- ✓ அங்கக வேளாண் நடைமுறைகள், சான்றளிப்பு போன்றவைகளுக்கு வழியாட்ட தனி உதவி மையம் ஏற்படுத்தப்படும்.

## 8. நிதியுதவி

- ✓ இடுபொருள் உற்பத்தியாளர்கள், உணவை பதப்படுத்துவோர், அங்ககப் பொருள் வர்த்தகர்கள் ஆகியோருக்கு வங்கிகள், நபார்டு போன்ற நிறுவனங்கள் மூலம் நிதியுதவி அளிக்கப்படும்.

## 9. மின் வணிகம்

- ✓ மின் வணிகம், இணையதளம், தேசிய மின்னணு வேளாண்-சந்தை, கைப்பேசி செயலிகள், சந்தைத் தளங்கள் ஆகியவற்றின் வாயிலாக அங்ககத் தயாரிப்புகள் சந்தைப்படுத்தப்படும்.

## 10. உயர்மட்ட ஆய்வுக்குழு

- ✓ அங்கக வேளாண் நிலை குறித்து, வேளாண் கொள்கை குறித்து சீராய்வு செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக்குழு அமைக்கப்படும்.
- ✓ செயல்பாடு மற்றும் திட்டங்களை இறுதிசெய்ய வேளாண் துறைச் செயலாளர் தலைமையில் வழிகாட்டுதல் குழு
- ✓ மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைத்து வேளாண்துறை, கால்நடை, தோட்டக்கலை, மீன், கதர் போன்ற துறைகளை ஒருங்கிணைத்து அங்கக வேளாண் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## முக்கியத்துவம்

- ✓ இந்தக் கொள்கை 5 ஆண்டுகளுக்குப் பிறகு சீராய்வு செய்யப்படும்.
- ✓ தற்போது 31,629 ஹெக்டேர் நிலப்பரப்பில் அங்கக வேளாண்மை செய்யப்படுகிறது.
- ✓ எதிர்காலத்தில் இதனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2023-24

## மகளிர் உரிமை

- மகளிர் உரிமைத்தொகை மாதம் ரூ.1000
- மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் ரூ.30,000 கோடி
- புதுமைப்பெண் திட்டத்திற்கு ரூ.350 கோடி
- பெண் தொழில் முனைவோர், புத்தொழில்களை தொடங்க சிறப்பு புத்தொழில் இயக்கம்

## கல்வி–இளைஞர் திறன் மேம்பாடு

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ரூ.500 கோடி
- 18 இலட்சம் தொடக்கப் பள்ளி மாணவர்கள் பயன் பெறுவர்
- ரூ.1,500 கோடியில் பேராசிரியர் க.அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்
- இளைஞர்களை உயர்த்தும் நான் முதல்வன் திட்டம் ரூ.50 கோடி
- ரூ.25 கோடியில் தொழிற்சாலை திறன் பள்ளிகள்
- ரூ.120 கோடியில் தமிழ்நாடு உலகளாவிய புதுமை முயற்சிகள் & திறன் பயிற்சி மையம் (TN-WISH)
- ரூ.2,783 கோடியில் 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் திறன்மிகு மையங்களாக தரம் உயர்வு

## சமூக நீதி (Social Justice)

- அண்ணல் அம்பேத்கர் சிந்தனைகள் மொழிபெயர்ப்பு ரூ.5 கோடி
- அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ரூ.100 கோடி
- உயிர் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்கள் குடும்பத்திற்கு கருணைத்தொகை ரூ.40 லட்சம்
- கூடுதலாக 1 இலட்சம் பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியம்

## விவசாயிகள் நலன்

- விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயிர் கடன் ரூ.14,000 கோடி
- சிறப்பாக செயல்படும் அங்கக விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருது
- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் – ரூ.230 கோடி; 2,504 கிராம ஊராட்சிகள்
- ரூ.2,337 கோடியில் விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு
- 23 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் ரூ.6,536 கோடி

## தொழில் வளர்ச்சியும் வேலைவாய்ப்பும்

- விருதுநகர், வேலூர், கள்ளக்குறிச்சி, கோயம்புத்தூரில் புதிய சிப்காட் தொழில் பூங்காக்கள் 22,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் ரூ.410 கோடி
- ரூ.77,000 கோடியில் 14,500 மெகாவாட் 15 புதிய நீரேற்று மின்திட்டங்கள்

## எழில்மிகு நகரங்களும் வளமிகு வட்டாரங்களும்

- ரூ.800 கோடியில் குளங்கள், ஊரணிகள் புதுப்பித்தல்
- ரூ.2000 கோடியில் முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 5,145 கி.மீ சாலை பணிகள்
- ரூ.500 கோடியில் 1,000 புதிய பேருந்துகள் 500 பழைய பேருந்துகள் புதுப்பிப்பு

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

- கடல் அரிப்பு தடுக்க, மாசு குறைக்க, உயிரியல் பன்முகத் தன்மை பாதுகாக்க ரூ.2000 கோடியில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்


## தரணிபோற்றும் தமிழர் பண்பாடு

- தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம்
- ரூ. 485 கோடியில் பழனி, திருத்தணி, சமயபுரம் ஆகிய கோயில்களில் பெருந்திட்டப் பணிகள்

## மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கான சிறப்புத் திட்டங்கள்

- ரூ.8,500 கோடியில் மதுரை மெட்ரோ இரயில் திட்டம்
- ரூ.7 கோடியில் மதுரை மல்லிகைக்கு ஒரு இயக்கம்
- ரூ.1,800 கோடியில் விருதுநகரில் ஜவுளிப்பூங்கா
- விருதுநகர் மாவட்டத்தில் சிப்காட் தொழில் பூங்கா
- கங்கை கொண்டான் சிப்காட் தொழிற்பேட்டையில் 1,500 பணியாளர்களுக்கு தொழிலாளர் குடியிருப்புகள் ரூ.50 கோடியில்
- திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா
- ரூ.15 கோடியில், தூத்துக்குடி மாவட்டம் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியில் பனை ஆராய்ச்சி நிலையம்
- தேனி மாவட்டத்தில் ரூ.130 கோடியில் வாழைத்தொகுப்பு வளர்ச்சித் திட்டம்
- இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களில் – மிளகாய் மண்டலம்

# தமிழக பட்ஜெட் 2023 - 2024




## முக்கிய அம்சங்கள்

- தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ 1000 உரிமைத் தொகை
- சென்னை, தாம்பரம், ஆவடி உள்ளிட்ட 7 நகரங்களின் முக்கிய இடங்களில் வைஃபை இணைய வசதி
- கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம்
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ30,000 கோடி வங்கிக் கடன்
- சேலத்தில் ரூ880 கோடியில் புதிய ஜவுளிப் பூங்கா
- மொழிப்போர் தியாகிகள் தாளமுத்து, நடராஜன் ஆகியோருக்கு சென்னையில் நினைவிடம்
- தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு நடத்தப்படும்.
- சங்கமம் கலை விழா, எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.
- தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- சென்னை கிண்டியில் நிகழாண்டில் கலைஞர் நினைவு பன்னோக்கு மருத்துவமனை திறக்கப்படும்.
- பள்ளிகளுக்கு ரூ1500 கோடியில் புதிய உள்கட்டமைப்பு வசதிகள்.

- வரும் ஆண்டிலும் சர்வதேச புத்தகக் காட்சி நடத்தப்படும்.
- ஆதிதிராவிடர் உள்பட பிற துறைகளின் பள்ளிகள், பள்ளி கல்வித்துறையின் கீழ் கொண்டு வரப்படும்.
- மதுரையில் கலைஞர் நூலகம் ஜூன் மாதம் திறக்கப்படும்.
- 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், திறன்மிகு மையங்களாக தரம் உயர்த்தப்படும்.
- சென்னையில் அதிநவீன விளையாட்டு நகரம் உருவாக்கப்படும்.
- தாழ்த்தப்பட்டோர் பொருளாதாரத்தை உயர்த்த அம்பேத்கர் பெயரில் தொழில் திட்டம்
- அயோத்திதாசர் பெயரில் ரூ1000 கோடியில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்
- பெண்களுக்காக பிரத்யேகமாக சிறப்புத் தொழில் இயக்கம்
- ரூ 2000 கோடியில் தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்
- ஈரோடு மாவட்டத்தில் பெரியார் பெயரில் வனவிலங்கு சரணாலயம்
- மரக்காணத்தில் பன்னாட்டுப் பறவைகள் மையம்
- 10000 சிறிய நீர்நிலைகள் – குளங்கள் ரூ800 கோடியில் புதுப்பிப்பு
- ரூ7145 கோடியில் ஒகேனக்கலில் 2ஆவது கூட்டுக்குடிநீர் திட்டப்பணி
- 10 இடங்களில் சிறிய கைத்தறிப் பூங்காக்கள்
- ஈரோடு, செங்கல்பட்டு, நெல்லையில் புதிய ஐ.டி.பூங்காக்கள்

## தமிழக வேளாண் பட்ஜெட் 2023 - 24

- தமிழக சட்டப்பேரவையில் 2023-24 நிதியாண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்ஆர்கே பன்னீர் செல்வம் தாக்கல் செய்தார்.
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு ரூ.530 கோடி நிதி வழங்கப்படும்.
- கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை, கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, தஞ்சாவூர் பேராவூரணி தென்னை, மூலனூர் குட்டை முருங்கை, சாத்தூர் வெள்ளரி, தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சு வெல்லம், விளாத்திகுளம் மிளகாய், கடலூர் கோட்டிமுளை கத்திரி, மதுரை செங்கரும்பு, சிவகங்கை கருப்புகவுணி அரிசி ஆகிய 10 பொருட்களுக்கு இந்த ஆண்டில் புவிசார் குறியீடு ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் பெற திட்டமிடப்பட்டுள்ளது.
- 25 உழவர் சந்தைகளில் தொன்மைசார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்படும்.
- விவசாயிகள் அனைத்து விவசாய சேவைகளுக்கும் ஒரே இடத்தில் மின்னணு முறையில் விண்ணப்பிக்க வசதியாக 385 வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் ரூ.2 கோடியில் இ-சேவை மையங்கள் அமைக்கப்படும்.
- விலை ஆதரவு திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் மெட்ரிக் டன் உளுந்தும், 12 ஆயிரம் மெட்ரிக் டன் பச்சைப்பயிறும் குறைந்தபட்ச ஆதரவு விலையில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும்.
- கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், கரும்பு போன்ற பயிர்களை சாகுபடி செய்து மாநில அளவில் அதிக விளைச்சல் பெறும் விவசாயிக்கு தலா ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன் 'நம்மாழ்வார்' பெயரில் விருது வழங்கப்படும்.
- டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள், எந்திரக் கலப்பைகள், கரும்பு அறுவடை இயந்திரங்கள், நெல் அறுவடை இயந்திரங்கள் ரூ.25 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விடப்படும்.
- 2,504 கிராமங்களுக்கு ரூ.43 கோடி மானியத்தில் 5 ஆயிரம் பவர்டில்லர்கள் வழங்கப்படும்.
- அரசு மற்றும் தனியார் பங்களிப்போடு தேனி மாவட்டத்தில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் வாழை தொகுப்பு வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும்.
- தேனி மாவட்டத்தில் வாழை தொகுப்பு வளர்ச்சித் திட்டம் ரூ.130 கோடி மதிப்பீட்டில் அரசு, தனியார் பங்களிப்பில் செயல்படுத்தப்படும்.
- திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களை ஒருங்கிணைத்து எண்ணெய் வித்துக்கள் சிறப்பு மண்டலம் உருவாக்கப்படும்.
- சிறுதானியங்களை தொகுப்பாக சாகுபடி செய்து மதிப்புக்கூட்டி, லாபகரமான விலைக்கு விற்பனை செய்யும் வகையில் 70 சதவீத மானியம் வழங்கப்படும்.

- தமிழகத்தின் 2,504 கிராம ஊராட்சிகளில் ரூ.230 கோடியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் தென்னை இல்லாத 300 குடும்பங்களுக்கு தலா 2 மரக்கன்றுகள் என 15 லட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படும்.
- நீலகிரி, தருமபுரி மாவட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு 2 கிலோ கேழ்வரகு வழங்கப்படும். அரசு நிறுவனங்கள், கல்வி நிலைய விடுதிகளில் சத்துள்ள சிறுதானிய உணவு அளிக்கப்படும்.
- நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் மரபுசார் நெல் விதைகளை மானிய விலையில் வழங்க ரூ.50 லட்சம் ஒதுக்கப்படும்.

## ரூபாயில் வர்த்தகம் செய்ய 18 நாடுகளுக்கு...

- சர்வதேச வர்த்தகத்தை இந்திய ரூபாயில் மேற்கொள்வதற்கு, 18 நாடுகளைச் சேர்ந்த வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.
- இந்திய ரூபாயில் வர்த்தகம் மேற்கொள்வதற்கு வசதியாக, இந்த வங்கிகளுக்கு, சிறப்பு வோஸ்த்ரா கணக்குகளை துவங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### என்ன பயன்?

- இதன் வாயிலாக, சர்வதேச வர்த்தகத்தில் டாலருக்கு மாற்றாக இந்திய ரூபாயை சர்வதேச கரன்சியாக்குவதற்கான முயற்சி தீவிரமடையும்.
- இந்திய ரூபாய் மதிப்பின் அடிப்படையிலேயே ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கட்டணங்களை செலுத்த முடியும்.
- இதை செயல்படுத்துவதற்காகவே, வெளிநாடுகளைச் சேர்ந்த வங்கிகளுக்கு, வோஸ்த்ரோ கணக்குகளை துவக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

**எந்தெந்த நாடுகளுக்கு அனுமதி**

- போட்ஸ்வானா, பிஜி, ஜெர்மனி, கயானா, இஸ்ரேல், பிரிட்டன், கென்யா, மலேஷியா, மொரீஷியஸ், மியான்மர், நியூசிலாந்து, ஓமன், ரஷ்யா, சிஷெல்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தான்சானியா, உகாண்டா.

### வோஸ்த்ரோ கணக்கு

- வோஸ்த்ரோ என்றால் லத்தீன் மொழியில் உங்களுடையது என்று பொருள்.
- வோஸ்த்ரோ கணக்கு என்றால், வெளிநாட்டு வங்கி ஒன்றின் பணத்தை உள்நாட்டு வங்கி தன் கணக்கில் வைத்துள்ளது என்பது பொருள்.
- அதாவது, உங்களுடைய பணத்தை நாங்கள் வைத்துள்ளோம் என்பதை குறிக்கும் சொல் தான் வோஸ்த்ரோ.
- சர்வதேச வர்த்தகத்தை டாலரில் மேற்கொள்ளாமல், ரூபாயில் மேற்கொண்டால் நம் நாட்டுக்கு லாபகரமாக இருக்கும் என்பதற்காக இந்த ஏற்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.
- வங்கிகளின் வாடிக்கையாளர்களாக இருக்கும் ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள் முழுதும் இந்திய ரூபாயிலேயே தங்கள் பரிவர்த்தனையை முடித்துக் கொள்ளலாம்.

## விருதுநகரில் மெகா ஜவுளி பூங்கா

- நாட்டின் முதலாவது 'பி.எம்.மித்ரா' மெகா ஜவுளி பூங்காவை விருதுநகர் மாவட்டம் இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில் அமைய உள்ளது.
- 1,052 ஏக்கர் சிப்காட் நிலத்தில் ரூ.2,000 கோடியில் அமையும் இந்த மெகா ஜவுளிப் பூங்காவால் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- நம் நாட்டின் கைத்தறி துணி வர்த்தகத்தில், தமிழகம் மூன்றில் ஒரு பங்கு வகிக்கிறது.
- பெருமளவு பருத்தி நூல் தயாரிப்பு, ஏற்றுமதி செய்யும் மாநிலமாக இருப்பதால் இந்திய நாட்டின் நூல் களஞ்சியம் என்று அழைக்கப்படுவதோடு, நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, ஆயத்த ஆடை, ஆடை தயாரிப்பிலும் முதன்மையான மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.
- விவசாயத்துக்கு அடுத்தபடியாக ஜவுளித் தொழில் நேரடியாக 4 கோடி பேருக்கும், மறைமுகமாக 6 கோடி பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கிறது.